Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 20.00

දිනමුරසු වාරමලර් ஒக். 26 - நவ. 01, 2006

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 684


## இணைந்த வடக்கு - கிழக்கே தமிழ் பேசும் மக்களின் தாயகம்



## ஜெனீவாவில் பேச்சு! களத்தில் தாக்குதல் வீச்சு!!







மாதவன் காட்டில் மகிழ்ச்சி மழை!





சினி விருந்து



மரம் - போவோம்! ரசிப்போம்!!



தாயாகிறார் பூஜா!

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## ஆன்மீகம்


### உள்ளத்தில் நின்றருள் செய்வாய்!

புறத்தூய்மைகளை அகற்றி விடுதலானது மிகச் சுலபம். ஆனால் அகத்தூய்மையான உள்ளத்தைத் தூய்மையாக்கிக் கொள்வதற்காக எத்தனை முயற்சிகள் எடுத்தாலும், எங்கோ ஓரிடத்தில் மாசு படிந்திருப்பதால், இறை அருள் பெற வாய்ப் பேதும் இல்லாமற் போய்விடுகிறது என்னும் கருத்து அறிஞர் கள் கூறும் பொதுவானதொன்றே. ஆயினும் இறைவனை தனக்குள்ளேயே காணும் ஆற்றல் பெற்ற ஞானியார்களின் செயற்பாடுகள் வேறுபட்டதாகவே இருக்கும். அந்த வகையில் ஆலயங்களைச் சுத்தப்படுத்தித் தூய்மையாக வைத்திருப் பதை விட உள்ளங்களைச் சுத்தப்படுத்தி வைத்திருப்பதில் பெருமுயற்சி எடுத்து அருள் பெற்றவர்களே இறை அருள் பெற்றவர்களாவர் என்பதை பின்வரும் பாடல் வரிகளில் மாணிக்கவாசகர் விளக்கியிருப்பது நோக் கத்தக்கது.

"தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒறுத்தற்றே வெறுத்திடவே"

உள்ளத்தில் இறைவன் குடியிருந்தால், உள்ளமே ஆலயமாகி விடுமே! உள்ளம் ஆலயமாக வேண்டுமாயின் உள்ளத்தில் தீய எண்ணங்கள் வேண்டாமே?

-என். எஸ். ராஜா, தம்பலகமம்.



### நிறைவான வாழ்வு நிச்சயம்!

அவரவர் கிரியைகளுக்கு ஏற்ப அவர வருக்கு அளக்கப்படும். நன்மையாயின் நன்மையும், தீமையானால் தீமையும் விளையும். தேவனாகிய கர்த்தர் மீது இதய சுத்தியுடன் விசுவாசம் கொண்டு அவர் தம் கற்பனைகளுக்கு ஏற்ப நடப்பவன் விழுந்தாலும் எழும்புவான். வீண்போக மாட்டான். மாறாக நடப்ப வனோ விழுவான். அவனால் எழும்ப முடியாது.

ஆம், தேவனின் பிள்ளைகளே! கர்த்தர் நாம் நல் வழியில் நடப்பதையே விரும்புகிறார். அவர் அன்புக்கும் கருணைக்கும் உரியவர்களாக நாம் நடந்தால் நமக்கு துன்பம் வந்தாலும் சூரியனைக் கண்ட பனி போல் மறைந்து விடும். வல்லமையுள்ள தேவன் எதுவும் வல்ல வர். எல்லாம் வல்லவர். அந்த எல்லாம் வல்ல கர்த்தரை துதிப்பவர்களுக்கு நிறைவான வாழ்வு நிச்சயம் உண்டு.

-எம்.ஏ.எஸ்.சண்முகம், வத்தளை.

### நோன்பு

நோன்பு, இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் நாலாம் இடத்தை வகிக்கிறது. இது மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதன் முதல் பிரிவு - நோன்பாளிக்கு 'ரஹ்மத்' எனும் அருளுக்குரிய பகுதியாகவும், இரண்டாம் பிரிவு பாவ மன்னிப்புக்காகவும், மூன்றாம் பிரிவு - நரக விடுதலையளிக்கவும் உள்ளது.

நோன்பை விசுவாசிகளின் மீது விதியாக்கிய அல்லாஹ் நோன்பின் தத்துவம் பற்றி பின்வருமாறு விளக்குகிறான்:

"விசுவாசிகளே! நீங்கள் தீயவைகளை விடுத்து நல்லவைகளைக் கொண்டு பக்தியாளர்களாக ஆவதற்காக உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது விதியாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் நோன்பு விதியாக் கப்பட்டுள்ளது" என்று.

நோன்பானது அல்லாஹ் பற்றிய சிந்தனையை அவன் அடியானுக்கு ஏற்படுத்தி வாழ்க்கையில் நடக்கும் சகல விடயங்களுக்கும் நாளை மறுமையில் அல்லாஹ்விடம் பதில் சொல்ல வேண்டுமென்ற உணர்வை உள் ளத்தில் ஏற்படுத்துகிறது.

இஸ்லாமிய நம்பிக்கைகளும் கிரியைகளும் மனிதனின் உள்ளத்தையும் உடலையும் பக்குவப்படுத்தி ஈருலகிலும் இன்பகரமான வாழ்வுக்கு வழிவகுக்கிறது. இந்த அடிப்படையில் அமைந்ததே நோன்பு.

-எம். சீ. கலீல், கல்முனை - 05

---

### கவிதைப் போட்டி இல.681



பரிசுக்குரிய கவிதை

#### தேடும் சமாதானம்

யுத்தம் - எம்மை
எங்கள் மண்ணை
விட்டும்
துரத்திவிட்டாலும்,
நாங்கள்
என்றும் - எங்கும்
தேடி அலைவது
நிரந்தர சமாதானத்தையே.


– திருமதி. பைசல்,
கொழும்பு–14.

#### இனிது!

பல் குழல் இனிது!
கிளைமோர் இனிது!
என்பர்,
தம் மழலைகளில் அபயக்குரல்
கேளாதோர்!

–எம், சண்முகராஜா,
கொழும்பு–11.

## கவிதைப் போட்டி இல.684



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல்,
தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 31.10.2006.

கவிதைப் போட்டி இல.684
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல–1772, கொழும்பு.

#### குடிநீர்ப் பஞ்சம்

இந்தப்
பூமியில்
மூன்று மடங்கு
நீரிருந்தும்
குடிநீர்ப்பஞ்சம் - நீர்
ஒருமடங்காய்
இருந்திருந்தால் - எம்
நிலைமைகள்
என்னவாகும்?

–பொன் நவநீதன்,
பாண்டியூர்

#### ஏக்கம்

வரண்ட பிரதேசத்தில்,
வற்றிய வயிறுமாய்....,
வாடிய முகமுமாய்....,
தாகத்திற்கு தவிப்போடு....!
தண்ணீர் ஏந்த...!
ஏக்கத்துடன் நடக்கும்,
பிஞ்சுப் பாதங்கள்.

–தி. தர்சினி,
கொழும்பு–13.

#### எங்கள் வாழ்க்கை

தண்ணி கொண்டு
வரப் போறோம்
தாகத்துக்குத் தாங்க.
நாங்க ரெண்டு
பேரும் உடன்
பிறப்புத் தாங்க
யுத்தம் வந்தாலே...
எங்க ஊரிலே...
அணியாயமா - பல
பேரு செத்துப் போனாங்க
இப்ப நாங்க இப்படித்தான்
கஷ்டப்பட்டு
வாழுறோங்க...

–ஜிந்து,
கிண்ணியா.5

#### ஓட்டம்

அங்கும் இங்கும்
நாளாந்தம் நிகழும்
கொடூரங்களுக்கஞ்சி
கூட்டைவிட்டு
காட்டுக் கோடும்
குழந்தைச் செல்வங்கள்.

–அ.சந்தியாகோ,
கண்டி.

#### தாகம்

விண்தாகம் தீர்ந்து
மண் செழித்த போதும்
எம் தாகம் தீரவில்லை!
புண் பெற்றும்
புறமுது கோடியும்
கண் கெட்டு
கபோதியான போதும்
எம் தாகம் தீரவில்லை!

–நா.ஜெயபாலன்,
பிபிலை.

#### தவிப்பு

காடு மேடெல்லாம்
கால் நடையாக கடந்து
செல்கின்றோம் - நம்
நாட்டில்
இரத்த வெள்ளத்தை தவிர
மற்ற வெள்ளத்தைக்
காண முடியவில்லையே...!

–அ. ரவி,
மட்டக்களப்பு.



## உங்கள் பக்கம்

### கல்முனை மாநகர சபை அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் மாட்டிறைச்சி விற்பனை செய்வோர் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகளை எங்கு கொண்டு சென்று அறுப்பது என்றோர் பிரச்சினைக்கு இப்போது ஆளாகியுள்ளனர்.

காரணம், கல்முனையில் முன்பு இயங்கி வந்த மாடறுக்கும் மடுவம் தற்போது மூடப்பட்டுள்ளதே.

இந்நிலை தொடர்ந்து நீடிப்பதால் தூர இடங்களில் உள்ள மாடறுக்கும் மடுவங்களுக்கு மாடுகளைக் கொண்டு சென்று அறுத்து வருவதில் இப்பகுதி இறைச்சிக் கடைக்காரர்கள் எதிர்நோக்கும் இன்னல்கள் பல. இவர்கள் கல்முனை மாநகரில் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் இப்போது மாடுகளை இறைச்சிக்காக அறுத்து வருவதனால் இவற்றின் கழிவுகள் மூலம் மாநகர் மாசடையும் அபாயம் தோன்றியுள்ளது.

ஆண்டு தோறும் கல்முனை மாநகர சபைக்கு இப்பகுதி இறைச்சிக் கடை உரிமையாளர்கள் வரிப் பணம் செலுத்தி வருகின்ற போதிலும் தற்போது கல்முனையில் மூடப்பட்டுள்ள மாடறுக்கும் மடுவத்திற்குப் பதிலாக கல்முனை மாநகரில் இதற்குப் பொருத்தமான வேறோர் இடத்தில் மாடறுக்கும் மடுவமொன்று அமைக்கப்படாதது ஏன் என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வியாகும்.

எனவே, இவ்விடயத்தில் கல்முனை மாநகர சபை அதிகாரிகள் உடன் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

–எம்.சி.கலீல்,
கல்முனை – 05.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):–011 4-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk


## வாசகர் சாலை

### உற்சாகம் தரும் முரசே!

முத்தான முரசே! தினமுரசில் இடம்பெறும் பாப்பா முரசுப் பகுதியில் என் போன்ற இளையவர்களுக்குப் புத்தி புகட்டும் குட்டிக் கதைகளும், பொது விடயங்கள், விடுகதைகள், ஆத்திசூடி, பாரதியார் பாடல் என்பவற்றுடன் வர்ணம் தீட்டும் பகுதியும் மிகவும் பயன்மிக்கதாக இருக்கிறது. இதுபோன்று தொடர்ந்தும் தினமுரசு எம்மை உற்சாகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

–த.தீபன், த.கோகுலன்,
பம்பலப்பிட்டி.

### வரலாற்று விடயம் தொடரட்டும்!

தித்திக்கும் தினமுரசே! கடந்த 682ஆவது முரசிலே புரட்சிப் பிள்ளை என்ற தலைப்பில் நாடு போற்றும் சின்னப்பிள்ளை என்ற கல்வி அறிவற்ற பெண்மணியின் சாதனையையும் சேவையையும் கண்டு வியப்படைந்தேன். மேலும் வியட்நாம் யுத்தம், பாகிஸ்தான் இராணுவப் புரட்சி போன்ற விடயங்களும் சுவாரஸ்யமாக இருந்தன. இது போன்ற வரலாற்று விடயங்கள் முரசில் தொடர்ந்து இடம் பெற வேண்டுமென்று கேட்டுகொள்கிறேன்.

-வி.சுமன்,
குறுமண்காடு.

### தனித்துவம்

ஆன்மீகம் தொடக்கம் அதிரடி ஐயாதுரை, காதிலை பூ கந்தசாமி வரை முரசில் இடம் பெறும் அத்தனை ஆக்கங்களும் அசத்தலானது. நாட்டில் நிலவும் யதார்த்தமான கள நிலைவரங்களையும், யாருக்கும் துதி பாடாத அரசியலையும் துணிவுடனும் நயத்துடனும் எடுத்துரைக்கும் பக்குவமும் ஜனரஞ்சகமும் முரசுக்கே உரிய தனித்துவம் என்பதை எண்ணிப் பார்த்துப் பெருமிதம் அடைகிறேன். தொடர்ந்தும் வெற்றி நடைபோட வாழ்த்துக்கள்.

–றஹீம்,
கல்முனை.

### வளர்க உன் சேவை!

என்றும் என் அபிமான தினமுரசே! கடந்த செப். 7-13 2006 மலரை படித்தேன். அனைத்து அம்சங்களும் அருமை. அத்துடன் கவிதை எழுதுதலும், வாசித்தலும் பயிற்சி களம் கூடுதலான கவிஞர்களை உருவாக்கும். அதில் எவ்வித சந்தேகமும் இல்லை. 'உறங்குமா காதல் கண்கள்?' இலக்கிய நயம், முரசுக்கு மேலும் மெருகூட்டியது.

–ஆ.சந்திரமோகன்,
புஸ்ஸலாவ.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையிலான வரலாற்று முக்கியத்துவமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் பரஸ்பரம் வாழ்த்துத் தெரிவிப்பதைக் காணலாம்.

# வடக்கு - கிழக்கு இணைப்பில் அரசு தீவிர கவனம்

## -அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

வடக்கு - கிழக்கு மாகாண சபை பிரிப்புத் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக் குறித்து அரசு என்ன செய்யப் போகிறது என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் பி.பி.ஸி. எழுப்பிய கேள்வியும் - பதிலும் வருமாறு :-

"இதைச் சட்டப் பிரச்சினையாகப் பார்க்காமல், அரசியல் பிரச்சினையாகப் பார்க்க வேண்டும் என்பதே, எமது கோரிக்கையாகும். நாங்கள் தனிநாட்டுக்காக ஆயுதந் தாங்கிப் போராடிய காலகட்டத்தில் கூட, வடக்கு - கிழக்கை தமிழ் பேசும் மக்களின் அரசியல் அலகாகவே கருதியிருந்தோம். பின்னர் ஜனநாயக வழிக்கு வந்ததன் பின்னரும், இதைத் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அலகாகவே கருதிக் கொண்டிருக்கின்றோம். எனவே, இப்பிரச்சினைக்குத் தீர்வு, அரசியல் ரீதியாகவே காணப்பட வேண்டும். சட்டரீதியாக அல்ல. அண்மையில் கூட ஹவானாவில், இந்தியப் பிரதமருக்கும், இலங்கை ஜனாதிபதிக்குமிடையே, இது தொடர்பான கலந்துரையாடலொன்று நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் நானும் பங்கு பற்றியிருந்தேன். அங்கு இதைச் சட்டப் பிரச்சினையாகப் பார்க்காமல், அரசியல் பிரச்சினையாகப் பார்க்க வேண்டும் என்று இணக்கம் காணப்பட்டது.

***கேள்வி*** :- இதை நீங்கள் அரசியல் பிரச்சினையாகப் பார்த்தாலும், அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு வழங்கும் ஜே.வி.பி.யினர், இதைச் சட்டப் பிரச்சினையாக்கி, இதற்குச் சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறார்களே? இது குறித்து அரசு என்ன செய்யப் போகிறது?

**பதில்** :- அரசு கூட இத் தீர்ப்புத் தொடர்பாகச் சந்தோஷமாக இல்லை. ஏனென்றால், இன்று நாடு இருக்கும் சூழலில் இத் தீர்ப்பு எந்த அளவு ஆரோக்கியமான சூழலை உருவாக்கும் எனும் அபிப்பிராயம் அரச மட்டத்தில் உள்ளது. இருப்பினும் அரச பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில், இது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பாக ஜனாதிபதி தீவிர கவனம் செலுத்தி வருகின்றார். இந்தியப் பிரதமரோடு கதைத்ததற்கு இணங்கவும் நாட்டுச் சூழலுக்கு ஏற்பவும், விரைவில் அவர் ஒரு சாதகமான தீர்மானத்திற்கு வருவாரென்று நம்புகிறோம்.

***கேள்வி*** :- நீதிமன்றம் இப்பொழுது கிழக்கு மாகாணத்தைத் தனியாகப் பிரித்து, உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று, மனுதாரர்கள் கேட்ட அந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த உத்தரவு அரசுக்குப் பிறப்பிக்கப்பட்டால் அரசு என்ன செய்யும்?

**பதில்** :- இன்று தேர்தலை நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லைத்தானே, யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. பெருமளவிலான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மக்கள் தீர்மானிக்கக் கூடிய ஜனநாயகச் சூழல் இல்லாத காரணத்தால், இத் தேர்தல் உடனடியாக நடக்குமென நான் எதிர்பார்க்கவில்லை - என்றார் அமைச்சர்.

# சு.க. - ஐ.தே.க. உடன்பாடு தீர்வுக்கு உதவும்

## -அரசியல் ஆய்வாளர்கள் அபிப்பிராயம்

வடக்கு - கிழக்குப் பிரச்சினையென்று வர்ணிக்கப்படும் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண பிரதான கட்சிகளான சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் மேற்கொண்டிருக்கும் சகவாழ்வு உடன்படிக்கை இலங்கை வரலாறு காணாத முன்னோடி நடவடிக்கையென்று அரசியல் ஆய்வாளர்கள் வரவேற்றுள்ளனர். ஆளும் கட்சி பிரச்சினையைத் தீர்க்க முனைந்த போது, எதிர்க்கட்சி குழப்பியடித்ததே இந்த நாட்டின் நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது. சிங்களம் மட்டும் சட்டத்தைக் கொண்டு வந்த அமரர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா, நியாயமான தமிழ்மொழி உபயோகத்துக்காக பண்டா - செல்வா ஒப்பந்தத்தைக் கொண்டு வந்தபோது ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் தலைமையிலான ஐ.தே.க.வும் பௌத்த பிக்குகளும் கடுமையான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். பண்டா - செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து ஜே.ஆர், கண்டி யாத்திரையைத் தலைமை தாங்கி நடத்தியபோது, கம்பஹா, பொரலுகொட என்ற இடத்தில் வைத்து முன்னாள் எம்.பி.யான எஸ்.டி.பண்டாரநாயக்கா தாக்குதல் நடத்தி விரட்டினார். தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா முயற்சி எடுத்ததை விரும்பாத சிங்கள இனவாதிகளே அவரைப் படுகொலையும் செய்தனர். இலங்கையில் நிகழ்ந்த முதலாவது அரசியல் படுகொலை எஸ்.டபிள்யூ. ஆர்.டி.யின் படுகொலை என்றும் கூறலாம். எட்டு வருடங்கள் கழித்து டட்லி - செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது சுதந்திரக் கட்சியும் பௌத்த பிக்குகளும் எதிர்த்தனர். டட்லி - செல்வா ஒப்பந்தமும் கிழித்தெறியப்பட்டது. 1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் மாகாண சபைகளை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டபோது சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி.போன்றவை நாடு துண்டாடப்படப் போகிறது என்று கூறி பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தின. இந்திய அழுத்தத்தின் பேரில் வடக்கு - கிழக்கை இணைத்து மாகாண சபை முறையை ஏற்படுத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா எடுத்த முயற்சி வெற்றியும் கண்டது. ஆனால் பிரதமர் ரணசிங்க பிரேமதாசா ஜனாதிபதியானதும் அப்போதைய தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அதுலத் முதலியுடன் சேர்ந்துகொண்டு புலிகளுக்கு ஆயுதங்களும் நிதியுதவியும் வழங்கி இந்தியப் படைக்கெதிரான தாக்குதலை உசுப்பிவிட்டு அந்தத் தீர்வு முயற்சிக்கும் குழிபறித்தனர். 2000ஆம் ஆண்டு பிராந்திய சபைகளை அமைப்பதற்கான அதிகாரப் பகிர்வுத் தீர்வுப் பொதியை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா முன்வைத்தபோது, அதனை ஐ.தே.கட்சியினர் பாராளுமன்றத்திற்குள்ளேயே கிழித்தெறிந்து தீ மூட்டினர். 1960களில் சம அந்தஸ்துக் கோரிக்கையை முன்வைத்த லங்கா சமசமாஜக் கட்சி, சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைத்து ஆட்சிக்கு வந்த பின்னர் வகுப்புவாதக் கோஷங்களை முன்வைக்கத் தலைப்பட்டது. 1956ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்ட போது, "இரு மொழிகள் ஒரே நாடு; ஒரு மொழி இரு நாடுகள்" என்று பாராளுமன்றத்தில் வீரவசனம் பேசிய கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா 1972ஆம் ஆண்டு அரசியலமைப்பில் சிங்களத்துக்கும் பௌத்தத்துக்கும் முன்னுரிமை அளித்தார். ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான பாராளுமன்ற சந்தர்ப்பவாதமும் வெஸ்ட் மினிஸ்டர் பாணியிலமைந்த முன்னைய அரசியலமைப்பு முறைமையும் இந் நாட்டு இனப்பிரச்சினைக்கு ஒரு காரணமாக அமைந்திருந்தன. இந்நிலையில் சர்வகட்சி மாநாட்டுக்கு தனது பிரதிநிதிகளை நியமிக்க ஐ.தே.க.முன்வந்திருப்பதும் பாராட்டுக்குரியது.

பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கும் இருதரப்பும் இணக்கம் கண்டுள்ளன. தமிழ் - முஸ்லிம் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய நீதியான, கௌரவமான தீர்வைக் காண்பதன் மூலமே பயங்கரவாதப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றும் அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நியாயமான அரசியல் தீர்வொன்று முன்வைக்கப்பட்டால் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை ஓரங்கட்டுவதற்கு அது வாய்ப்பாக அமையும். அது அவர்களை ஜனநாயக வழிமுறைக்குக் கொண்டுவருவதற்கான ஓர் உந்துதலாக அமையலாமென்றும் சமாதான ஆர்வலரான ரோகன் குணரத்ன தெரிவித்தார்.

# இணைப்பா? பிரிப்பா? என்பது மக்கள் தீர்மானிக்க வேண்டிய விடயம்

## —ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி

"இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்குப் பிரதேசம் என்பது தமிழ் பேசும் மக்களின் தாயக பூமி! எமது முன்னோர்களில் தொடங்கி இன்று வரை பாரம்பரியமாக வாழ்ந்து வரும் எமது வரலாற்று வாழ்விடமான வடக்கும், கிழக்கும் பிரிந்திருப்பதா? அல்லது இணைந்திருப்பதா? என்பது எமது மக்கள் சுயமாகச் சிந்தித்து எடுக்க வேண்டிய ஒரு அரசியல் சார்ந்த விடயம் என்பதில் மாற்றம் இல்லை! சட்டங்களால் இயற்றப்படும் தீர்மானங்கள் இதற்கு ஒருபோதும் தீர்வாகிவிட முடியாது என்பதே எமது அரசியல் கோட்பாடு ஆகும்!" என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

இன, மத, சமூக, பிராந்திய சமத்துவங்களை அப்படையாக கொண்ட அரசியல் ஏற்பாட்டை விரும்பும் நாம், பல்வேறுபட்ட மன உணர்வுகளுக்கும் இடமளிக்கும் பலமானதும், பாதுகாப்பானதுமான ஒரு நிர்வாக அலகு குறித்த எண்ணங்களையே தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம். வடக்கு - கிழக்கு இணைந்த ஒரே நிர்வாக அலகுக்குள் முஸ்லிம் சகோதர மக்களுக்கான அகச் சுயாதிக்கம் என்பதே ஈ.பி.டி.பி.யின் அரசியல் நிலைப்பாடாகும்.

1985இல் திம்பு பேச்சுவார்த்தை மேசையில் தமிழ் பேசும் மக்களின் பன்மைத்துவ பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்டு இலங்கை - இந்திய ஒப்பந்தத்திலும் சில மாறுதல்களோடு எழுதப்பட்ட விடயம்தான் வடக்கு - கிழக்கு இணைந்த ஒரே நிர்வாக அலகாகும். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கூட வடக்கு கிழக்கில் ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி, அதிலிருந்து பெறப்படும் மக்களின் தீர்மானங்களின் அடிப்படையிலேயே வடக்கு - கிழக்கு இணைப்பு என்பது நிர்ணயிக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கெங்கும் தமது சொந்த வாழ்விடங்களில் சுதந்திரமாக மக்கள் வாழ முடியாத இச்சூழலில் - இடைவிடாது தொடரும் யுத்தம் என்பது இடப்பெயர்வுகளைத் தந்து கொண்டிருக்கின்ற இச்சூழலில் - தமது சொந்த வாழ்விடங்களில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு யுத்தம் தடையாக இருக்கும். இந்நிலையில் சர்வஜன வாக்கெடுப்பிற்கான சுமுகமான ஒரு சூழலும் தற்போது இல்லை என்பதே உண்மையாகும்.

நீதிக்குத் தலைவணங்க நாம் ஒருபோதும் மறுப்பதில்லை! ஆனாலும் பரந்துபட்ட மக்களின் வாழ்வுரிமையைத் தீர்மானிக்கும் இவ்விடயத்தில் மக்களின் கருத்துக்களே பிரதானமாகும். எமது கருத்துக்களும் நிலைப்பாடுகளும் கூட பரந்துபட்ட மக்களின் தீர்மானங்களுக்கு உட்பட்டவைகளேயாகும். -இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஜெனீவா பேச்சுவார்த்தையில் ஏ-9 பாதையும் இடம் பெறும்?

யாழ்ப்பாணத்திற்கான ஏ-9 தரை வழிப் பாதை திறக்கப்படாதவரை ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் இடம் பெறப்போவதில்லையென்று ஜெனீவாவிலுள்ள புலி இயக்க முக்கியஸ்தர் குலம் என்பவர் தெரிவித்தாரென்று கொழும்பிலிருந்து வெளிவரும் 'லங்காதீப' என்ற தினசரி செய்தி வெளியிட்டுள்ளது. லங்கா தீப பத்திரிகையாளரான டினித் சிந்தக கருணாரத்ன என்பவருக்கு புலி முக்கியஸ்தர் வழங்கிய பேட்டி கடந்த 22ஆம் திகதிய லங்கா தீப பத்திரிகையில் வெளியாகியிருந்தது. லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் வெளியிடும் 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரான எச்.எல்.டி. மஹிந்தபாலவை கடந்த ஜெனீவா பேச்சுவார்த்தைகளின் போது கடத்துவதற்கு புலிகள் எடுத்த முயற்சி ஜெனீவா பொலிஸாரினால் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் தட்டுப்பாடு நீங்குமா?

யாழ்ப்பாணத்தில் உணவுப் பொருட்கள், குழந்தைகளுக்கான பால்மா மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவுவதாக வெளிவரும் தகவல்களையடுத்து மக்களின் அவலங்களைப் போக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது. சரக்கு விமானங்கள் மூலமும் உணவுப் பொருட்கள் அனுப்பப்படுவதைப் பாராட்டும் அதேவேளை, அங்கு செயற்படும் தனியார் வர்த்தகப் பெருச்சாளிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது. நல்லூரிலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு, அண்மையில் அனுப்பி வைக்கப்பட்ட பதின்மூவாயிரத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் பால்மா, சம்பந்தப்பட்டவர்களால் அபகரிக்கப்பட்ட விதம் குறித்து அண்மையில் தமிழில் ஒலிபரப்பாகும் ஊடகமொன்று அம்பலப்படுத்திய விபரங்கள் அரசாங்க அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் தெரிய வருகிறது. இதேவேளை யாழ்ப்பாணத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக அரசு தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# ஐக்கிய இலங்கைக்குள்ளேயே தீர்வு

இலங்கை இனப்பிரச்சினைக்குரிய தீர்வு ஒன்றுபட்ட இலங்கைக்குள்ளேயே ஏற்பட வேண்டுமென்றும், ஒஸ்லோ, டோக்கியோ உடன்படிக்கைக்கு உட்பட்டதாக அமைய வேண்டுமென்றும் சர்வதேச சமூகம் தொடர்ந்து வலியுறுத்தி வந்த போதிலும் புலிகள் தமிழீழத்தை மையமாக வைத்தே செயற்படுகின்றனர். அந்த இலக்கை அடைய அவர்கள் பல்வேறு உபாயங்களைக் கடைப் பிடிக்கின்றனர். ஆகவே நாட்டுப் பிரிவினையை சர்வதேச சமூகமோ, இந்திய அரசோ, இலங்கை மக்களோ ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதைப் புலிகளுக்கு தெளிவாகத் கூறிவைக்க வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி, இணைத்தலைமை நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# 'இரட்டை உளவாளி' அம்பலப்படுத்தும் திடுக்கிடும் தகவல்கள்!

பிரிட்டனிலும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் பயங்கரவாத இயக்கமெனத் தடைசெய்யப்பட்டுள்ள புலிகள் இயக்கம், லண்டனில் அலுவலகங்களை நடத்தவும் ஊடகங்களுக்கு அறிக்கைகளை விடுக்கவும் அனுமதிக்கப்படுவது ஏனென்று கிளென் ஜென்வே என்ற உளவாளியொருவர் கேள்வி எழுப்புகிறார். புலிகள் இயக்கத்துக்கும் இலங்கை புலனாய்வுப் பிரிவினருக்கும் சமகாலத்தில் இரட்டை உளவாளியாகப் பணியாற்றியதாகக் கூறும் இவர், அண்மையில் வெளியிட்ட கட்டுரையொன்றில் புலிகளின் அலுவலகங்கள் லண்டனில் இயங்கிவரும் முகவரிகளை வெளியிட்டுள்ளார். புலிகள் இயக்கத்தின் வாராந்த ஞாயிறு கூட்டங்களில் தான் கலந்து கொண்டமை, புலிகளின் அரசியல் பிரசார வேலைகளில் ஈடுபட்டமை போன்ற பல விடயங்களையும் அவர் அம்பலப்படுத்தியிருக்கிறார். லண்டனில் ஏ.சி.சாந்தன் என்ற புலி இயக்க முக்கியஸ்தருடன் தான் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட விதம் பற்றியும் எப்படி லண்டனிலுள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்துக்கும் புலிகள் இயக்கத்துக்கும் தகவல்களைப் பரிமாறிக் கொண்ட விதம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் செயற்பட்டுவந்த புலி இயக்க முக்கியஸ்தர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டித் தான் இலங்கை ஸ்தானிகராலயத்துக்கு வழங்கியதையடுத்துப் பலர் கைது செய்யப்பட்டனரென்றும் அவர் தெரிவித்திருக்கிறார். இன்னுமொரு சந்தர்ப்பத்தில் புலிகள் இயக்கத்துக்கு ஆயுதங்கள் கொள்வனவு செய்வதற்காக லண்டனிலுள்ள பல்வேறு நாட்டு தூதுவராலயங்களை அணுகியதாகவும் இதற்கு ஒரேயொரு நாடு மட்டும் ஆயுத விற்பனை செய்யும் கம்பனிகளின் பெயர்களை வழங்கியதாகவும் கிளென் ஜென்வே குறிப்பிட்டார். புலி இயக்கப் பிரமுகர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட பிரிட்டிஷ் தொழிற் கட்சி உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிட்ட அவர், காமன்ஸ் சபைக் கூட்டங்களுக்கு புலிகளைப் பார்வையாளர்களாக அழைத்த தொழிற்கட்சி உறுப்பினரின் பெயரையும் வேறு பல திடுக்கிடும் தகவல்களையும் வெகு விரைவில் வெளியிடப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

# ஹமீதியாவின் பரிசுத் திட்டம்

ஹமீதியா நிறுவனம் அதன் "வெற்றி பெறுவதற்கான ஆடையணி பரிசுத் திட்டத்தை" தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாக இவ்வருடமும் நடைமுறைப்படுத்துகிறது. இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதி முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் இப்பரிசுத் திட்டத்தின் கீழ், இலங்கையில் உள்ள ஹமீதியாவின் எந்தக் கிளையிலேனும் ஒரே நேரத்தில் 5000 ரூபாவுக்கு மேலாக ஆடைகளைக் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் குலுக்கல் மூலம் பரிசுக்குத் தெரிவு செய்யப்படுவர்.

# இணைப்புச் சட்டமூலம்

இந்தியப் பாணியிலான மொழிவாரி மாநில சுயாட்சியைப் போன்று இலங்கையிலும் அதிகாரப் பகிர்வுகளை மேற்கொள்ள சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணக்கம் தெரிவிக்கலாமென்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. வடக்கு - கிழக்கு இணைப்பு தொடர்பாக இரு கட்சிகளுமே ஒரே விதமான கொள்கையைக் கொண்டிருப்பதால், மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அதற்கான சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் தெரிய வருகிறது. இது தொடர்பாகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களுடனும் முஸ்லிம் காங்கிரஸுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படலாமென்றும் தெரிய வருகிறது.

**தினமுரசு வாரமலர்,**
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# முரசம்

## சர்வதேச சமூகத்துக்காக ஜெனீவாவில் பேச்சு!

***அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.***

**இரண்டு** பிரதான கட்சிகளும் பொது வேலைத்திட்டத்தில் கைச்சாத்திட்டு நாட்டில் புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கியுள்ளன. இது வரவேற்கப்பட வேண்டியதாகும். இந்த முயற்சி வெற்றியளித்து இரு கட்சிகளும் இணங்கியிருக்கும் பொது வேலைத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், நாடு புதிய உலகுக்குள் பிரவேசிக்கும். இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும் அதேவேளையில் யுத்தமும் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டியது அவசியமாகும்.

இனப்பிரச்சினைக்கு கௌரவமான அரசியல் தீர்வு காணப்படாமல் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியும் அர்த்தமற்றதாகவே இருக்கும். இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வொன்றைக் காண இரு பிரதான கட்சிகளும் இணங்கியுள்ள நிலையில் இந்தியா உட்பட சர்வதேசமும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தை புலிகள் சரியாகப் பயன்படுத்திக்கொண்டு மீண்டுமொரு யுத்தம் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். அரசு தனது தீர்வுத் திட்டத்தை முன்வைக்க பின்னிற்கிறது என்று குறை கூறாமல் - புலிகள் தமது தரப்புத் தீர்வுத் திட்டத்தை சர்வதேசத்தின் முன்னால் 'இதுதான் தமக்கு வேண்டும்' என்பதைப் பகிரங்கமாக முன்வைக்க வேண்டும்.

புலிகள் சர்வதேச சமூகத்துக்கு ஒரு போக்கையும், இலங்கை அரசுக்கு ஒரு போக்கையும் காட்டி, நாட்களை இழுத்தடிப்பதை இனியும் மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். புலிகள் இவ்வாறு இழுத்தடிப்புச் செய்து பிரபாகரனின் கார்த்திகை உரையின் மீது ஒரு எதிர்பார்ப்பைத் தூண்டவே முயற்சிப்பர். இந்த எதிர்பார்ப்புகளை அந்த கார்த்திகை உரை வழமைபோல் ஆற்றப்பட்டு உப்புச் சப்பில்லாமல் ஆக்கிவிடும்.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை பேச்சுக்கள் இழுத்தடிக்கப்படாமல் கால அட்டவணைக்குள் நடத்தி முடிக்கப்பட வேண்டும். இறுதித் தீர்வு குறித்த பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும். புலிகள், நாட்டின் இறைமைக்கும் அமைதிக்கும் பாதகமான செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடாது. அவ்வாறு மேற்கொண்டால் அரசு அதற்குப் பதிலடி கொடுக்கும் ஆகிய முக்கியமான விடயங்கள் பற்றியே ஜெனீவாவில் பேச்சு நடத்தும் என்று தெரியவருகிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால், இரு தரப்புமே ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை கொள்ளாமல் சர்வதேச சமூகத்தின் வற்புறுத்தலால் பேச்சுக்குச் சென்றுள்ளனர் என்பதுதான்.

புலிகளைப் பொறுத்தவரை கடந்தகாலப் பேச்சுக்களில் பேசப்பட்ட அதே விடயங்களையே பேசத் திட்டமிட்டுள்ளதால் ஒப்பந்த அமுலாக்கம், படை நடவடிக்கைகள், படுகொலைகள், ஏ- ஒன்பது பாதை திறப்பு என்பவையையே பிரதானமாகப் பேசவுள்ளனர். மேற்குறிப்பிட்ட சம்பவங்களின் சம பங்காளிகள் தாமும்தான் என்பதைப் புலிகள் புரிந்து கொள்ளாதவரை, இன்னும் எத்தனை பேச்சுவார்த்தை முயற்சிகளில் பங்கு கொண்டாலும் அது நடைமுறைக்குச் சிரமமானதாகவே இருக்கப் போகிறது.

இந்த இழுபறி நிலையில் ஜெனீவா பேச்சுக்கள் எதிர்பார்க்கும் முடிவுகளைத் தரப்போவதில்லை என்பது கண்கூடு. ஆனாலும் இரு தரப்பும் இரண்டாம் கட்டப் பேச்சுக்கும் விருப்பம் தெரிவிக்கக் கூடும். ஏனெனில் அந்தத் தேவை இரு தரப்புக்கும் இருக்கின்றது. ஜெனீவாவில் நடக்கும் பேச்சுக்கள் ஜெனீவா நகரத்துக்குப் பெற்றுத் தரப்போகும் விளம்பர அநுகூலத்தை விட, பேச்சுக்களின் அநுகூலம் குறைவானதாகவே இருக்கிறது. பேச்சுக்கள் ஜெனீவாவில் நடந்தாலும் அது இலங்கையில் தொடரும் படுகொலைக்கு மேலாகப் பிணக்குவியல்களுக்கு மத்தியில்தான் நடைபெறுகிறது என்பதை எவரும் மறந்து விடக்கூடாது. நம்பிக்கை, விட்டுக் கொடுப்பு, சகிப்புத்தன்மை, சமாதான விருப்பம் என்பவை முதன்மை பெறாத எந்த ஒரு சமரச முயற்சியும் வெற்றியளிக்கப் போவதில்லை. ஜெனீவாப் பேச்சு முடிவு ஒரு ஏமாற்றத்துக்கான காத்திருப்பு தான்.

■■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

***என்றென்றும் அன்புடன்,***
***ஆசிரியர்.***

# இணைந்த வடக்கு - கிழக்கே தமிழ் பேசும் மக்களின் தாயகம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**வடக்கு** - கிழக்கைப் பிரிக்குமாறு உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, பயங்கரவாதத்துக்கு விழுந்த முதல் அடியென்று ஜே.வி.பி. யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்திருக்கிறார். இது பயங்கரவாதத்துக்கு விழுந்த முதல் அடியல்ல, தமிழ் மக்களின் தாயக பூமிப் போராட்டத்தைத் தடவிக் கொடுத்து, முன்னெடுத்துச் செல்வதற்கான உந்து சக்தியென்று கூறலாம். அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ், வர்த்தமானி அறிவித்தல் மூலமே இந்த இணைப்பு ஏற்படுத்தப்பட்டதால் அது சட்டவிரோதமானது என்பதே உயர் நீதிமன்றத் தீர்ப்புக்கான மூல காரணம். தொழில்நுட்ப மற்றும் சட்ட நுணுக்கங்களின்படி உயர் நீதிமன்றத் தீர்ப்பு சரியானதே. ஆனால் வெறும் சட்டப் பிரச்சினைகளூடாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்குத் தீர்வு கண்டுவிட முடியாது.

இலங்கையின் வடக்கும் கிழக்கும் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட, தமிழ் - முஸ்லிம் மக்களின் தாயக பூமி. நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்னரேயே இனவெறி விதைகள் இந்த நாட்டில் விதைக்கப்படத் தொடங்கிவிட்டன. சுதந்திர இலங்கையில் மொழிப் பிரச்சினைக்குத் தீர்வாக முதன் முதலில் முன்வைக்கப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தத்துக்கு எதிராகக் கண்டி யாத்திரையை நடத்த முனைந்த அதே ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, 1930களிலேயே சிங்களம் அரச கரும மொழியாக வேண்டுமென்ற தீர்மானத்தை முன்வைத்தார்.

வடக்கு - கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் நில ரீதியான தொடர்புகளைத் துண்டிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், சிங்களம் மட்டும் சட்டம், தொழில்வாய்ப்புகளில் தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி ஆகியவையே தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்துக்கு வழிவகுத்தன.

இந்த நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஓரளவுக்கேனும் தீர்வுகாண முன்வைக்கப்பட்ட பண்டா - செல்வா, டட்லி - செல்வா, இலங்கை - இந்திய ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டமையும் இனப் பிரச்சினையைக் கூர்மையடைய வைத்த மூல காரணிகளாகும். இப்போது தேசிய இனப் பிரச்சினையின் செல்நெறி தடம் மாறி நிற்கிறது. யுத்தத்தினால் பெரும் மனித மற்றும் உடைமை இழப்புகளைச் சந்தித்த மக்களும் அரசுகளும், சமாதானத் தீர்வை நாடி நிற்கின்றனர். மரணப் பிடிவாதப் புலிகள் இயக்கமும், மார்க்சிஸ்டுகளென்று கூறிக்கொள்ளும் ஜே.வி.பி. மற்றும் சிங்கள பௌத்தக் கட்சியான ஜாதிக ஹெல உறுமய போன்றவையும் யுத்தத் தீர்வை நாடி நிற்கின்றன. யுத்தமா? சமாதானமா? என்பதே நாட்டின் இன்றைய பிரதான முரண்பாடு.

யதார்த்த கள நிலைமைகளைப் புரிந்துகொள்ள முடியாத அரைவேக்காடுகளே தமிழர்களின் தாயக பூமிக் கோட்பாட்டை நிராகரிக்கின்றன.

இனப்பிரச்சினையின் மூல காரணிகளுக்குத் தீர்வுகாண முனையாவிட்டால், சமாதானம் இந்த நாட்டில் ஏற்படப் போவதில்லை. வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் தாயக பூமி பறிபோன வரலாற்றுச் சான்றுக்கு ஓர் உதாரணமாக திருகோணமலை மாவட்டத்தில் இனப்பரம்பல் மாற்றியமைக்கப்பட்ட விதத்தை இதே பகுதியில் குறிப்பிட்டிருக்கிறோம். இலங்கை - இந்திய ஒப்பந்தம் வடக்கு - கிழக்கு இணைப்புக்கு வழிவகுத்தது. இந்த இணைப்பின் மூலம், ஜெயவர்த்தனா அரசாங்கத்தின் பாரிய எதிர்ப்புக்கு மத்தியிலும் வடக்கு - கிழக்கின் தலைநகராக திருகோணமலை, தமிழ் பேசும் மக்களின் அதிகார வரம்பிற்குள் வந்தது. இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியின் பாரிய முயற்சியும் அனுசரணையும் இதற்கு வழி வகுத்தன. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பி.பி.ஸி.க்கு வழங்கிய பேட்டியில் கூறியது போன்று, சட்டப் பிரச்சினை வேறு; அரசியல் பிரச்சினை வேறு. வடக்கு - கிழக்கு பிரிப்பு என்பது அப்பகுதி வாழ் மக்களால் தீர்மானிக்கப்பட வேண்டிய ஓர் அரசியல் பிரச்சினை என்றும் அவர் அழுத்தம் திருத்தமாகவும் குறிப்பிட்டுள்ளார். வடக்கு - கிழக்கைத் தளமாகக் கொண்டு இயங்காத ஜே.வி.பி.யும் ஜாதிக ஹெல உறுமயவும் தமிழ் பேசும் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்க' முடியாது. கடந்த 19 வருடங்களாகத் தமிழர் தரப்புகள் வடக்கு, கிழக்கு இணைப்பை சட்டரீதியாக ஏற்படுத்துவதற்கான அழுத்தத்தைக் கொடுக்கத் தவறிவிட்டன. இன்றும் கூட காலம் பிந்தி விடவில்லை. இலங்கையின் பிரதான கட்சிகளான சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் வடக்கு - கிழக்கு இணைப்பையும், சமஷ்டித் தீர்வையும் கொள்கை அளவில் ஏற்றிருக்கின்றன. பெரும்பாலான தமிழ் - முஸ்லிம் கட்சிகளும் இதனையே வலியுறுத்துகின்றன. எனவே சட்டவாக்க சபையான பாராளுமன்றத்தில் வடக்கு - கிழக்கு இணைப்பு சட்டமூலத்தைக் கொண்டு வந்து, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறை வேற்ற முடியும். இதனை உயர் நீதிமன்றத்திற்கும் எடுத்துச் சென்று நியாயபூர்வமாக வாதாடி அங்கீகாரத்தைப் பெறவும் முடியும். தேவையேற்பட்டால் சர்வஜன வாக்கெடுப்பொன்றின் மூலம் இணைப்பா? அல்லது பிரிப்பா? என்பதை மக்கள் தீர்மானித்துக் கொள்ளட்டும். "மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி, என்றும் பிரிக்க முடியாத வடக்கு - கிழக்கு இணைந்த நிர்வாக அலகு, அதற்குள் முஸ்லிம் மக்களுக்கான ஓர் அக சுயாதிக்கம்" என்ற ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அடிநாதக் கோட்பாடு வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் நிறையவே உண்டு.

# ஊரிலிருந்து....



**யா**ழ்ப்பாணத்தில சண்டை நடந்த காலத்தில கூட இப்போதைக்கு இருக்கிற மாதிரி பொருள் தட்டுப்பாடும், விலையேற்றமும் இருக்கயில்லை எண்டினம். பணம் இருக்கிறவை பொருட்களைப் பதுக்கினம். இன்னும் சில அதிகாரிகளினூடாகவும் பொருட்கள் பதுக்கப்பட்டு உப்பிடியான செயற்கைத் தட்டுப்பாடு உருவாக்கப்பட்டிருக்குதாம். அரசாங்கத்து அதிகாரிகள் இன்னும் திறமையாகச் செயற்பட்டால், உந்தப் பிரச்சினைக்கு ஓரளவாவது தீர்வு காணலாம் எண்டு கஷ்டப்படுகிற சனம் சொல்லினம். பாம்புக்குத் தலையையும், மீனுக்கு வாலையும் காட்டிக் கொள்ளிற அதிகாரிகளை இனங்கண்டு இடமாற்றம் தன்னும் செய்யாட்டில், பத்துக் கப்பலிலை சாமான் அனுப்பியும் வேலைக்கு ஆகாது எண்டும் சனம் சொல்லினமுங்கோ...

## தாயக பூமியின் கண்ணீர்க் கதை!

**1948, இலங்கை சுதந்திரம் பெற்ற ஆண்டு. திருகோணமலை மாவட்டத்தில் அப்போது சிங்கள மக்களின் சனத்தொகை ஐந்து சதவீதம் மட்டுமே. தமிழ் - முஸ்லிம் மக்களின் எண்ணிக்கை 95 சதவீதம். சுதந்திர இலங்கையின் முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயகா பார்வதிபுரம் என்ற பூர்வீகத் தமிழ்க் கிராமத்தில் 1320 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றி, அதற்குப் பதவியா என்ற சிங்களப் பெயரையும் சூட்டினார். இந்தத் 'தேச பிதாவே' கல்லோயா சிங்களக் குடியேற்றத் திட்டத்துக்கும் கால்கோலியவர். 1949இல் 1112 சிங்களக் குடும்பங்கள் மேலும் பார்வதிபுரத்தில் குடியேற்றப்பட்டன.**

**1950 - அல்லை என்றழைக்கப்பட்ட தமிழ்க் கிராமத்தில் 847 சிங்களக் குடும்பங்கள் அரசாங்கத்தினால் குடியேற்றப்பட்டன. 1953ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி திருமலையில் சிங்கள மக்களின் சனத்தொகை 18 சதவீதமாக உயர்ந்தது. ஐந்து வருடங்களுக்குள் ஏற்பட்ட 13 சதவீத வளர்ச்சி இது. தமிழ் மக்களின் சனத்தொகை 43 சதவீதமாகவும் முஸ்லிம்களின் சனத்தொகை 34 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்தது.**

**1957 - முதலிக்குளம் என்ற தமிழ்க் கிராமத்தில் 612 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. அதன் பெயர் மொரவேவா என்று மாற்றம் செய்யப்பட்டது.**

**1960 - அபேயபுர என்ற சிங்களக் குடியேற்றக் கிராமம் உருவாக்கப்பட்டது.**

**1962 - திரியாய் என்ற தமிழ் எல்லைக் கிராமத்துக்கு அண்மையில் 72 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டு போதி புத்தருக்கு விகாரையும் அமைக்கப்பட்டது.**

**1963 - உப்புவெளி தமிழ்க் கிராமத்தில் 133 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டு சிறிமாபுர என்ற சிங்களக் கிராமம் உருவாக்கப்பட்டது.**

**1963 - மிகிந்துபுர, ஜயந்திபுர சிங்களக் கிராமங்கள் உருவாக்கப்பட்டு ஆயிரக்கணக்கான சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.**

**1964 - சீனன்குடாவில் குடியேற்றம், சிங்களப் பாடசாலை, பௌத்த விகாரை அமைப்பு. அதன் பின்னரே சிங்களக் குடியேற்றங்கள் அங்கு பெருமளவில் ஆரம்பிக்கப்பட்டன.**

**1966 - பாலம்பட்டாறு தமிழ்க் கிராமத்தில் 30 சிங்களக் குடும்பங்களை முதலில் குடியேற்றி பின்னர் மேலும் பல குடும்பங்கள் கொண்டு வந்து குவிக்கப்பட்டன.**

**1968 - பெரியகுளம் தமிழ்க் கிராமம் நாமல்வத்தை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு 92 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.**

**1971 - கிளிவெட்டி என்ற தமிழ்க் கிராமம் தெஹிவத்தை என்று சிங்களப் பெயரைச் சூட்டிக் கொண்டது. 92 சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன.**

**71இல் சிங்கள மக்களின் சனத்தொகை 31 சதவீதமாக உயர்ந்தது. தமிழர்களின் சனத்தொகை 37 சதவீதமாகவும் முஸ்லிம்களின் சனத்தொகை 29 சதவீதமாகவும் வீழ்ச்சி கண்டது.**

**1981ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின்படி 93,570 தமிழர்களும் 86,410 சிங்களவர்களும் 74,403 முஸ்லிம்களும் இருந்தனர். சிங்கள மக்களின் சனத்தொகை 34 சதவீதமாக உயர்ந்தது. அதாவது தமிழ் மக்களின் சனத்தொகையைவிட இரண்டு சதவீதமே குறைவானதாக இருந்தது. முஸ்லிம்களின் சனத்தொகை 28 சதவீதமாக வீழ்ச்சி கண்டது.**

**கந்தளாய் உட்பட இன்னும் பல கிராமங்களிலும் சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. திருமலை மாவட்டத்தில் சேருவில என்ற தனிச் சிங்களத் தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது.**

# ஜெனீவாவில் பேச்சு! களத்தில் தாக்குதல் வீச்சு!!

**சு**விற்சர்லாந்தின் தலைநகரான ஜெனீவாவில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கென அரசும் - புலிகளும் சம்மதம் தெரிவித்து பல வாரங்கள் உருண்டோடி விட்டாலும் இரு தரப்பும் இறுதிவரை சண்டை பிடித்தே வந்திருக்கின்றன. இலங்கை உட்பட முழு உலகையுமே அதிரவைத்த முகமாலைத் தாக்குதல், காலித் தாக்குதல் ஆகியவையெல்லாம் இரு தரப்புகளுமே வெள்ளைக் கொடிகளை உயர்த்திய பின்னர் தான் இடம் பெற்றிருக்கின்றன. அதாவது யுத்தமும், சமாதானம் பற்றிய பேச்சும் ஏக காலத்திலேயே இடம் பெற்றிருக்கின்றன. இலங்கையில் ஏவுகணைத் தாக்குதல்களையும் விமானத் தாக்குதல்களையும் ஏட்டிக்குப் போட்டியாக நடத்தி வருபவர்கள் ஒலிவ் இலைகளைச் சுமந்து கொண்டு ஜெனீவாவுக்குப் பயணமாகியுள்ளனர்.

"யுத்த நிறுத்தம் பற்றிப் பேசப் போவதில்லை. அரசியல் தீர்வு பற்றி மட்டுமே பேசுவோம்" என்று அடித்துச் சொல்கிறது அரசு. எதனைப் பற்றிப் பேசப் போகிறோம் என்று எதனையுமே திட்டவட்டமாகக் கூறாமல் சென்றிருக்கிறது புலிகளின் தூது கோஷ்டி. 1985ஆம் ஆண்டு பூட்டானின் தலைநகரான திம்புவில் ஆரம்பித்த பேச்சுவார்த்தை என்ற விதிமுறை இன்று இருபது வருடங்கள் கழித்து, சுவிற்சர்லாந்தின் ஜெனீவா வரை நீண்டு சென்றிருக்கிறது. வரலாறு கற்பித்த ஏமாற்றுப் பாடங்கள் இந்த நிலையிலும் கூட இலங்கை மக்களுக்கு, குறிப்பாக தமிழ் மக்களுக்கு நம்பிக்கை தருவதாக இல்லை. யசூசி அகாசி வந்தார் - போனார். ரிச்சர்ட் பௌச்சரும், ஜோன் ஹன்சன் பவரும் வந்தார்கள் - போனார்கள். தற்போது நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான அரசாங்கக் குழுவும், தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலித் தூதுகோஷ்டியும் ஜெனீவா சென்றிருக்கின்றன. இரு தரப்புகளுமே விசுவாசத்தோடும் அர்ப்பண சிந்தையோடும் நெகிழ்ச்சித் தன்மையுடனும் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கோடு மேசைக்குச் சென்றாலேயொழிய, சமாதானத்திற்கான பாதையில் ஓர் அங்குலம் கூட அடியெடுத்து வைக்க முடியாது.

தோல்வியைச் சமாளிப்பதற்கும் தம்மைத் தயார் செய்து கொள்வதற்கும் ஓர் இடைக்காலம் தேவை என்பதற்காகப் பேச்சுவார்த்தை மேசையைப் பயன்படுத்த முனைந்தால், அது மக்களுக்குச் செய்யும் துரோகமாகவே முடியும். யுத்த நிறுத்தம் ஏற்பட்டு நான்கு வருடங்கள் கழிந்து விட்ட நிலையில், யுத்தம்தான் வெடித்தது. சமாதானம் மலரவுமில்லை, அதற்கான முயற்சி மொட்டிலேயே கருகியும் போய்விட்டது. இறுதி யுத்தமென்று கூறி தமிழீழத்துக்காகப் பிரபாகரன் ஆரம்பித்த யுத்தமே, இன்று அவரை ஜெனீவா வரை இழுத்துச் சென்றிருக்கிறது. சர்வதேச சமூகத்தின் உதவியுடனும் அனுசரணையுடனும் அரசாங்கம் கொடுத்த பதிலடி, தற்காப்பு நிலைக்குப் புலிகளை இழுத்துச் சென்றிருக்கிறதென்றே கூற வேண்டும்.

சமாதான மேசைக்குச் செல்வதற்கு முன்னர் இரு தரப்பும் ஒன்று மற்றொன்றைத் தாக்கிப் பலவீனப்படுத்துவதற்காகவே தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டன என்பதை வேண்டுமானால் ஒரு வாதத்துக்காக ஏற்றுக் கொள்வோம். ஆனால் ஜெனீவா சமாதான மேசையில் நடக்கப் போவது தான் இலங்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் ஓர் அம்சமாக விளங்கப் போகிறது. மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டு வந்தவர்கள் தேசியவாதிகள் மட்டுமல்ல, ஒற்றையாட்சியை வற்புறுத்திய கடும்போக்கு சிங்களக் கட்சிகளும் தமிழீழத்தை வலியுறுத்தும் புலிகளும்தான். அதாவது ஒன்றுக்கொன்று முரண்பட்ட சக்திகளும் ஜனாதிபதியின் வெற்றிக்கு உதவியிருக்கின்றன. வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் பேசும் மக்களின் வாக்களிக்கும் உரிமையைப் புலிகள் மிரட்டித் தடை செய்திருக்காவிட்டால், ரணில் விக்கிரமசிங்கவுக்கே வெற்றி வாய்ப்புக் கிட்டியிருக்கலாமென்ற கூற்றினை நாம் நிராகரித்து விட முடியாது. ஏனெனில் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகளாலேயே மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றிருந்தாரென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. புலிகள் தமது இறுதி யுத்தத்தைத் தொடுப்பதற்காகவே மஹிந்தவின் வெற்றிக்கு மறைமுகமாக உதவினார்களென்பதைக் கடந்த வருடம் பிரபாகரன் நிகழ்த்திய பிறந்ததின உரை எடுத்துக் காட்டுகிறது.

கடந்த வருடம் ஒற்றையாட்சித் தீர்வு பற்றிப் பேசிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அந்த நிலைப்பாட்டிலிருந்து இறங்கி, தென்னிலங்கையில் பொது இணக்கப்பாடொன்றினை எடுப்பதற்கான சர்வகட்சி மாநாட்டில் கணிசமான வெற்றிகளைப் பெற்றிருக்கிறார். சமஷ்டித் தீர்வையும் வடக்கு - கிழக்கு இணைப்பையும் வலியுறுத்தும் ஐ.தே.க.வுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினையும் செய்து கொண்டிருக்கிறார். இலங்கையின் வரலாற்றிலேயே முதல் தடவையாக இரு பிரதான கட்சிகளும் தேசிய இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாகக் காத்திரமான முடிவைக் காண்பதற்கான முன்னோடி முடிவுக்கு வந்திருக்கின்றன. யுத்தத்துக்கல்ல, சமாதானத் தீர்வுக்கு முதன்மையளிப்பதே அரசின் திட்டமாக இருக்கிறது. இதற்காக சர்வதேச சமூகத்தின் அழுத்தமும் ஆலோசனையும் கூட இலங்கை அரசுக்கு வழங்கப்படுகிறது. இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தடுக்கப்பட வேண்டும், சட்டமும் ஒழுங்கும் பேணப்பட வேண்டுமென்றெல்லாம் சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் புலிகள் இயக்கம் முன்வைக்கப்போகும் கோரிக்கைதான் என்ன? நிச்சயமாகத் தமிழீழக் கோரிக்கையை அவர்களால் முன்வைக்க முடியாது. தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வு தொடர்பான தமது அரசியல் யோசனைகளை அவர்கள் முன்வைத்துத்தானாக வேண்டும். இதேவேளை சமகாலப் பிரச்சினைகளையும் அவர்கள் சமாந்தரமாக முன்வைக்க முடியும்.

யுத்தமா? சமாதானமா? என்பதே இலங்கை மக்களின் இதயங்களை அரித்துக் கொண்டிருக்கும் பிரச்சினை. யுத்தம் நிகழும்போது சமாதானம் ஏற்படக்கூடிய சாத்தியமில்லை. காத்திரமான சமாதானம் ஏற்பட்டால் யுத்தம் தலையெடுக்காது.

புலிகள் ஆரம்பித்த 'இறுதி யுத்தம்' என்பதன் அர்த்தம் வேறு. அரசுக்கு எச்சரிக்கையாகவே இந்த இறுதி யுத்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அது, சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த கதையாகி விட்டது. அந்த 'இறுதி யுத்தம்' புலிகளை நோக்கித் திரும்பி நிற்கிறது. இனியாவது யுத்தம் வேண்டாம். இறுதிச் சமாதானத் தீர்வுக்கான ஆரம்ப அடிகளை இரு தரப்புகளுமே எடுத்து வைக்க வேண்டும். 25 வருடங்களுக்கு மேற்பட்ட யுத்தப் பிரச்சினைக்கு, இரண்டு நாட்கள் சமாதானப் பேச்சுக்களின் மூலம் தீர்வு கண்டு விட முடியாது. சமாதானப் பாதை தொடர வேண்டுமென்பதே சகலரினதும் எதிர்பார்ப்பும் அபிலாஷையுமாகும்.

# வரலாற்று ஒப்பந்தம்


**இலங்கை** சுதந்திரமடைந்த பெப்ரவரி, 4.1948ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையின் அரசியல் வரலாற்றில் புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை இலங்கை மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடும் நம்பிக்கையோடும் பார்க்க வேண்டும்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை, முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் ஏற்படுத்தப்பட்டதன் பின்னர், ஆர்.பிரேமதாசா, டிங்கிரி பண்டா விஜேதுங்கா, சந்திரிகா பண்டாரநாயக்கா ஆகிய முன்னாள் ஜனாதிபதிகள் இருந்த காலகட்டத்தில் சந்திரிகா அம்மையார் தேசிய அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுக்களை நடத்திய போதும் அது நடக்கவில்லை.

தற்போதுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் 2005 நவம்பர் மாதம் ஆட்சிக்கு வந்த பின்னர், இலங்கை அரசியலில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டு வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் பிரதான பிரச்சினைகளாக இருக்கும் இனப்பிரச்சினை, பொருளாதார அபிவிருத்தி, சமூக அபிவிருத்தி, தேர்தல் முறைமை என்பனவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கு ஆட்சிக்கு வரும் அரசுகளுக்குப் பெரும்பான்மை இல்லாமல் இருப்பதும், எதிர்க்கட்சியின் ஆதரவு இல்லாமல் இருப்பதும் பெரும் தடையாகவே இருந்து வந்துள்ளது.

இதில் முக்கியமானதாக இனப்பிரச்சினை உள்ளது. காலம் காலமாக, ஆட்சியிலிருக்கும் அரசு ஒரு தீர்வு முயற்சியை எடுப்பதும், அதை அப்போதைய எதிர்க்கட்சி எதிர்ப்பதுமானது இனப்பிரச்சினை இந்தளவுக்குப் பூதாகரமாகிப் போனதுக்குக் காரணமாகியுள்ளது எனலாம். தென் இலங்கையில் ஒருமித்த கருத்து ஏற்படாதவிடத்து சிறுபான்மையாக இருக்கும் அரசுகள் ஒரு தீர்வைத் தரமுடியாதுள்ளது என்று புலிகளும் இதுவரை காலமும் கூறி வந்தனர். ஆனால் இப்போது தென் இலங்கையில் பிரதான இரு கட்சிகளும் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் பணியாற்ற ஒப்பந்தம் செய்திருப்பதானது கனவு மெய்ப்பட்டதைப் போலவே இருக்கிறது.



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரத்தையும், அமைச்சரவையையும் தன்னகத்தே கொண்டிருந்த போதும், அவற்றைப் பகிர்ந்து எதிர்க்கட்சிக்கும் வழங்கி நாட்டின் பிரதான பிரச்சினைகளை எதிர்கொள்ளத் தீர்மானித்திருப்பது வரவேற்புக்குரியது.

இதேபோல் எதிர்க்கட்சியும், தனது சுய இலாபப் போக்கைக் கைவிட்டு, அரசுடன் இணைந்து நாட்டுக்குச் சேவையாற்ற விருப்பம் தெரிவித்திருப்பதும் பாராட்டுக்குரியது. 19.09.06 திகதி அன்றும், ஒக்டோபர் மாதத்தில் 03ஆம், 05ஆம் திகதிகளிலும் அரச பிரதிநிதிகளுக்கும், எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளுக்கும் இடையே பாராளுமன்றத்தில் நடந்த பொதுவேலைத் திட்டத்தில் இணைந்து பணியாற்றுவது தொடர்பான பேச்சுக்கள் மிகச் சுமுகமாக இடம்பெற்றன. அரச குழுவின் சார்பில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவும், எதிர்க்கட்சி சார்பில் அதன் பிரதித் தலைவர் கரு ஜெயசூரியவும் இந்தப் பேச்சுக்களை நடத்தினர். இப் பேச்சுக்களின் போது தலா இருவரைக் கொண்ட ஆறு உப குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவை பொது வேலைத்திட்டத்தில் முன்னெடுக்கப்படும் விடயங்கள் பற்றிய முன்மொழிவுகளைச் செய்தன.

இவ்வாறு இரு தரப்பும் சுமுகமானதும் சாத்தியமானதுமான பேச்சுக்களில் ஈடுபட்டு, இறுதியாக ஒக்டோபர் 21ஆம் திகதியும், 22ஆம் திகதியும் ஜனாதிபதியும் ரணில் விக்கிரமசிங்கவும் முக்கிய சந்திப்புக்களை நடத்தினர். இதைத் தொடர்ந்து 23ஆம் திகதி ஜனாதிபதி, அமைச்சரவையை அவசரமாகக் கூட்டிப் பேசினார். இதன் பின்னணியில் 23.10.2006ஆம் திகதி 1.30 மணிக்கு இரு பிரதான கட்சிகளுக்குமிடையிலான வரலாற்று ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தமானது 2 முதல் 3 வருடங்களுக்கு முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் இரு பிரதான கட்சிகளும் இணைந்து பணியாற்றினால் அது சகல வழிகளிலும் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் நன்மையானதாகவே இருக்கும். இந்த முயற்சியை சர்வதேச சமூகமும் பாராட்டியுள்ளதோடு, அபிவிருத்திப் பணிகளுக்காக உதவவும் முன்வந்துள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு ஆதரவளித்த ஜே.வி.பி.க் கட்சி, தனது 20 அம்சக் கோரிக்கையை ஜனாதிபதி ஏற்க மறுத்தார் என்பதற்காக, ஆதரவை பின்வாங்குவதாக அறிவித்தது.

**இனப்பிரச்சினைக்கான தீர்வு, பொருளாதார அபிவிருத்தி, தேர்தல் முறைமை சீர்திருத்தம், நாட்டைக் கட்டியெழுப்புதல், சமூக அபிவிருத்தி, ஒத்துழைப்புத் தொடர்பான உத்தேச அமைப்பு என்பனவே ஒப்பந்தத்தின் பிரதான அம்சமும் நோக்கமுமாகும்.**

**இந்த ஒப்பந்ததில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர். மைத்திரிபால சிறிசேனாவும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மலிக் சமரவிக்கிரமவும், ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ, எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள் முன்னிலையில் கைச்சாத்திட்டனர்.**

இந்த நிலையில் ஜே.வி.பி.யின் 40 எம்.பி.க்களின் இழப்பால் அரசாங்கம் பலமிழந்தது. எனினும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் ஐ.தே.கட்சியின் உறுப்பினர்கள் இணைவதில் ஆர்வம் காட்டினர். மலையக மக்கள் முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போன்ற இதரக் கட்சிகளும் அரசில் இணைந்து கொண்டன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அரசில் இணையலாம் என்ற பேரப் பேச்சுக்களும் இடம் பெறுவதாகப் பரவலாகச் செய்திகள் வரத் தொடங்கின. இதற்கிடையே ஐ.தே.கட்சி எம்.பி.க்கள் அரசில் இணைவதும் அமைச்சுப் பொறுப்புக்களை வகிப்பதுமாக இருந்தது. இந்தக் கட்சி தாவும் நிலைமை தொடரவும் வாய்ப்புகள் அதிகரித்தன. ஆகவே இந்தப் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காண வேண்டிய அதே நேரம் ஆளும் அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் தமது இருப்பு மற்றும், தனித்துவங்களையும் பாதுகாக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. இவற்றைச் சரி செய்யும் நோக்கத்திலேயே இந்தப் பொது வேலைத்திட்ட யோசனை முன் கொண்டுவரப்பட்டது. இந்த யோசனை இரு கட்சிகளின் தலைமைகளுக்கும், உயர் மட்டத்தினருக்கும் ஏற்புடையதாகத் தோன்றிய போதும், அடுத்தடுத்த

அலசுவது
**- மதியூகி -**

மட்டத்தினருக்கு சந்தேகத்துக்கிடமானதாகவும், நம்பிக்கையற்றதுமாகவே இருந்தது. அது தொடர்பில் தலைமைகளால் விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்தப் பின்னணியில் இம்மாதம் 28ஆம், 29ஆம் திகதிகளில் ஜெனிவாவில் அரசுக்கும், புலிகளுக்குமிடையில் நடக்கவிருக்கும் சமரசப் பேச்சுகளுக்கு இந்த அரசியல் மாற்றம் கூடுதல் ஆதாரமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. இனிப் புலிகள், தென் இலங்கை அரசியல் பற்றி விமர்சிக்க இடமிருக்காது. இந்த நிலையில் புலிகள் தமது தீர்வுத்திட்ட நிலைப்பாட்டை முன்வைப்பதே தேவையாக உள்ளது.

## அதிரடி அய்யாத்துரை



**குடாநாட்டில** பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஒருபக்கம், விலையேற்றம் ஒரு பக்கம் எண்டு சனம் ஒரு காலமும் இல்லாதளவுக்குப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கினம். உது பற்றி முக்கியமானவையிட்டக் கேட்டால் பொருட் தட்டுப்பாடு இருக்குத்தான். ஆனால் பதுக்கல்கள் காரணமாக செயற்கையாகத் தட்டுப்பாடு அதிகரிக்கப்பட்டிருக்குது. உதில சரியான கண்காணிப்பும், நிர்வாகமும் அரச இயந்திரத்தாலை நடத்தப்பட இல்லை எண்டும் சொல்லினம். அதுபோக, நாளுக்கு நாள் படுகொலைகள் தொடருது. உதாலை தங்களுக்குப் பாதுகாப்புத் தாங்கோ எண்டு கேக்கிறவையை, பாதுகாப்பான இடமெண்டால் சிறைச்சாலைதான் எண்டு தடுத்து வச்சுப் பாதுகாப்புக் குடுக்கினமாம். பாத்தியளோ, சிறையில இருக்கிறவைக்கு விடுதலை தாங்கோ எண்டுவினம். தங்களை சிறையில அடைக்காமல் வெளியால சுதந்திரமாக நடமாட விடுங்கோ எண்டுவினம். இப்ப நிலைமை தலைகீழா மாறிப்போயிட்டுது. தங்கட உயிரைப் பாதுகாக்க சிறைக்குள்ள போடுங்கோ எண்டு நிலைமை மாறிட்டுதுங்கோ...

அரச படையளாலை ஆபத்து எண்டால் சிறையை நடத்திறதும் அரசுதான் அப்புடியெண்டால் ஆபத்து யாராலை எண்டதைத் தான் யோசிக்க வேணுமுங்கோவ்...

**வன்னியில** இருந்து மகளுக்குக் கல்யாணம் கட்டிக் கொடுக்கிறதுக்காக தலைநகருக்கு வந்திருந்த ஒரு ஆசிரியரைச் சந்திச்சனுங்கோ. அவர் தலைநகர் வாசியாக மாறிப்போயிருந்தார். "என்னங்கோ வாழ்க்கை எப்பிடிப் போகுது?" எண்டு கேட்டதுக்கு அவர், "வன்னி ஒரு சிறை. அங்க 16 தொடக்கம் அறுபது வரைக்கும் தடியைத் தூக்கிக் கொண்டு பயிற்சிக்குப் போகவேணும். இல்லாட்டில் வில்லங்கம்தான். ஒரு நாள் சனம் 'ஏன் எங்களையெல்லாம் கொல்லக் குடுக்கவே பயிற்சி எடுக்கச் சொல்லுறியள்' எண்டு கேட்டதுக்கு அடுத்த நாள் காலை நாலைஞ்சு பேர் வந்து அப்புடிக் கதைச்சவையைத் தூக்கிக் கொண்டு போயிட்டினம்...அதுபோலை கம்பு, தடியள் கூட வேண்ட வேணுமெண்டால் அவையிட்ட தான் வேண்டணும். தங்கம் வரைக்கும் அவைதான் பிஸினஸ் பண்ணினம். ஒட்டு மொத்தத்தில அவையின்ர தாகம் பிஸினஸ் தாகமாயிட்டுதுங்கோ. பாவம் சனங்கள் தான்!" எண்டு ஏதோ சுமையை இறக்கி வைக்குமாப்போல சொல்லி முடிச்சாருங்கோ. பிறகு தான் தெரிஞ்சுது, உவையள் உப்பிடி உளறுறதால்தான் வன்னிக்க இருந்து யாரையும் ரெண்டெழுத்தார் வெளியால போக அனுமதிக்கினமில்லையெண்டு.

"**சும்மா** இருந்த சங்கை ஊதிக் கெடுத்த" கதையாக காலியில வாழ்ந்த தமிழ் மக்களின்ர கதை ஆகியிருக்குதுங்கோ.

சும்மா நாளிலேயே ஒரு தமிழர் அந்தப் பகுதியில போய் தமிழ் பேச முடியாது. இருந்தும் தமிழ் மக்கள் சிங்கள சனத்தோடை பழக்கப்பட்டு வாழ்ந்திச்சினம். அந்த நிம்மதியைக் குலைச்சுப் போட்டினம். போன வாரம் ரெண்டெழுத்தார் காலி கடற்படை முகாமைத் தாக்கிய பின்னர், பெரும்பான்மையின தெருச் சண்டியன்களும், கொள்ளைக் கோஷ்டிகளும் சேர்ந்து தமிழ் சனத்தின்ர கடை, வீடுகளை உடைச்சு தங்கட கைவரியைக் காட்டியிருக்கினம். பாவம் சனம், தங்கட கண் முன்னாலையே தங்கட கடைகளும், சொத்துக்களும் சூறையாடப்படுவதைப் பார்த்துக் கொண்டிருந்திருக்கினம். என்னதான் சமாதானம் பற்றி யாரும் பேசினாலும் அடி மட்டத்தில இருக்கிற நாசகாரச் சக்திகளின்ர உப்பிடியான வேலைகள் மக்கள் மனதில இன முரண்பாட்டையும் குரோதத்தையும் தூண்டத்தானுங்கோ செய்யும். பயங்கரவாதம் செய்யிற தாக்குதல்களுக்கு அப்பாவித் தமிழ் மக்கள்தான் பலியாகுவதெண்டொரு நிலைமை இனியும் இருக்கக் கூடாதுங்கோ. உது தொடர்பில ஆளும் அதிகாரத் தரப்புகள் சரியான செயற்பாடுகளைக் கொண்டிருக்க வேணுமுங்கோ. மக்கள் வேறை. பயங்கரவாதம் வேறையெண்டதைப் புரிஞ்சு கொண்டால் சரிதானுங்கோ.


**ரெண்டு** பிரதான கட்சிகளும் ஒரு பொது வேலைத்திட்டத்துக்கு உடன்பட்டு கையெழுத்தும் போட்டிட்டினம். ரெண்டுபேரும் அரசாங்கம் எண்டால் எதிர்க்கட்சி நாங்கள்தான் எண்ட உரிமையைக் கைப்பற்றுவதற்காக சிவப்புச் சட்டைக் கட்சி யார் சட்ட வல்லுனர்களை ஆலோசனை கேட்டிருக்கினமாம். சிவப்புச் சட்டைக் காரக் கட்சி எதில வீக்கெண்டாலும் சட்டத்தைக் கையாளுறதில வலு கெட்டிக்காரங்கள் எண்டு காட்டிப் போட்டினம். உந்தக் கெட்டித்தனம் வடக்கு - கிழக்கை இரண்டு மாகாணங்கள்தான் எண்டு காட்டிறதில அவைக்குக் கை குடுத்துது. ஆனால் உதே கெட்டித்தனம் உந்த எதிர்க்கட்சிப் பதவி விஷயத்தில கை கொடுக் குதோ, இல்லையோ எண்டதைப் பொறுத்திருந் துதான் பார்க்க வேணுமுங்கோ. சிவப்புச் சட்டைக்காரர் உந்தக் கணக்குப் பார்க்கினம். ஆனால் பச்சைக் கட்சிக் காரர் இவையின்ர பொலிரிக்ஸ் தளத்தையே தகர்க்கிற வேலைத் திட்டத்தைப் பற்றி யோசிக் கினம் போல. அதின்ர ஒரு முன் நகர்வுதான் ஆளுந் தரப்போடை போட்ட எக்ரிமெண்ட் எண்டும் சொல்லினம். உந்த இணைந்த செயற்பாடு வெற்றியளிக்குமாக இருந்தால் சிவப்புச் சட்டைக்காரரின்ர பேரினவாதக் கோஷம் பின்னுக்குத் தள்ளப்படும் எண்டுதான் வல்லுனர்கள் சொல்லினமுங்கோ...

**வடக்கு** - கிழக்கை இரண்டு மாகாணங்கள் எண்டு சட்டம் சொல்லிப் போட்டுது. அதுக்காக யாரும் கவலைப்படத் தேவையில்லையுங்கோ. ஏன் தெரியுமோ? உந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு தமிழ் பேசிற மக்கள் நிம்மதியாக வாழ வேணும் எண்டால், வடக்கையும் - கிழக்கையும் இணைச்சு புதுச்சட்டம் இயற்றப்பட வேணுமுங்கோ. தீர்வு காண புதுச்சட்டம் இயற்றப்பட வேணுமெண்டதும், அதிகாரத்தைப் பகிரவேணும் எண்டதும் அவசியமான அவசியம் எண்டு வீணைக் கட்சிக்காரர் வலு உறுதியாச் சொல்லினம். உதே நிலைப்பாடுதான் தமிழரின்ர போராட்டத்தோடை சம்பந்தப்பட்ட அனைவரின்ரையும் நிலைப்பாடும். உதில அவரவர் தங்கட கொள்கையை எப்புடி பிரசன்ட் பண்ணினம் எண்டதுதானுங்கோ முக்கியம். ரெண்டெழுத்தார் உதுக்காக பயங்கரவாதத்தைப் பிரயோகிச்சினம். அதாலை எல்லாராலை யும் வெறுக்கப்படுகினம். வீணைக் கட்சிக்காரர் ஜனநாயகமாகப் பக்குவமாகச் சொல்லினம். அதாலை அவை விரும்பப்படுகினம். யதார்த்தம், சட்டம், உண்மை இவைக்கு முன்னாலை ரெண்டெழுத்தாரின்ர பயங்கரவாதம் தொடர்ந்து தோத்துப் போகுதெண்டு நான் சொல்லயில்லையுங்கோ, வாத்தியார் சொல்லுறாருங்கோ...

பிரியமான உங்களுக்கு,
போவோம் ரசிப்போம் பகுதியைத் தீபாவளி வரை எழுதுவது என்றுதான் நினைத்திருந்தேன். பிறகு வேறு விடயங்களைப் பற்றிப் பார்க்கவும் எண்ணியிருந்தேன். ஆனால் இன்று எல்லோருடைய எழுத்துமே அரசியல் கலப்போடும், விருப்பு வெறுப்புகளோடும் எழுதப்பட்டுக் கொண்டிருப்பதால் எனக்கு அதில் உடன்பாடில்லை. என் எழுத்துக்களின் நோக்கம் கண்டு கொள்ளப்படாதவர்களினதும், புறக்கணிக்கப்பட்டவர்களினதும், ஆற்றல் உள்ளவர்களினதும் உற்சாக ஊற்றாக அமைய வேண்டும் என்பது மட்டும் தான். ஆகவே தான் எழுதுவதற்கு எத்தனையோ விடயங்கள் இருந்தும், நம்மால் கண்டு கொள்ளப்படாதவைகளைத் தெரிவு செய்து எழுதுகிறேன்; அதுவும் முடியும் என்று வலியுறுத்துகிறேன். இதுவரையான என் எழுத்துக்களுக்கு நான் தெரிவு செய்த தலைப்புகளும், அவை பற்றி எழுதிய விதமும் - பார்வையும், உங்களை இந்தளவுக்குக் கட்டிப் போட்டிருக்கும் என்று நான் நினைக்கவே இல்லை. நீங்கள் தரும் உற்சாகம், அன்பு என்பவற்றுக்குக் கைமாறாக போவோம் ரசிப்போம் பகுதியை இன்னும் கொஞ்சம் நீடித்துக் கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன். உங்கள் விருப்பங்களுக்குப் பின்னால் நானும் தொடர்ந்து பயணிப்பேன், பயணிப்போம்.

# மரம்



தருவது
-தேசன்

மனிதனைப் பற்றி எழுதுவதற்கே இந்த ஆயுள் போதாத போது மரங்களைப் பற்றி எழுதுவதற்கு என்ன அவசரம் என்று ஒரு நிமிடம் நினைத்தேன். ஆனால் மனிதர்களுக்கும் மரங்களுக்கும் இருக்கும் நெருக்கம் பற்றியும் - உறவு பற்றியும் எழுதாமல் விடப்பட்டுவிடுமோ என்ற அச்சமும் எழுந்தது. ஆக மரங்களைப் பற்றி எழுதுவது மனிதனைப் பற்றி எழுதாததாகிவிடாது.

மண் உயிர்ப்போடு இருப்பதற்கு மரம்தான் அவசியம். நூற்றாண்டுகளைத் தாண்டி வாழுகின்ற மனிதனைப் போற்றுகின்ற யாரும், நூற்றாண்டுகள் தாண்டி வாழும் மரங்களைப் போற்றுவதில்லை. மரம் மனிதனின் பிறப்புக்கும் - இறப்புக்கும் இடைப்பட்ட வாழ்வில் தன்னாலான அத்தனை வழியிலும் இணைந்து விடுகிறது.

காடுகளை வெட்டி மரங்களை அழிக்க, அழிக்க பூமியில் மழை பொய்த்துப் போகிறது. பசுமையாகத் தெரியும் பூமியில் மரங்கள் இல்லாத மணல் பகுதியும், மலைப்பகுதியும், பூமிக்குப் பிடித்த சொறி சிரங்கு போல்தான் தோற்றமளிக்கிறது. மரம் பற்றிய வைரமுத்துவின் கவிதை ஒன்று படித்தேன். அதில் தூங்கத் தொட்டில், நடக்க கை வண்டி, படுக்கக் கட்டில், தலையணைக்குப் பஞ்சு, படிக்கப் பேப்பர், எழுதப் பென்சில், தூக்கப் பல்லக்கு அல்லது பாடை, எரிக்க விறகு, உண்ணப் பழம், உறங்க வீடு, எல்லாம் மரம் தான் மரம்தான் எல்லாம் மரம்தான். மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான் என்று எழுதியிருந்தார்.

அந்தக் கவிதையைப் படிக்கும் வரை மரங்கள் பற்றி அவ்வளவுக்கு சிந்திக்கவில்லை தான். மரங்கள் பற்றி சிந்திக்கத் தூண்டிய கவிஞருக்கு என் மரியாதை என்றும் உண்டு.

மரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள காடுகளுக்குச் செல்ல முடியாது. அதற்குக் காரணம் எழுத விரும்பவில்லை. நான் மரங்களைத் தெரிந்து கொள்ள கண்டி பேராதெனிய பூங்காவுக்கும், நுவரெலியா, ஹக்கல்ல பூங்காவுக்கும் தான் போனேன். அங்கே பூக்கள் புன்னகையோடு வரவேற்றன. பெரிய மரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளப்போன என்னை சின்னச் செடிகள் தான் முதலில் வரவேற்றன.

நூற்றாண்டுகள் தாண்டி வயதுபோய், பட்டை கிளம்பி, கிளை ஒடிந்து நிற்கும் மரங்களைப் பார்த்து அதிசயிப்பதா, கவலைப்படுவதா என்று தெரியவில்லை. அடிப் பெருத்து இராட்சத வேர்களை மண்ணுக்கு வெளியில் துருத்திக்கொண்டு சில மரங்கள், கிளைகளைப் பரப்பி, கூடாரம் போல் பூமிக்குக் குடை பிடித்துக்கொண்டு சில மரங்கள், பறவைகளின் சரணாலயமாகிப் போய் அவற்றின் ஆரவாரிப்பில் தன்னையே மறந்து கிளைகளையெல்லாம் வாடகையில்லாமலே எழுதிக் கொடுத்துவிட்ட திருப்தியோடு சில மரங்கள், நடப்பட்ட காலத்திலிருந்தே வரிசையில் ஒற்றைக் காலில் நிற்கும் பிடிவாதம் பிடித்த சில மரங்கள். இப்படி ஒவ்வொரு மரமும் ஒவ்வொரு கதையோடும், ஒவ்வொரு வரலாறோடும் பூமியின் விருட்சமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன. மரங்களைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளவில்லை.

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)


# விளம்பரப் பகுதி

## தெய்வீக மருத்துவம்

சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Goverment Approved Charity Regd No - HA/4/BT/219

**டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P.J.P.(SL)**

கிரக தோஷம், காலப்பகையால் பிரிந்த காதலர்கள், கணவன் – மனைவி ஒன்று சேர, வெறுத்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீய பழக்கம், மனிதத் தீமை, மருந்தீடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ, பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைசக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது.

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி, ஃபக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு, உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்.)

Theiveegam Srilanka
Head Office
Batticaloa

தெய்வீகம் ஸ்ரீலங்கா
தலைமையகம்
மட்டக்களப்பு


Tele/Fax : 065-2224825, +94777032844. Balu Sothidar @ hotmail.com.

"வாழ்வினிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
"DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE"







# மலையாள மாந்திரீகம்

உங்கள் காரியங்கள் நினைத்தது நினைத்தப்படி நிறைவேற வேண்டுமானால் என்னை சந்தியுங்கள். எத்தனை பேர்களிடம் சென்று மாந்திரீக பரிகாரம் செய்து தோல்வி கண்டவர்கள் என்னை தேடி வர காரணம் என் கை ராசியே. வாழ்க்கை பிரச்சினையாக இருந்தாலும் சரி, தீராத நோயாக இருந்தாலும் சரி என்னை கண்டு மாந்திரீக பரிகாரம் செய்தால் முன் வினை பாவகரும தோஷங்கள் நீங்கி விடும்.
வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி உரையாடல் வசதி உண்டு

## எனது தனித்தன்மை என்ன

உண்மைச் சேவையை உறுதி படுத்தும் முகமாக கடந்த 39 வருடங்களாக எனது புகைப்படத்தை மக்களுக்கு அறிமுகம் செய்கின்றேன். இது மட்டுமா? வாங்கும் பணத்திற்கும். (GURANTY CARD) வழங்குவதும் இது எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு எந்த மாதம் என்றெல்லாம் ஆணிவேறு அக்குவேராக அன்பர்களின் முகத்தை பார்த்த மாத்திரம் கூறிவிடுவேன்.

## இனி உங்கள் பிரச்சினை என்ன?

வாருங்கள் உங்கள் குறைகளை கூறுங்கள். இவையுடன் வெளிநாட்டவர்களுக்கென அதி விஷேட சாமகால பூசை நடைபெறுவது என்றால் அது அன்னை ஸ்ரீ துர்க்கையின் கருணையே
என்னால் நன்மை பெற்றவர்கள் என்ன கூறுகிறார்கள்.

பரம்பரை பரம்பரையாக 39 வருடகாலமாக தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக

**சுவிஸ் அன்பரின் கணவன்,மனைவி பிணக்கு தீரல் மடல்**
மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசிர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 7000 முஆ க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**சுவிஸ் அன்பரின் மடல் ஸ்ரீ துர்க்கையம்மனின்ச க்தியால் பேசும் மழலை**
மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானகோடி நன்றிகள்.

**ஜேர்மன் அன்பரின் மடல் மகளின் திக்குவாய் குணமாகியது**
அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்.

**லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்**
பெறுமதிப்புக்குறிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் அருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்**
பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

**குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம்16 நாளில் வெற்றி**
தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா எனது சகோதரிக்கு திருமணம் தடைபட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**பிரான்ஸ் அன்பரின் மடல் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயனம் வெற்றி**
அன்புக்கும் மதிப்பிற்குறிய ஐயா. வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் மிகவும் கஸ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்

**இத்தாலி அன்பரின் மடல் சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி**
வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய நேர்ந்த சமயம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான் என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல் போதை அடிமைதனத்திலிருந்து விடுபட்டவர்**
அன்புக்குறிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதை பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்தில் புது ஒளியேற்றினீர்கள் நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் ஜாதகத்தில் குறியது பலிதம்**
மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறிந்திருந்த எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் என கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தேன் என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள சேவை தொடரட்டும்.

**யாழ்ப்பாண அன்பரின் மடல் அதிசய அக்னி குண்டல பூஜை**
மதிப்பு மரியாதை கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்த்தாரையும் மறவாது மாதம் தோறும் விசேஷமாக நடைபெறும். அக்கினிகுண்டல பூஜையில் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகின்றோம் ஐயா.

**கொழும்பு அன்பரின் மடல் அச்சொட்டான கைரேகை பலன்**
அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**கண்டி அன்பரின் மடல்**
பல சிரமங்கள் மத்தியில் இருந்தேன். தினமுரசில் உங்களுடைய அற்புத சேவையைப் பார்த்து உடன் தொடர்பு கொண்டேன். உடன் எனது ஜாதகத்தைக் கணித்து என் வாழ்வில் நடப்பது நடக்க இருப்பது பற்றி மிகத் தெளிவாக கூறியிருக்கிறீர்கள். என் உள்ளம் நிறைந்த நன்றிகள். தங்களின் பரிகாரமான செயலால் என் மனம் அமைதியடைந்து சந்தோஷத்துடன் இருக்கிறேன். வாழ்க ஐயாவின் சேவை

**இனி உங்கள் மகிழ்ச்சிக்கு**
அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கபோவது இவையனைத்தும் ஜாதகம் மூலமாகவோ? கைரேகை மூலமாகவோ? தெட்டத் தெளிவாக உங்கள் பலாபலன்களை அறிந்து சிறப்பான் மகிழ்ச்சியான, குபேரவாழ்வு பெற என்னை நேரில் சந்தியுங்கள். உண்மையென்பது உண்மையே.

உலக மளையாள மாந்திரீக சக்ரவர்த்தி பேராசிரியர்
டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N.) JP PROF. DR. P.K. SAMY (J.D.G.A.N.) JP

ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாட்ட பீடம்
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM. No- 162 KOT AHENA STREET COLOMBO 13
Tel-011-2470615, 011-2342463, 011-2342464,011-2431137

FAX-0094-11 2344831 Email- drpksamy@sltnet.lk Web:- www. drpksamy .com

எமது கிளை நிறுவனம் நுவரெலியாவில் மட்டுமே.
No-33,Daily Fair Complex, Kandy Road Nuwara-Eliya.
Tel: 052-2222508

## இன்னொருவர் பார்வையில்

# பிரிட்டனின் சகிப்புத்தன்மை பயங்கரவாதத்திற்குத் தீனி போடுகிறது

**லண்டனைத்** தளமாகக் கொண்டியங்கும் 'விஜில்' என்ற பயங்கரவாத எதிர்ப்பு அமைப்பொன்று, புலிகள் இயக்கத்துக்கும் பிரிட்டிஷ் அரசியல்வாதிகளுக்குமிடையில் வளர்ந்துவரும் தொடர்புகளை அண்மையில் அம்பலப்படுத்தியிருந்தது. பல்துறை தொழில்சார் நிபுணர்களைக் கொண்ட இந்த அமைப்பு, விடுத்த விசேட அறிக்கையொன்றில் பிரிட்டனில் புலிகள் இயக்கம் பெருந்தொகைப் பணம் சேகரிப்பது உட்பட்ப் பல சட்டவிரோத நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியிருந்தது.

பிரிட்டனிலும் கனடாவிலும் இந்த இயக்கத்தின் நிதிசேகரிப்புகள் பற்றிய தகவல்களை வெளியிட்டிருக்கும் அந்த அறிக்கை, 'பிரிட்டிஷ் தமிழ் சங்கம்' என்ற பெயரில் புலிகள் லண்டனிலுள்ள தமது மறைமுக தலைமையகத்தினூடாக, நற்வெஸ்ற் வங்கியிலுள்ள தமது கணக்குக்கு வைப்புகளைச் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்ததையும் எடுத்துக்காட்டியது. அங்கு வாழும் தமிழ் மக்களின் குடும்ப விலாசம், வருமானம், இலங்கையிலுள்ள அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் பற்றிய விபரங்களையெல்லாம் தமது அங்கத்தவர்களுக்கு வழங்கும் கேள்விக் கொத்தொன்றின் மூலம் பெற்றுக் கொள்கின்றனர். எவராவது பணம் செலுத்தத் தவறினால், இலங்கையில் வாழும் அவரது குடும்ப உறுப்பினர்கள் கடத்திக் கொல்லப்படுவார்கள் அல்லது பணம் வழங்க மறுப்பவர் ஆபத்தை எதிர்நோக்க வேண்டியேற்படும். இவ்வருடம் ஜனவரி மாதம் வட மேற்கு லண்டனிலுள்ள வில்லெஸ்டன் ஒழுங்கையில் 'அப்னா பசார்' என்ற பெயர் கொண்ட பலசரக்கு கடையொன்றை நடத்தி வந்த சுப்பிரமணியம் சிவகுமாரன் என்ற இளைஞர் மர்மமான சூழ்நிலைகளில் கொல்லப்பட்டார். புலிகளாலேயே இவர் கொல்லப்பட்டாரென்று குற்றம் சாட்டப்படுகிறது. புலி இயக்கப் பெடியன்களுக்கு இவர் ஒழுங்காக பணம் செலுத்தி வந்ததை பொலிஸார் பின்னர் கண்டு பிடித்திருக்கின்றனர். இந்த ஒழுங்கான பணம் செலுத்தலில் ஏற்பட்ட இடைத்தகராறே இவரது மரணத்திற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

புலிகளின் பகிரங்க பிரசார நடவடிக்கைகள் பற்றியும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. புலிகள் இயக்கத்திற்கு தடை விதிக்கப்பட்டிருந்த போதிலும் லண்டனில் இரண்டு பகிரங்க நிகழ்வுகளை வருடா வருடம் ஒழுங்காக அவர்கள் நடத்தி வருகின்றனர். பிரிட்டனிலும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டுள்ள போதிலும் கடந்த வருடம் நவம்பர் மாதம் 27ஆம் திகதி வெம்ளி அரங்கில் பிரபாகரனின் 50ஆவது பிறந்த தின விழாவை இவர்கள் கொண்டாடினர். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாக இந்திய உச்சநீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்ட பிரபாகரனை சர்வதேச பொலிஸ் பிரிவான இண்டர் போல் தேடிவருவது குறிப்பிடத்தக்கது. இந்த பிறந்த தின நிகழ்வில் பிரபாகரனைப் புகழ்ந்து நாட்டிய, நாடக நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. புலிகளின் தற்கொலைதாரிகளான கரும்புலிகளைக் கௌரவப்படுத்தும் வகையில் மெழுகுவர்த்திகளும் ஏற்றப்பட்டன. இந்த நிகழ்வில் பிரதான பேச்சாளராக அன்ரன் பாலசிங்கம் கலந்து கொண்டார். லண்டனிலுள்ள கிறீன்போர்ட் பகுதியில் ஆடம்பரமாக வாழும் அன்ரன் பாலசிங்கம், பிரிட்டிஷ் பிரஜையாவார். அவர் இங்கிருந்து கொண்டுதான் புலிகளின் சித்தாந்தங்களை மேற்குலகுக்குப் பிரசாரப்படுத்தி வருகிறார். பிரிட்டனில் இவரது செயற்பாடுகளைப் பல்வேறு காரணங்களுக்காக அதிகாரிகள் அசட்டை செய்து வருகின்றனர்.

இவ்வருடம் ஜூலை மாதம் 25ஆம் திகதி லண்டன் ஹைட்பார்க்கில் புலிகள் இயக்கம் கறுப்பு ஜூலை நினைவாக நிகழ்வொன்றினை ஏற்பாடு செய்திருந்தது. பிரபாகரனின் 20 அடி உயரமான கட் அவுட் கூட்ட மேடையில் வைக்கப்பட்டிருந்தது. பிரிட்டிஷ் தமிழ் இளைஞர் அமைப்பு என்று தம்மை அழைத்துக் கொள்ளும் புலிகளின் முகவரமைப்பு ஒன்றினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தொழிற்கட்சியின் ஹரோ தொகுதி உறுப்பினர் தயா இடைக்காடர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். இந்தக் கூட்டத்திற்கான அனுமதி ரோயல் பார்க் பொலிஸாரிடமிருந்து பெறப்பட்டிருந்தது. ஹரோவைச் சேர்ந்த தொழிற்கட்சி உறுப்பினரான திருமதி சசிகலா



லண்டனில் இடம்பெற்ற புலிகள் இயக்கத்தின் நிகழ்வொன்றின் போது...

என்பவராலும் சவுத்வார்க் தொழிற்கட்சி உறுப்பினரான திருமதி எலிசா பாக்கியதேவி மான் என்பவராலும் இந்த கூட்டத்தை நடத்துவதற்கான அனுமதி பெறப்பட்டிருந்தது. இவர்கள் இணைந்து பிரிட்டிஷ் தமிழ் கவுன்சிலர்கள் என்ற பெயரில் புலிகளின் முகவரமைப்பு ஒன்றினை உருவாக்கியுள்ளனர். ஹரோ, சவுத்வார்க், ஈஸ்ட் ஹாம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்த அப்பகுதி மக்களால் இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும் தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாக்கவே தாம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இவர்கள் கூறுகின்றனர். தயா இடைக்காடர் போன்றோர் அமைச்சர் கரேட் தோமஸ் மற்றொரு தொழிற் கட்சி உறுப்பினரான ரொபர்ட் எவான்ஸ் ஆகியோருடன் நெருக்கமாகச் செயற்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

2001ஆம் ஆண்டு பிரிட்டனில் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டதையடுத்து இவர்களெல்லாம் தமது செயற்பாடுகளை ஒரே ஒரு விதத்தில் மட்டுமே மாற்றிக் கொண்டுள்ளனர். அதாவது தமது அலுவலகத்தின் பெயரையும் தமது முகவரமைப்புகளின் பெயர்களையும் மட்டுமே மாற்றிக் கொண்டுள்ளனர். ஆனால் தொடர்ந்தும் தமது பழைய செயல்களிலேயே ஈடுபட்டு வருகின்றனர்.

புலிகளின் முகவர்கள் இன்று கிரடிற் கார்ட் மோசடி, நிதி மோசடி போதைவஸ்துக் கடத்தல், சர்வதேச போதைவஸ்து வியாபாரம், வர்த்தக ரீதியிலான கப்பல் சேவை போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர். பிரிட்டன், கனடா போன்ற நாடுகளில் சேகரிக்கப்படும் பணத்தையே பெரும்பாலும் இலங்கையில் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு புலிகள் இயக்கம் பயன்படுத்தி வருகிறது.

பிரிட்டிஷ் மெட்ரோ பொலிட்டன் பொலிஸின் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு புலிகளின் இந்த நடவடிக்கைகள் பற்றி எல்லாம் தமக்குத் தெரியுமென்று கூறுகிறது. ஆனால் இஸ்லாமியப் பயங்கரவாதம் பற்றிய செயற்பாடுகளிலேயே அக்கறை செலுத்த வேண்டிய முக்கிய தேவையிருப்பதால் தமக்குப் போதிய ஆளணியினர் இல்லையென்று இவர்கள் கூறிக் கொள்கின்றனர். பிரிட்டன், ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா, கனடா, இந்தியா, உட்பட பல நாடுகள் புலிகள் இயக்கத்தைத் தடை செய்திருந்தாலும் இந்த மெத்தனமான போக்கு பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்துமென்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

பிரிட்டனில் உள்நாட்டு பந்தோபஸ்துக்கு அச்சுறுத்தலாக விளங்கும் இஸ்லாமிய பயங்கரவாதக் குழுக்களுக்கும் ஏனைய பிராந்தியங்களுக்கு குறிப்பாக தெற்காசியாவுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் ஏனைய பயங்கரவாதக் குழுக்களுக்குமிடையில் வித்தியாசங்களைப் பார்ப்பது வேதனைக்குரியது. லண்டனிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழ் குழுக்களின் வன்செயல்கள் தங்குதடையின்றி தொடர்ந்தும் இடம் பெற்றுவருகின்றன. லண்டன், டூட்டிங்கிலுள்ள மக்டொனாட்ஸில் இவ்வருடம் பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி இலங்கைத் தமிழர் ஒருவர் குத்திக் கொல்லப்பட்டார். இதற்கு நான்கு தினங்களுக்கு முன்னர் டூட்டிங் பொலிஸ் நிலையத்துக்கு வெளியே மற்றொரு இலங்கைத் தமிழர் வாளால் வெட்டப்பட்ட சம்பவத்துக்குப் பழிவாங்கும் முகமாகவே இந்தக் கொலை இடம் பெற்றுள்ளது. 23 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் புலிகளுக்கு எதிராக ஏற்பட்ட பிரச்சினைகளின் வெளிப்பாடாகவே பிரிட்டனில் இத்தகைய தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதாக பிரிட்டிஷ் பொலிஸார் கூறுகின்றனர். கடந்த வருடம் மட்டும் இலங்கைத் தமிழர்கள் சம்பந்தப்பட்ட 16 படுகொலைகள் பிரிட்டனில் இடம்பெற்றிருக்கின்றன.

> **''பிரிட்டனின் சகிப்புத் தன்மை பயங்கரவாதத்திற்குத் தீனி போடுகிறது - பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர்கள்'' என்ற தலைப்பில் கடந்த 23ஆம் திகதி 'த ஐலண்ட்' ஆங்கிலத் தினசரியில் வெளியான கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது.**

பிரிட்டன் மெட்ரோபொலிட்டன் பொலிஸாரின் விசேட குற்றத்தடுப்பு பிரிவு இரண்டு தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. 'ஒப்பரேஷன் என்வர்', 'ஒப்பரேஷன் குவாட்ரன்' என்ற பெயரில் நடத்தப்பட்ட இத்தேடுதல் நடவடிக்கையின் போது லண்டனிலும் லண்டன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் நூற்றுக்கணக்கான புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர். நிதிப் பிரச்சினை காரணமாக இந்த தேடுதல் வேலைகள் பின்னர் கைவிடப்பட்டன. இஸ்லாமியப் பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டதாலேயே வேறு பயங்கரவாதக் குழுக்கள் மீதான தேடுதல் நடவடிக்கைகள் கைவிடப்பட்டன.

சர்வதேச ரீதியாக தேடப்பட்டு வருபவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். அவரின் மகன், சார்ள்ஸ் அன்ரனி என்பவர் தற்போது பெல்பாஸ்ட் பல்கலைக்கழகத்தின் மாணவராகவுள்ளார். ஐ.ஆர்.ஏ.என்றழைக்கப்படும் ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் முக்கியஸ்தரான மார்ட்டின் மக்கின்னஸ் என்பவரே பிரபாகரனின் மகனுக்கு இந்தப் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுத் தந்திருக்கிறார்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நோக்கில் மார்ட்டின் மக்கின்னஸ் இதனைச் செய்திருக்கிறார்.

1995ஆம் ஆண்டு முதல் புலிகளின் மூன்று பிரிட்டிஷ் நன்கொடை அமைப்புகளும் தமிழ் வீடமைப்பு சங்கமும் முப்பது இலட்சம் ஸ்ரேலிங் பவுண்களைச் சேகரித்திருக்கின்றன. பிரிட்டனில் தர்மஸ்தாபனங்களாகவும் வீடமைப்புச் சங்கமாகவும் இவை பதிவு செய்யப்பட்டிருப்பதால் உள்ளூர் மற்றும் மத்திய அரசிடமிருந்து பெரும்பாலான நிதியுதவியை இவர்கள் பெற்றிருக்கிறார்கள். தமிழ் அகதிகள் செயலணிக் குழு 78,450 ஸ்ரேலிங் பவுண்களை பிரிட்டிஷ் தேசிய லொத்தர் சபையிடமிருந்து மானியமாகப் பெற்றுள்ளது. 1998ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2ஆம் திகதி இந்த நிதியுதவி வழங்கப்பட்டது. தமிழ் அகதிகள் கல்வி மற்றும் பயிற்சி நிலையம் 1999ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதி 1,55484 ஸ்ரேலிங் பவுண்களை பிரிட்டிஷ் தேசிய லொத்தர் சபையிடமிருந்து மானியமாகப் பெற்றிருக்கிறது. இந்த அகதிகள் நிலையத்தில் தான் புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ பேச்சாளரான அன்ரன் ராஜா பணியாற்றி வருகிறார். மூன்று வருடங்களுக்கு இந்த மானியம் வழங்கப்பட்டது.

1995ஆம் ஆண்டு முதல் சுமார் 25,00000 ஸ்ரேலிங் பவுண்கள் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு என்ற போர்வையில் நன்கொடையாக வரிகள் ஏதுமின்றி பிரிட்டனிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு அறிவித்திருக்கிறது. 1995ஆம் ஆண்டு முதல் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 30,00000 ஸ்ரேலிங் பவுண்களை சேகரித்திருக்கிறது. இதன் ஊழியர்கள் ஏனைய இரு தர்மஸ்தாபனங்களிலும் தமிழ் வீடமைப்புச் சங்கத்திலும் பணி புரிவதால் இவர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டிய தேவை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்குக் கிடையாது. பிரிட்டிஷ் வரியிறுப்பாளர்களின் பணத்திலேயே இந்த நீதி இலங்கையிலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பெறுமதி சேர் வரி செலுத்தாமலேயே பிரிட்டனில் மூன்று மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சேகரித்து 1995ஆம் ஆண்டு முதல் 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஸ்ரேலிங் பவுண்களை பிரிட்டனுக்கு வெளியே அனுப்பி வைத்துள்ளது. நன்கொடை ஸ்தாபனம் என்ற பெயரை மோசடி முறையில் பெற்றுக் கொண்டே புலிகள் இயக்கம் மோசடி வேலைகளில் ஈடுபட்டிருக்கிறது.

இந்தக் குழுக்கள் ஏதோ ஒரு அளவுக்காவது தர்மப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. வன்னிக்காடுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சில அகதி நிவாரணப் பணிகளைச் செய்தும் இருக்கிறது. ஆனால் புலிகளின் தீவிர செயற்பாட்டாளரான சார்ள்ஸ் சுப்பிரமணியம் என்பவர் கொற்ஸ்பிரிங் என்ற புலிகளின் சஞ்சிகையில் உண்மையை எழுதியுள்ளார்.

புலி இயக்கத் தலைவர் பிரபாகரனின் யோசனையில் உதித்தவையே இந்த தர்மஸ்தாபனங்களாகும். ஆனால் வன்னிக் காடுகளில் நிவாரண வேலைகளுக்கெனச் செலவழிக்கப்படுவது மிகக் குறைந்த தொகையே. மோதல்கள் இடம் பெறும் பகுதிகளில் செயற்படும் அகதிகளுக்கான ஐ.நா.உயர்ஸ்தானிகராலயம், செஞ்சிலுவைச் சங்கக் கமிட்டி, ஒக்ஸ்பாம் ஆகியவற்றில் நிவாரணப் பணிகளுடன் ஒப்பிடுகையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிவாரணப் பணிகள் மிகவும் குறைவானவையே. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் புலிகள் இயக்கத்துடன் கொண்டிருக்கும் தொடர்புகளை இந்தத் தன்னார்வத் தொண்டர் நிறுவனங்கள் தெரிந்து கொண்டிருப்பதால் அவற்றுடன் சேர்ந்து இயங்க மறுக்கின்றன. ஆனால் நம்பிக்கையைப் பெறுவதற்காக யுனிசெப், கெயார், எம்.எஸ்.எப்.போன்ற தன்னார்வத் தொண்டர் நிறுவனங்களுடன் சேர்ந்து பணியாற்றுவதாக தமிழர் புனர்வாழவுக் கழகம் கூறிக் கொள்கிறது.


ஆயுதக் கொள்வனவுக்காக நிதி சேகரிக்கும் தனது முக்கிய நோக்கத்தை மறைப்பதற்காகவே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தர்ம காரியங்களில் ஈடுபடுவதாகக் கூறிக் கொள்கிறது. கனடாவின் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு தொடர்பான செனட் கமிட்டியின் விசேட நிபுணரான டொன் கிரேஸி இதனைத்தான் கூறினார். இதனால் தான் வன்னிக் காடுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செய்து வரும் சிறு சிறு நிவாரண நடவடிக்கைகளுக்கு பாரிய பிரசாரங்களை புலிகள் இயக்கம் மேற்கொண்டு வருகிறது.

நன்றி : த ஐலண்ட்

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

திரு.மணியன் வாரா வாரம் விகடனில் என் கவிதைகளையும், சிறுகதைகளையும் பிரசுரித்து - என்னுடைய இன்னொரு முகத்தைத் தமிழ் கூறும் நல்லுலகிற்குக் காட்டியவர். திரு.மணியனும் அவரது வாழ்க்கைத் துணைவியார் அன்பே வடிவான திருமதி. லலிதா அவர்களும் எங்கள் குடும்ப நண்பர்களாகவே திகழ்ந்தவர்கள். இத்துணை



நல்ல உள்ளங்களின் தூண்டுதலால்தான், என் முதல் கவிதைத் தொகுப்பான 'அம்மா' வெளியாயிற்று. வாகீச கலாநிதி திரு.கி.வா.ஜ.அவர்கள் அதற்கு நீண்ட முன்னுரை ஒன்று வழங்கினார்கள். இந்தக் கவிதை நூலின் விற்பனை உரிமையைப் பாரி நிலையம் அதிபர் திரு.செல்லப்பன் ஏற்றார்கள். இதற்கு உதவி புரிந்த என் பழம்பெரும் நண்பரும், இந்த நூற்றாண்டின் இணையற்ற எழுத்தாளர்களில் மூத்தவராகத் திகழ்பவருமான திரு.வாசவன் அவர்கள்தான். ஆக, ஒரு சினிமாப் பாடலாசிரியனை நாடறிந்த கவிஞனாக்கும் முயற்சியில் இத்துணை நல்ல உள்ளங்கள் ஈடுபட்டதை எண்ணுங்கால், தமிழ்க் கடவுள் முருகப் பெருமானின் அளப்பெரும்

'கருணையை நினைத்து என் நெஞ்சுருகிப் போகிறது.

'தாழ் கொண்டு நானெழுதும்<br>
தமிழெல்லாம் தமிழ்க்கடவுள்<br>
தாள்கொண்டு ஏத்தியதன்<br>
தவப்பயனே! செய்தொழிலில்<br>
தாள் கொண்டு<br>
முனைவோர்க்குத்<br>
தயை செய்வான்,<br>
ஒருநாளும்<br>
தாள் கொண்டு<br>
அடைத்தறியாத்<br>
திருக்கதவம் அவன் கதவே!'

**நிஜ கோவிந்தன்**

என்னுடைய 'அம்மா' கவிதை நூல் வெளியான பின்பு அவகாசம் கிடைக்கும் போதெல்லாம் நான் ஆசை ஆசையாகக் கவிதைகளை எழுத ஆரம்பித்தேன்.

வர்ண மெட்டுகளுக்கு வார்த்தை தேடிக் கோத்தல் வருவாயைப் பெருக்கும் விஷயமாயினும் -கவிதை புனைதல் எண்பது ஆன்மாவை சந்தோஷப்படுத்தும் காரியமாக இருந்தது.

தென்னகம் அறிந்த கவிஞரும், கெழுதகை நண்பருமாகிய திருவாரூர் திரு. மா. வரதராஜன் அவர்களும், திருப்பனந்தாள் தமிழ்ப் புலவரும், கவிதை கொண்டலுமாகிய திரு. மா. வே. பசுபதி அவர்களும், அடிக்கடி என்னைக் கவியரங்கத் தலைமையை ஏற்க வைத்து, என் கவித்துவம் நசிந்துவிடாமல் காப்பாற்றிவந்தார்கள்.. இவர்கள் இருவரும் மேலும் என்னை உற்சாகப்படுத்த வேண்டி , தஞ்சை ராமனாதன் செட்டியார் ஹாலில் புலவர் திரு. கீரன் அவர்கள் தலைமையில் எனக்குப் பாராட்டும் பட்டமும் வழங்கினார்கள்.

திருவரங்கத்தில் கழித்த என் இளமைப் பொழுதுகளிலெல்லாம் சிறுகதை வனைதலும், கவிதை புனைதலுமே என் சிந்தனைக்கினியவையாக இருந்தன. என் கதைகளையும், கவழதைகளையும் அவ்வப்போது வாசித்து, என் மீது அன்பை வர்ஷித்த பெருந்தகையாளர்கள், என் குருநாதர் திரு. துறைவன் அவர்களும், என் அருமை நண்பர் திரு. சுகி சுப்பிரமணியம் அவர்களும் ஆவர்.

சென்னைக்கு வந்த பிறகு, வாழ்வையும் வசதியையும் ஒருசேரப் பெற உதவுவது, படங்களுக்கு எழுதும் பாட்டுக்கள்தாம் என்று உய்த்துணர்ந்த பின் - கவிதை எழுதுதல் எனக்கு அந்நியப்பட்டுப் போயிற்று.

'அம்மா'விற்குப் பிறகுதான், நேரம் கிடைக்கும் போதெல்லாம் கவிதைகள் எழுத வேண்டும் என்கிற முனைப்பு என்னுள் முகிழ்த்தது.

(தொடரும்.......)




---

## உளவு பார்த்தலால் ஏற்படும் நன்மை, தீமைகள் பற்றிக் கூறும் அநுபவக் கட்டுரைத் தொடர்....

**இந்தக்** காரியங்கள் அனைத்தும் உளவுத் துறையினரிடம் தான் ஒப்படைக்கப்படுகிறது.

ஆகவே நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் தேசத்தின் முக்கிய தலைவர்களை அந்நிய உளவுச் சக்திகளின் அபாயங்களிலிருந்து பாதுகாப்பதும் ஒரு முக்கிய வேலையாக அமைகிறது. பிரதமர் இந்திரா காந்தியை சீக்கிய வன்முறையாளர்கள் கொன்றார்கள் என்பது



ஒருபுறமிருக்க, அவருடைய மெய்க்காப்பாளராக விளங்கிய இரண்டு சீக்கியர்களே கொன்றார்கள் என்பது ஆழ்ந்த பரிசீலனைக்குரியது. பிரதமர் இந்திரா காந்தியின் கொலைக்கு கொன்றவர்கள் மட்டுமே காரணமா அல்லது வெளிநாட்டுச் சக்திகள் பின்னணியில் இருந்து செயல்பட்டனவா என்பதெல்லாம் எதிர்காலம் அளிக்க வேண்டிய பதில்கள்.

எது எப்படி இருந்தாலும் சீக்கிய வன்முறையாளர்களுக்கு பாகிஸ்தானில் பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதும் சீக்கியர்களுக்குத் தனி நாடு கேட்கும் காலிஸ்தான் இயக்கத்தின் தலைமையகம் லண்டனில் சுதந்திரமாகச் செயல்படுகிறது என்பதும், வன்முறையில் ஈடுபடுகின்றவர்கள் அதற்கான பயிற்சியை அமெரிக்காவில் முறையாகப் பெறுகிறார்கள் என்பதும் இந்தியாவில் நடைபெற்ற தேசவிரோத நடவடிக்கைகளுக்கு அந்நிய சக்திகளின் பக்க பலம் இருக்கிறது என்பதற்கான சில அடையாளங்கள் ஆகும்.

இந்தப் பின்னணியில் நம்முடைய நாட்டுத்தலைவர்களின் பாதுகாப்பு விசேஷமான முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

இந்திரா காந்தியை அவருடைய இரண்டு மெய்க்காப்பாளர்களே கொன்றார்கள். அவர்கள் இருவரும் சீகக்கியர்கள். பொற்கோவில் நடவடிக்கையை இந்திரா காந்தி மேற்கொண்ட பிறகு சீக்கியர்களில் ஒரு பிரிவினர் உணர்ச்சி வசப்பட்டு அவரைக் கொல்லும் வெறியோடு இருந்தார்கள் என்பது தெரிந்த விஷயம். அப்படியிருந்தும் அவருடைய வீட்டு வளாகத்துக்குள்ளேயே இரண்டு சீக்கிய மெய்க்காப்பாளர்கள் ஏன் நியமிக்கப்பட வேண்டும் என்பது ஒரு பிரச்சினை.

மெய்க்காப்பாளராக சீக்கியர்கள் இருப்பது உசிதமல்ல என IB அனுப்பிய குறிப்பை இந்திரா காந்தி ஏற்க மறுத்துவிட்டார் என்று சொல்லப்படுகிறது. சீக்கியர்களின் ஒருபிரிவினர் வன்முறை செயல்களில் ஈடுபடுகின்றார்கள் என்பதற்காக எல்லா சீக்கியர்களையும் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பது கூடாது என்றும் அது நாம் ஏற்றுக் கொண்டுள்ள மத சார்பற்ற தன்மைக்கு முரணானது எனக்கூறி இந்திரா காந்தி அந்த யோசனையை ஏற்க மறுத்துவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

இந்தச்செய்தி எந்த அளவுக்குச் சரி என்று தெரியவில்லை. இதை உண்மை என்று ஏற்றுக்கொண்டாலும் நம்முடைய உளவுத்துறையினரும் பொலிஸ் இலாகாவினரும் காட்டிய மெத்தன உணர்ச்சிக்கு இது ஒரு போதும் சமாதானமாகிவிடாது.

பிரதமர் பரந்த மனப்பான்மையோடு தேசம் ஏற்றுக்கொண்டுள்ள அடிப்படைக்கோட்பாட்டில் உறுதியாக இருந்திருக்கிறார். அது வரையில் சரி. இரண்டு சீக்கியர்கள் பிரதமரின் மெய்க்காப்பாளராக இடம் பெற்றிருந்த நிலையில் அவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது பொலிஸ் இலாகாவின் கடமை அல்லவா? அதற்கு நிச்சயம் இந்திரா காந்தியின் அனுமதி தேவையில்லை. பிரதமர் உயிருக்கு ஆபத்து இருந்தது.

(தொடரும்.......)

(நன்றி : நர்மதா)

---



## புதிய பாத்திரம்


**2002**ஆம் வருடம் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி பாகிஸ்தானில் கராச்சி நகரில் வைத்து அல்- கொய்தாவினரால் .கொலை செய்யப்பட்ட அமெரிக்கப் பெண் ஊடகவியலாளரான டெனியெல் பர்லின் மனைவி மரியானா பர்ல் எழுதியுள்ள நாவலொன்று தற்போது திரைப்படமாக்கப்பட்டு வருகிறது.

A Mighty Heart எனும் இந்த நூலில் டெனியெல் மற்றும் மரியானாவின் காதல், திருமணம் போன்ற லாழ்க்கைச் சம்பவங்கள் அடங்குகின்றன.

இத்திரைப்படத்தில் மரியானாவின் பாத்திரத்தை பிரபல ஹொலிவுட் நடிகை ஏன்ஜலினா ஜொலி ஏற்றுள்ளார்.

---

## விருதுகள்



**அ**ண்மையில் மியூசிக் ஒப் ப்ளெக் ஒரிஜின் (MOBO) விருது வழங்கும் விழா லண்டனில் நடைபெற்றது. இந்த விழாவில் முன்னணியில் திகழ்ந்தவர் இளம் வட்டத்தினரிடையே பெரிதும் ஈர்க்கப்பட்டுள்ள பியோன்ஸ் நொவல்ஸ். இவருக்கு, சிறந்த சர்வதேசப் பாடகி, சிறந்த பாடல், சிறந்த பாடலுக்கான காட்சியமைப்பு ஆகியவற்றுக்கான விருதுகள் கிடைத்துள்ளன.

பியோன்ஸுடன் இணைந்து ஒரு பாடலைப் பாடியுள்ள ஜே-கிஸட் சிறந்த பாடகராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். சிறந்த இசைக்குழுவுக்கான விருது ப்ளெக் அயிட் பீஸ் இசைக்குழுவுக்குக் கிடைத்துள்ளது.

---



## எதிர்பார்ப்பு

**எ**திர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க இசை விருது விழாவில் பிரபல பாடகி ஒருவரின் பெயர் முன்னணியில் அடிபட்டுக் கொண்டிருக்கிறது.

அது மாரியா க்ரேயின் பெயராகும்.

பிரபல பொப் பாடகி, ரொக் பாடகி, பிரபல பொப் மற்றும் ரொக் பாடல் அல்பம் போன்றவற்றுக்காகவே இவரது பெயர் முன்னணி கொண்டுள்ளது,

இம்முறை இந்த விருதுகளை இவர் தட்டிச் செல்வார் என்பதே பலரது எதிர்பார்ப்பாகும்.

---


## மெலிவுத் தடை

**உ**டல் மெலிந்து காணப்படும் மொடல் அழகிகளுக்கு இது கஷ்ட காலம்!

அதாவது அதிகம் உடல் மெலிவு கொண்ட மொடல் அழகிகளை இனிமேல் இத்துறையில் சேர்த்துக் கொள்வதில்லை என இஸ்ரேல் மொடலிங் நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

இந்த நிலையில் பிரித்தானியாவில் இதற்கான தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் இன்று போஷாக்கின்மை தொடர்பில் எழுந்துள்ள கருத்துக்களே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது. அழகான யுவதியாகக் காட்சி தர வேண்டுமானால் மெலிந்த உடம்பைக் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்து இதன் மூலம் தகர்க்கப்பட்டு வருவதாக சமூக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



# போர்த்துக்கீசிய ஆட்சியில் இருந்து கோவா விடுதலை; இந்திய இராணுவம் போரிட்டுப் பிடித்தது!

**இந்தியாவின்** மேற்குக் கடற்கரைப் பகுதியில் மும்பைக்கு அருகில் இருக்கும் கோவா, டையூ-டாமன் ஆகிய பகுதிகள் 1834-ஆம் ஆண்டு முதல் போர்த்துக்கல் என்ற வெள்ளைக்கார நாட்டின் ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தது.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் திகதி வெள்ளையர் ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்றும், கோவா தொடர்ந்து போர்த்துக்கீசியர் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது.

### முப்படைகள் போர்

இந்தக் கோவா பகுதியை இந்தியாவுடன் இணைக்க மத்திய அரசு முடிவெடுத்தது.

இதனை அடுத்து 17-12-1961 அன்று நள்ளிரவு இந்தியாவின் முப்படைகளும் கோவாவுக்குள் புகுந்தன. இராணுவம், கப்பல் படை, விமானப் படை இவை மூன்றும் ஒரே சமயத்தில் போரில் ஈடுபடுத்தப்பட்டன.

கோவாவுக்குள் இந்தியப் படைகள் நுழைவது" என்று முடிவெடுக்கப்பட்டதுமே இராணுவ மந்திரி கிருஷ்ணமேனன் கோவா எல்லைக்கு விமானத்தில் பறந்து சென்றார். அங்குதயாராக அணிவகுத்து நின்ற வீரர்களிடம், "நீங்கள் வெற்றி பெறுவீர்கள். உங்களுக்கு என் வாழ்த்துக்கள்" என்று கூறி வழியனுப்பி வைத்தார்.

பீரங்கி குண்டுகளை முழங்கியபடியே இந்திய இராணுவம் கோவாவுக்குள் நுழைந்தது.
இராணுவத்துக்கு உதவியாக விமானப்படை விமானங்கள் பறந்து சென்றன. கோவாவுக்குள் துண்டு நோட்டீசுகளை இந்திய விமானப்படை வீசியது. அதில், 'கோவா மக்களைக் காப்பாற்ற இந்தியப் படைகள் வந்து இருக்கின்றன. என்ன தியாகம் செய்யவும் அவை தயாராக இருக்கின்றன." என்று அச்சிடப்பட்டு இருந்தன.



### இந்தியத் தளபதிகள்

கோவா மீதான படையெடுப்பை இந்திய இராணுவத் தளபதி கான்டெத் என்பவர் முன்னின்று நடத்தினார். அவருக்கு உதவியாக இருந்து இராணுவத் தளபதி ஜே.என்.சவுத்திரி, விமானப்படை தளபதி பின்டோ, கப்பல் படை தளபதி பி.எஸ்.சோமான் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

கோவாவுக்குள் இந்திய இராணுவம் நுழைந்ததும் அங்கிருந்த முக்கிய இராணுவ முகாமைப் பிடித்துக்கொண்டது. அங்கிருந்த போர்த்துக்கீசிய வீரர்கள் சரண் அடைந்துவிட்டனர்.

யுத்தம் தொடங்கியதும் கோவாவில் ஆட்சி பொறுப்பில் இருந்த கவர்னர் ஜெனரலை நீக்கிவிட்டு இராணுவ தளபதி அந்தப் பொறுப்பை ஏற்றார். இதனால் கவர்னர் ஜெனரல் மனைவி, குழந்தைகளுடன் கோவாவை விட்டு போர்த்துக்கல்லுக்கு தப்பி ஓடிவிட்டார்.

### ஒரே நாளில் வெற்றி

ஒரே நாள் யுத்தத்தில் போர்த்துக்கீசிய இராணுவம் தோல்வி அடைந்தது. கோவா, டையூ-டாமன் பகுதி முழுவதையும் இந்திய இராணுவம் கைப்பற்றியது.

தலைநகர் 'பஞ்சிம்' நகரில் கவர்னர் ஜெனரல் மாளிகையில் போர்த்துக்கீசிய கொடி இறக்கப்பட்டு இந்திய தேசியக் கொடி பறக்க விடப்பட்டது. கொடியை இந்திய இராணுவத் தளபதி ஜே.என். சவுத்திரி ஏற்றினார்.

அந்த மாளிகை முன்பு திரளான ஆண்களும், பெண்களும் கூடி நின்றனர். அப்போது ஒரு இந்திய விமானம் அங்கு தாழ்வாகப் பறந்தது.

விமானத்தில் இருந்த இந்திய வீரர்கள், ஒலிபெருக்கியில் பின்வருமாறு கூறினார்கள்:-

"கோவா மக்களே! இன்று உங்கள் வாழ்க்கையில் ஒரு பொன்னாள். உங்களுக்கு விடுதலை கிடைத்துவிட்டது! இங்கு வந்துள்ள இந்தியப் படை உங்களுடையு சொந்தப் படை! உங்களைப் பாதுகாக்கவே நாங்கள் வந்து இருக்கிறோம்!"

இவ்வாறு விமானத்தில் இருந்து இந்திய வீரர்கள் அறிவித்த போது மக்கள் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

### மக்கள் வரவேற்பு

இந்தியப் படையை கோவா மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். பெண்கள், கூட்டம் கூட்டமாக வந்து இராணுவ வீரர்களுக்கு மாலை அணிவித்தனர்.

இந்தியப் படைகளுடன் போரிட்டுத் தோல்வி அடைந்த ஆத்திரத்தில் போர்த்துக்கீசியர்கள் பல அட்டூழியங்களைச் செய்தார்கள். மறைவான இடங்களில் பதுங்கி இருந்து கொண்டு வீடுகளுக்குத் தீ வைத்தார்கள். பெரிய கட்டடங்களை இடித்து தரைமட்டம் ஆக்கினார்கள்.

### 2 ஆயிரம் பேர் சரண்

போரில் தோல்வி அடைந்த போர்த்துக்கீசியர்கள் 2 ஆயிரம் பேர் இந்திய இராணுவத்திடம் சரண் அடைந்தார்கள். இவர்களில் 27 பேர் இராணுவ உயர் அதிகாரிகள்.

கோவா தலைநகர் 'பஞ்சிம' நகரை இந்திய இராணுவம் பிடித்துக் கொண்டதும், இராணுவத் தளபதி சவுத்திரி விமானத்தில் சென்றார். கவர்னர் ஜெனரல் மாளிகையில் இந்தியக் கொடியை பறக்கவிட்டார். தலைநகரில் இருந்த போர்த்துக்கீசிய இராணுவம், அவரிடம் சரண் அடைந்தது. அவர்களுடைய சரணாகதியை ஏற்றுக் கொள்ள ஒரு சிறு விழா நடந்தது.

இந்திய இராணுவ அதிகாரிகள் கம்பீரமாக நிற்க, போர்த்துக்கீசிய தளபதி இராணுவ முறையில் நடந்து வந்து, அவர்கள் எதிரே நின்றார்.

"நானும், போர்ச்சுக்கீசிய இராணுவமும் சரண் அடைகிறோம். எங்கள் ஆயுதங்களையும் ஒப்படைக்கிறோம்!" என்று அவர் சொன்னார்.

"உங்கள் சரணாகதியை ஏற்றுக்கொள்கிறோம்! நீங்கள் உங்கள் முகாமிலேயே இப்போது தங்கி இருக்கலாம்." என்று இந்தியத் தளபதி சவுத்திரி சொன்னார். உடனே போர்த்துக்கீசிய அதிகாரி "சலாம்" போட்டுவிட்டுத் திரும்பினார்.

### ரஷ்யா, இலங்கை ஆதரவு

கோவா மீது இந்தியா படையெடுத்ததற்கு, ரஷ்யா, இந்தோனேஷியா, இலங்கை ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

அமெரிக்காவும், இங்கிலாந்தும் வருத்தம் தெரிவித்தன. இந்தியா வெற்றி பெற்ற செய்தி வெளியானதும் பாகிஸ்தான் எரிச்சலடைந்தது.

"இந்தியா இரட்டை வேடம் போடுகிறது. உலக சமாதானம் என்று மற்ற நாடுகளுக்கு உபதேசித்துவிட்டு அதுவே யுத்தத்தில் இறங்கிவிட்டது." என்று கண்டனம் தெரிவித்தது.

### நேரு பாராட்டு

ஒரே நாளில் கோவாவைக் கைப்பற்றிய இந்திய இராணுவ வீரர்களை, பிரதமர் நேரு பாராட்டினார்.

"இந்திய இராணுவம் விரைவாகவும், திறமையாகவும் அதன் கடமையைச் செய்து முடித்தது. இந்திய வீரர்கள் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் கடைப்பிடித்தார்கள். இதனால் சேதம் அதிகம் இல்லாமலேயே நமக்கு வெற்றி கிடைத்தது."


இவ்வாறு நேரு சொன்னார்.

புதுடெல்லியில் உள்ள கோவா மக்கள், பிரதமர் நேருவைச் சந்தித்தார்கள்.

"போர்த்துக்கீசியர் ஆதிக்கத்தில் அவதிப்பட்ட எங்களுக்கு விடுதலை வாங்கித்தந்து இருக்கிறீர்கள். இதற்கு அரும்பாடுபட்ட உங்களுக்கும், இந்தியப் படைகளுக்கும் நாங்கள் மிகவும் கடமைப்பட்டு இருக்கிறோம்" என்று மகிழ்ச்சியோடு கூறினார்கள்.

### முதல் கவர்னர்

சுதந்திர கோவாவின் முதல் கவர்னராக இராணுவத் தளபதி கே.பி.கான்டெத் (யுத்தத்தை முன்னின்று நடத்தியவர்) நியமிக்கப்பட்டார்.


இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்
அனைத்து மக்கள் வாழ்விலும் சுபீட்ச ஒளி பரவட்டும்




மணிவெளுக்கச் சாணையுண்டு, –எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி !
மனம் வெளுக்க வழியில்லை –எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரி !

**- சுப்பிரமணிய பாரதியார்**

# பாப்பா முரசு

# எங்கே நிம்மதி?



**செ**ருப்புத்தைக்கும் ஏழைத் தொழிலாளி ஒருவன் தினந்தோறும் அதிகாலையிலிருந்து இரவு வரை எவ்விதக் கவலையும் இல்லாமல் சந்தோஷமாகப் பாடிக் கொண்டேயிருப்பான். பக்கத்தில் ஒரு பெரிய மாளிகையில் ஒரு பணக்காரன் வசித்து வந்தான். அவனுக்கு இரவில் சரியாகத் தூக்கம் வராது. அதிகாலையில்தான் சிறிது கண்ணயர்வான். அந்தச் சமயம் பார்த்து இந்தத் தொழிலாளி இன்பமாகப் பாடிக் கொண்டிருப்பான். இப்படியே பல நாட்கள் சென்றன.

இவ்வளவு பணம் இருந்தும் நம்மிடம் இல்லாத நிம்மதி இவனுக்கு எப்படி வந்தது எனப் பணக்காரன் அறிய விரும்பினான். அத்துடன் அவனுக்குப் பணம் கொடுக்கவும் நினைத்தான்.

ஒரு நாள் அவன் அந்த செருப்புத் தைப்பவனைத் தன் மாளிகைக்கு வரவழைத்து, "உனது வருட வருமானம் எவ்வளவு?" என்று கேட்டான்.

"நான் வருஷக் கணக்கெல்லாம் பார்ப்பது கிடையாது. அன்றாட வருமானம்தான் எனக்கு. அதுவும் ஒரு நாள் கிடைக்கும், மறுநாள் கிடையாது," என்றான்.

"உன்னை நான் ஒரு பணக்காரனாக்க விரும்புகிறேன். இதோ நூறு தங்க நாணயங்கள் இருக்கின்றன. இவற்றைக்

**பாப்பா முரசு சிறுகதை**

கொண்டு போய்ப் பத்திரமாக வைத்துக் கொண்டு அவசியம் நேரும் போது செலவு பண்ணிக்கொள்," என்று கூறி பணக்காரன் தங்க நாணயங்களைக் கொடுத்தான்.

கரை காணாத சந்தோஷத்துடன் தங்க நாணயங்களை வாங்கிக் கொண்டு வீட்டுக்குச் சென்றான். அதைத் தடவித் தடவிப் பார்த்தான். காண்பது கனவா, நனவா எனப் புரியவில்லை. வீட்டில் பத்திரமான ஓரிடத்தில் அவற்றைப் புதைத்து வைத்தான். அன்று முதல் அவன் பாடுவதை நிறுத்திவிட்டான். அவனுக்கு எப்போதும் தங்க நாணயங்களைப் பற்றியே ஞாபகம். அவற்றைக் காவல் செய்வதை விட வேறு வேலை எதுவும் செய்ய முடியவில்லை.

யாராவது வந்து திருடிவிடக்கூடாதே என்று இரவிலும் அவன் கண்விழித்துக் கொண்டு உட்கார்ந்து இருந்தான். ஒரு சிறு சலசலப்புக் கேட்டாலும் ஓடிப்போய் நாணயங்கள் பத்திரமாக இருக்கின்றனவா என்று பார்த்து விட்டு வருவான்.

இப்படி மன நிம்மதியிழந்து கவலையிலும் பயத்திலுமே காலம் தள்ள அவனால் முடியவில்லை. ஒரு நாள் தங்க நாணயங்களை எடுத்துக்கொண்டு பணக்காரனுடைய மாளிகைக்குச் சென்றான். "ஐயா! நீங்கள் கொடுத்த இந்த நூறு நாணயங்களையும் நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள். எனக்குப் பணமே இல்லை என்றாலும் என்னுடைய நிம்மதியே எனக்குப் பெரிசு. இந்தப் பணம் வந்ததில் இருந்து என் நிம்மதியே போச்சு!" என்றான்.

இப்போதுதான் பணக்காரனுக்கு உண்மை புரிந்தது. தன்னிடம் உள்ள அதிகப்படியான பணம்தான் தன்னுடைய தூக்கமின்மைக்குக் காரணம் என்பதை உணர்ந்தான். அதிலிருந்து தான, தர்மம் செய்து இறைவன்பால் தன் மனதைத் திருப்பினான்.

# ஆத்திசூடி

## நன்றி மறவேல்

நீ உனக்கு ஒருவர் செய்தஉதவியை எக்காரணம் பற்றியும் மறந்து விடாதே.

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.

# நிலா

வட்ட வட்ட நிலாவே
வானில் மிதக்கும் நிலாவே!

எட்டி நீயும் நிற்பதேன்
ஏக்கமாகப் பார்ப்பதேன்?

வளர்ந்து வளர்ந்து
குறைவதேன்
மாதத்தின் ஒரு நாள்
மறைவதேன்?

குட்டி குட்டி விண்மீனுடன்
கூடி விளையாடப் போனாயோ!

கண்டு பிடித்தேன் உன்னையே
காட்டிக் கொடுத்தது
பௌர்ணமியே!



வாழ்வும் தாழ்வும்
நமக்குண்டு
எனக்குச் சொன்ன
வான்நிலவே

விண்ணை விட்டு இறங்கி
வா,
என்னுடன் கூட ஆட வா,


என்னை விட்டுப் பிரிந்தாலும்
உன்னை நானும்
மறப்பேனோ?

# அதிசய உலகம்

## வணக்கம், வணக்கம்!

**வ**ண்ணத்துப் பூச்சி பற்றி உங்களுக்குத் தெரியும். அதேபோல் வணங்கும் ஒரு பூச்சியும் இருக்கிறது. இதை கிரேக்க மொழியில் பிரேயிங் மன்டிஸ் என்பார்கள். மன்டெஸ் என்ற கிரேக்கச் சொல்தான் மருவி மன்டிஸ் ஆகிவிட்டது. இதற்கு அர்த்தம் ஆருடம் கூறுவது என்பதாகும். அதாவது இந்தப் பூச்சிகளின் தலைப் பகுதி இருக்கும் திசையில் நிச்சயம் சீதோஷ்ண நிலை மாற்றம் ஏற்படுமாம். இதை வைத்து திடீர் மழை, கடும் வெயில் - பனி போன்ற வானிலை மாற்றங்களைத் துல்லியமாக அறிந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கை அனைத்து நாட்டு மக்களிடமும் இருக்கிறது.

மேலும் இந்தப் பூச்சியின் முன்னங்கால்கள் எப்போதும் நாம் கைகூப்பி வணங்குவது போன்று தூக்கிய நிலையில் இருக்கும். இதனால்தான் இதற்கு வணங்கும் பூச்சி என்று பெயர் வந்தது.




இலையைப் போன்று பச்சை நிறத்தில் காணப்படுவதால் இவை செடிகொடிகளில் இருக்கும்போது கண்டறிவது கடினம். எனினும் பழுப்பு, நீலம், இளஞ்சிவப்பு நிறங்களிலும் காணப்படுகின்றன. உலகில் அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியாக் கண்டங்களில் வணங்கும் பூச்சிகள் அதிகமாகக் காணப்படுகின்றன. மொத்தம் 2,300க்கும் மேலான இனங்கள் இந்தப் பூச்சிகளில் உண்டு.

ஒரு சென்டி மீட்டர் நீளம் முதல் அரை அடி நீளம் வரை இவை வளர்கின்றன. மிகச் சிறிய மன்டிஸின் பெயர் பால்பே. மிகப் பெரிய மன்டிஸ் ஆர்ச்சி. இது ஆபிரிக்க நாடுகளில் காணப்படுகின்றது.

தனது தலையை 180 டிகிரி கோணத்திற்குத் திருப்பக் கூடிய ஒரே பூச்சியும் இந்த பிரேயிங் மன்டிஸ்தான். இவற்றின் கண்கள் ஊடுருவிப் பார்க்கும் திறன் கொண்டவை. 60 அடி தூரத்தில் இருக்கும் இரையின் அசைவைக்கூட கண்டுகொள்ளும். பூக்களில் தேன் உறிஞ்ச வரும் பூச்சிகளை லபக் என்று பிடித்து வாய்க்குள் போட்டுக் கொள்ளும். சிறு சிறு ரீங்காரப் பறவைகளையும் இரையாக்கிக் கொள்வதில் கில்லாடி. பிடித்த இரையை மின்னல் வேகத்தில் வெட்டி வாய்க்குள் திணித்து அரைத்து விடும். அதற்கேற்ப இதன் தாடைகள் அமைந்திருக்கின்றன.

அண்மையில், இந்தப் பிரேயிங் மன்டிஸ் பூச்சிகள் குகைக்குள் புகுந்து வௌவால்களையும் வேட்டையாடித் தின்பதைக் கண்டறிந்திருக்கிறார்கள். இலையுதிர் காலத்தில் பெண் பிரேயிங் மன்டிஸ் ஒரே நேரத்தில் 30 முதல் 300 முட்டைகள் வரை இட்டு குஞ்சு பொரிக்கும். விளை நிலங்களைச் சேதப்படுத்தும் பூச்சிகளை இரையாகக் கொள்வதால் விவசாயிகளின் நண்பனாகவும் இவை திகழ்கின்றன.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 31.10.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 666**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 664

**பரிசுக்குரியவர்:**
**ஜே. பி. சுதர்ஷிலா, 32.'.2 கோணவல வீதி, திகண, ரஜவெல்ல.**

**பாராட்டுக்குரியவர்கள்:**


| | |
|---|---|
| சௌமியா தயாபரன் 248/38,ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13 | கமிலஸ் கிருத்திகன், இல. 9, அம்மன் கோவில் வீதி பண்டாரிகுளம், வவுனியா. |
| சகானுஜா தியாகேசன், மட்/வின்சன்ற் மகளிர் உயர்தர தேசியப் பாடசாலை, மட்டக்களப்பு. | டி. ஆர். ஜெனிங் டிவின்சன், கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு - 15 |
| எம்.சொப்னா, இல.31,றொசிட்டா பஜார், கொட்டகலை. | புஹாரி பாத்திமா சமியா, நொக்ஸ் வீதி, மூதூர் - 05 |
| ஆகாஸ், கிங்ஸ்டன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு - 15 | ஜெ. மயூரன், 175, லோவர் வீதி, பதுளை. |
| ஏ.ஏ.சகீர்கான், அல்/மதீனா லேன், ஓட்டமாவடி-1 | எம். லக்ஸி, பிரதான வீதி, சாவற்கட்டு, மன்னார். |

# சில விடுகதைகள்


1. தண்ணீருக்குள் தாதா, தரைக்கு வந்தால் சாதா அவர் யார்?
2. மெத்து மெத்து பாதக்காரன் மெல்லிய ஓசைக்காரன் பூனை பிடிப்பதில் மட்டும் நாலு கால் பாய்ச்சல்காரன் அவன் யார்?
3. காட்டுக்குள் நடமாடும் கறுப்பர் கூட்டத்தைப் பல்லால் கவ்விப் பிடிக்கும் வல்லாள கண்டன் அவன் யார்?
4. ஆழ்கடலுக்குள் இருப்பவன் ஆபரணத்துக்கு அழகு சேர்ப்பான் அவன் யார்?
5. தலைக்கு வைக்காத பூ, சமையலுக்கு ஆகும் பூ அது என்ன?
6. மண்ணுக்குள் என்னம்மா, அது மங்களம் பொன்னம்மா அது என்ன?
7. காட்டுக்குள் கறுப்பழகி, கானம் இசைப்பதில் கெட்டிக்காரி அவள் யார்?
8. காற்றுக்கு ஆடும் வீ, ஆனாலும் ஆபத்தில்லாத வீடு அது என்ன?
9. தோட்டா போடாமலே வெடிக்கும் துப்பாக்கி அது என்ன?
10. படபடக்கிறாள், பதைபதைக்கிறாள்; பக்குவமாகிறாள், பசி தீர்க்கிறாள் அவள் யார்?





# அப்பாச்சி



# பெரிய புத்தர்






**பௌத்த** மதத்தைப் பின்பற்றும் நாடுகளில் சீனாவும் முக்கிய இடத்தை வகிக்கிறது. பௌத்த மதத்தின் கடவுளான புத்த பெருமானை அவர்களும் வணங்குகிறார்கள். புத்தர் காவியுடை அணிந்தாற் போல் உள்ள சிலைகளே எங்கள் மத்தியில் இருக்கிறது. அந்த வகையில் இங்கு படத்தில் காட்டப்பட்டுள்ள சிலை சீனாவின் புனித இடங்களில் உள்ளது. லிஸான் புத்தர் எனப்படும் இச்சிலை புத்தரின் தியானக்கோலத்தில் செதுக்கப்பட்டுள்ளது. புத்த பெருமானின் அதே அமைதியான முகம் போல் தத்ரூபமாகச் செதுக்கப்பட்டிருக்கும் இச் சிலை பெரிய மலை ஒன்றினை ஆதாரமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இச் சிலையின் உயரம் 71 மீற்றராகும். பெரிய குகை ஒன்றினூடாகச் சென்றால் இச் சிலையினைப் பார்வையிடலாமாம். இச் சிலையைப் பார்ப்பதற்காகவே உல்லாசப் பிரயாணிகள் அங்கு குவிகின்றனராம்.

**பாதுகாப்பிற்காக** என்று செய்யும் சில பொருட்கள் அழிவு வேலைகளைச் செய்வதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது என்பது படத்தைப் பார்த்தாலே தெரிகிறது அல்லவா? அமெரிக்க இராணுவத்தினரால் போர்களில் பாவிக்கப்படும் இப் போர் உலங்கு வானூர்திக்குப் பெயர் அப்பாச்சி. இவ்வுலங்கு வானூர்தி போர் மற்றும் உளவு வேலைகளுக்கு மிகவும் சிறந்ததாம். 16 அதி தூர ஏவுகணைகளை ஒரே தடவையில் காவிச் செல்லும் வல்லமை கொண்டது. அத்துடன் மிகவும் வேகமாகவும் செலுத்தக் கூடியதாம். துப்பாக்கிக் குண்டுகள் துளைக்க முடியாத இதன் மேற்புறம், கீழ்ப்புறங்களில் கமராக்கள் பொருத்தப்பட்டிருக்குமாம். இதைத் தாக்குவதற்காக ஏவுகணை ஒன்று ஏவப்படுமானால் அந்த ஏவுகணை ஏவப்பட்ட இடத்திலிருந்து வரும் புகைமண்டலத்தைக் குறிவைத்து ஏவுகணைகளை எதிர்த்து ஏவக்கூடியதாம். தூரத்திலிருந்தே குறியை சரியாக இலக்கு வைக்கும் லேசர் கதிர்களும் உள்ளதாம். இதைச் செலுத்துவதற்கு ஆக ஒரு விமானி மட்டும் போதுமாம்.

# வளையமனிதத்!



# கருந் தேள்!



**கருந்தேள்** என்றாலே எங்கள் சிலருக்குத் தெரியாது. தெரிந்த சிலருக்கு அதைக் கண்டால் மிகவும் பயமாகவே இருக்கும். அந்த வகையில் இங்குள்ளதும் ஒரு கருந்தேள் தான். ஆபிரிக்கக் காடுகளில் அதிகமாகக் காணப்படும் இத் தேள் இனங்கள் தங்கள் எதிரிகளின் கண்களுக்குப் புலப்படாமல் மண், குப்பைக்குள் மறைந்திருக்குமாம். அத்துடன் எதிரிகள் எவராவது எதிர்ப்படுவார்களானால் அவர்களை தங்கள் கொடுக்கினால் குத்திக் கொன்று விடுமாம். இதன் கொடுக்கு நச்சுப் பாம்பின் விஷத்தைக் கொண்டதாம். ஆக 60 கிராம் (2 அவுன்ஸ்) நிறையுடைய இத் தேளினம் நீளத்தில் மட்டும் 13-18செ.மீ. நீளமுடையதாம் அதாவது ஒரு வளர்ந்த மனிதனின் கைகளின் நீளத்திற்குச் சமனானதாம் என்றால் பாருங்களேன்.

# கார்க்கனவு!

**இன்றைய** கால கட்டத்தில் வாகனங்கள் வாங்குவது என்பது அவசியமான விடயமாகியிருக்கிறதல்லவா? பணம் அதிகம் இருந்தால் கீழ் உள்ள வாகனம் போல் ஒன்றை வாங்கிப்பாருங்களேன். இதன் விலை பெரிதாக இல்லை. ஆக 1,547,620 அமெரிக்க டொலர்களாம். இது 1997 ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப் பட்டதாம். அப்போது இக் காரின் ஆகக் கூடிய வேகம் மணித்தியாலத்திற்கு 320 கி.மீ. ஆகும். இக் காரில் 100 கி.மீ. தூரத்தை ஆக 3.8 செக்கன்களில் கடக்கலாமாம். உண்மைதான்... அது அமெரிக்க வீதிகளில் நம் வீதிகளில்?????

**உடலில்** வளையங்கள் குத்திக் கொள்வது தற்போதைய நவநாகரீக ஸ்டைல். அந்த ஸ்டைலின் உச்சக் கட்டமே இது. இவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். தன் உடலை துளைத்துப் பார்ப்பதில் ஆர்வம் காட்டியிருக்கிறார் என்பது பார்த்தாலே தெரிகிறது அல்லவா. கம் மா என்னும் இவர், தன் உடலில் கிட்டத்தட்ட 1,015 வளையங்களைக் குத்தியிருக்கிறார். இன்னும் வளையங்களைக் குத்த எண்ணினாராம் ஆனால் இவர் உடலில் இடம் போதவில்லையாம். இவ் வளையங்களைக் குத்தி முடிக்க இவருக்கு 7 மணித்தியாலங்களும் 55 நிமிடங்களும் எடுத்ததாம்.





ஆர்யா
வட்டாரம்

# மாதவன் காட்டில் மகிழ்ச்சி மழை!

ஸ்லோ பட் ஸ்டெடி என்பார்களே...மாதவனின் சினிமா மார்க்கெட் அப்படிப்பட்டது. இந்தி, பெங்காலி, தமிழ் என சுழன்றடிக்கிறார் மனிதர்.

தமிழைப் பொறுத்தவரை 'தம்பி' தனக்கொரு அடையாளம் தந்ததாகப் பெருமிதப்படுகிறார் மாதவன். சீமானுடன் பணிபுரிவது இவருக்குப் பிடித்திருக்கிறது. சீமானுக்கும் அப்படியே.

இந்த நட்பு இனிவரும் காலங்களிலும் இப்படியே நீடிக்கும் என்பதற்கு அடையாளமாக மீண்டும் சீமானும் மாதவனும் இணைகிறார்கள். ஒன்றல்ல, இரண்டு படங்களில்.

சீமான், மாதவனை வைத்து இயக்கப் போகும் முதல் படத்திற்கு 'மகிழ்ச்சி' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். காதல் கதையாம் இது. வழக்கமான காதல் இல்லாமல் காவியத்தனமான காதலை இதில் காட்சிப்படுத்தப் போகிறாரம் சீமான்.

அடுத்து இவர்கள் இணையும் படம் 'பகலவன்'. பெயரைப் போலவே சுட்டெரிக்கும் சமுதாயக் கருத்துள்ள படம். 'தம்பி' மாதிரி ஒரு பவர்புல் வேடம் மாதவனுக்கு.

சுந்தர் சி.யின் 'ரெண்டு' படத்தில் தற்போது பிஸியாக நடித்துக் கொண்டிருப்பவர், பிரதாப் போத்தன் தயாரிக்கும் படம் ஒன்றிற்கு கால்ஷீட் கொடுத்துள்ளார். படத்துக்கு 'அருகில்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இவை தவிர, பெரிய நிறுவனங்கள் இரண்டுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

இவையெல்லாம் தமிழில்! இந்தியிலும் இதேபோலொரு லிஸ்டை கைவசம் வைத்திருக்கிறார் மாதவன்.

'மகிழ்ச்சி மழை' என்பது மாதவனுக்கு சாலப் பொருத்தம்!



# சோனியா அகர்வால் - செல்வராகவன் திருமணம் டிசம்பர் 15ஆம் திகதி.

காதல் கொண்டேன் படம் மூலம் தமிழில் அறிமுகமானவர் சோனியா அகர்வால். கோவில், ஒரு கல்லூரியின் கதை, திருட்டுப்பயலே, 7ஜி ரெயின்போ காலனி, மதுர, புதுப்பேட்டை உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். காதல் கொண்டேன் படத்தை செல்வராகவன் இயக்கினார்.

அப்போது இருவருக்கும் நட்பு ஏற்பட்டு காதலானது. பொது நிகழ்ச்சிகளில் சேர்ந்து கலந்து கொண்டனர். சோனியா அகர்வாலும் செல்வராகவனும் திருமணம் செய்ய விரும்பினர். இவர்கள் திருமணத்துக்கு இரு வீட்டுப் பெற்றோரும் சம்மதித்தார்கள்.

இதையடுத்து சமீபத்தில் நிச்சயதார்த்தம் நடந்தது. செல்வராகவன் பெற்றோர் சோனியா அகர்வாலின் சொந்த ஊருக்குச் சென்று திருமணம் பேசி முடித்தனர்.

சோனியா அகர்வால் - செல்வராகவன் திருமணம் டிசம்பர் 15ஆம் திகதி எழும்பூரில் உள்ள கல்யாண மண்டபத்தில் நடக்கிறது. திருமண வரவேற்பு நிகழ்ச்சியும் அதே மண்டபத்தில் நடக்கிறது. திருமண ஏற்பாடுகளில் இருவரும் தீவிரமாக உள்ளனர். அழைப்பிதழ் அச்சிடும் பணியும் நடக்கிறது.


பூமிகா

# வடிவேலு நடிக்கும் 'தேசிய பறவை'

திரையுலகில் முதன் முதலாக வடிவேலு 9 வேடங்களில் நடிக்கும் படம் 'தேசிய பறவை'. கடல்புறா, நாகலிங்கம் போன்ற படங்களை இயக்கி புதிய மன்னர்கள் படத்தில் நடித்த பாபு கணேஷ் இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கி நடித்துள்ளார்.

ஊர்வசி முற்றிலும் மாறுபட்ட கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். சுரேஷ், நிழல்கள் ரவி, கரிகாலன், குமரிமுத்து, மாஸ்டர் கணேஷ், வினிதா ராம் - லெட்சுமணன், அழகு ஆகியோர் திரைப்படத்தில் கதாபாத்திரங்களாகவே மாறியுள்ளனர்.

இப்படத்தில் சாமியார் கதாபாத்திரத்தில் தயாரிப்பாளர் வி.சிவகுமாரை நடிக்க வைத்து தமிழ் திரையுலகிற்கு ஒரு குணசித்திர நடிகரை அறிமுகம் செய்திருக்கிறார் இயக்குநர் பாபு கணேஷ்.

சென்னை, கரூர் மற்றும் அடர்ந்த காட்டுப் பகுதிகளான கோத்தகிரி, குந்தா டேம் மலை பிரதேசத்தில் தேசிய பறவையின் இறுதிக் கட்டப் படப்பிடிப்பு நடந்தது. இது தீபாவளி வெளியீடு.



# அரசியலுக்கு ரஜினி வந்திருந்தால் நானும் குதித்திருப்பேன்! -நடிகர் பிரபு பேச்சு

நடிகர் பிரபு அரசியலில் குதிப்பார் என்று அவரது அண்ணன் ராம்குமார் அறிவித்தார். அவர் தனிக் கட்சி தொடங்குவாரா அல்லது காங்கிரசில் சேருவாரா என்று பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்டது. காங்கிரசுக்கு இழுக்க அக் கட்சித் தலைவர்கள் முயற்சித்தனர்.

இந்த நிலையில் நடிகர் பிரபு, அரசியல் பிரவேசம் பற்றிய தனது கருத்தை சென்னையில் நடந்த இம்சை அரசன் 23ஆம் புலிகேசி பட வெற்றி விழாவில் வெளியிட்டார். பிரபு பேசியதாவது:-

"நான் அரசியலில் ஈடுபடப் போவதாக என் அண்ணன் தெரிவித்தார். அவருக்கு சில மனவருத்தங்கள் இருந்தது. அதனால் இப்படிப் பேசிவிட்டார். இதை வைத்து நான் அரசியலில் குதிக்கப்போவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ரஜினிகாந்தும் அரசியலில் இறங்கப் போவதாகச் சொன்னார்கள். அவர் அரசியலுக்கு வந்திருந்தால் நானும் குதித்து இருப்பேன். அவர் தேவை இல்லை என்று இருக்கிறார். எனக்கும் அரசியல் தேவை இல்லை." இவ்வாறு பிரபு பேசினார்.

ரஜினிகாந்த், விஜய், சத்யராஜ், வடிவேலு, டைரக்டர்கள் ஷங்கர், சிம்புதேவன் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.



சரத்குமார் - நயன்தாரா
தலைமகன்

# பேய் படம் - 'ஆவல்'

உஷா தேவி பிலிம்ஸ் என்ற புதிய நிறுவனம் மிரட்டல் இசையுடன் கிராபிக்ஸ் இல்லாத ஆவி படமாக 'ஆவல்' என்ற படத்தைத் தயாரித்துள்ளது. இறந்து போன காதலன், தன்னுடைய காதலியை அடைய ஆவியாய் அலைகிறான். தடுப்பவர்களை ஆவி பழிவாங்குகிறது. இறுதியில் இந்த ஆவி தன்னுடைய காதலியை அடைந்ததா இல்லையா என்பதே கதை. ஆவி வரும் காட்சிகளைக் கிராபிக்ஸே இல்லாமல் தத்ரூபமாகப் படமாக்கியுள்ளார்கள். ஆவி படங்களுக்குப் பின்னணி இசைதான் உயிர். 'ஓ மை லவ்' என்ற பெங்காளி படத்துக்குப் பின்னணி இசைக்கான மாநில விருது பெற்ற தஷில்குமார் என்ற தமிழ் இசையமைப்பாளர் இந்தப் படத்திற்கு இசையமைத்துள்ளார்.

கதை, திரைக்கதை, வசனம் எழுதி பாரதி சுப்பிரமணியன் இயக்கியுள்ளார். இந்தப் படத்தில் கதாநாயகனாக ஸ்ரீராம், கதாநாயகியாக தனா நடிக்க, ராஜா ருஷோ என்பவர் வில்லனாக அறிமுகமாகிறார். திகிலுடன் கூடிய 'ஆவல்' படத்தை எஸ்.திருமால்முருகன் தயாரித்துள்ளார்.


அருண்
தவம்

# சினிவிசிட்


எஸ். ஜே. சூர்யா - இளியானா
வியாபாரி

## தாயாகிறார் பூஜா!

பூஜா வருத்தத்தில் இருக்கிறார். அவர் அதிக அன்பு வைத்திருந்த அவரது தாத்தா இறந்து விட்டாராம். சொல்லும் போதே கிளிசரின் இல்லாமல் கண் கலங்குகிறது.

பூஜாவுக்கு சினிமா வட்டாரத்தில் வேறொரு பெயர் உண்டு. குட்டி அன்னை தெரசா! சத்தம் இல்லாமல் உதவி செய்வதில் பூஜா ஒரு பொம்பளை அஜித். அதனால்தான் இந்தச் செல்லப் பெயர்.


சமீபத்தில் இவர் செய்த நல்ல காரியம் இந்த நாடு அறிய வேண்டிய ஒன்று. அனாதைக் குழந்தை ஒன்றை தத்தெடுத்திருக்கிறார் பூஜா!

வோ்ல்ட் விஷன் வெப் சைட் மூலமாக அனாதைக் குழைந்தைகள் குறித்து பூஜாவுக்கு பல விஷயங்கள் தெரிய வந்திருக்கிறது. அவர்களின் கஷ்டம் இவரது அன்னை தெரசா உள்ளத்தை ரொம்பவே பாதித்திருக்கிறது. அப்போது உதித்தது தான் தத்தெடுக்கும் ஐடியா.

வோ்ல்ட் விஷன் வெப் சைட் மூலமாக சௌமியா என்ற ஆதரவற்ற சிறுமியை தத்தெடுத்துள்ளார் பூஜா. அச்சிறுமியின் உணவு, உடை முதல் படிப்பு வரை அனைத்துச் செலவுகளையும் பூஜா ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

சத்தமில்லாமல் செய்த இந்த நல்ல விஷயம் எப்படியோ கசிந்து நாலு பேர் செவிகளை எட்டியிருக்கிறது. பூஜாவின் சினிமா தோழிகள், தோழர்கள் பலர் அவரைப் பாராட்டியதோடு, ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவிக்கரம் நீட்டவும் முன் வந்துள்ளனர்.

ரசிகர் மன்றம் அமைத்து ஆர்ப்பாட்டமாக விழா நடத்தும் நடிகைகளுக்கு மத்தியில்...சந்தேகமில்லை, பூஜா - ஒரு தியாக ரோஜா!



அஜித்
வரலாறு



## அமிதாப்பச்சன் - விக்ரம் நடிக்கும் புதிய படம் தமிழ், இந்தியில் தயாராகிறது!

இந்தி சூப்பர் ஸ்டார் அமிதாப்பச்சனை தமிழ்ப் படங்களில் நடிக்க வைக்க எவ்வளவோ முயற்சி நடந்தது. ஆனால் அமிதாப் மறுத்து விட்டார். ரஜினியின் 'சிவாஜி' படத்தில் நடிக்க வைக்கவும் பேச்சுவார்த்தை நடக்கிறது.

இந்த நிலையில் அமிாப்பச்சனும், விக்ரமும் இணைந்து புதிய படமொன்றில் நடிக்க முடிவாகியுள்ளது. தமிழ், இந்தியில் இந்தப் படம் தயாராகிறது. செவன்த் சேனல் நாராயணன் இந்தப் படத்தைத் தயாரிக்கிறார்.

அமிதாப், விக்ரம் இருவரையும் தயாரிப்பாளர் நாராயணன் சந்தித்துப் பேசியதாகவும் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

விக்ரம் ஏற்கனவே இந்திப் படத்தில் நடிக்க விருப்பம் தெரிவித்தார். அமிதாப்பச்சனுடன் இணைந்து நடிக்க தற்போது வாய்ப்புக் கிடைத்துள்ளது. அமிதாப்பச்சன் முதன் முறையாக நடிக்கும் தமிழ் படம் என்பதால் பரபரப்பான எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

ரஜினியுடன் 'சிவாஜி' படத்திலும் அமிதாப்பச்சன் நடிக்கிறார். அமிதாப்புடன் பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்திய பிறகே இவ்விரு படங்களிலும் நடிக்க அவர் சம்மதித்ததாகக் கூறப்படுகிறது.

## கிரிக்கெட் வீரர்களும் நடிகர்களும் ஒரே ஜாதி! – ஷாருக்கான்

இந்தியா - இங்கிலாந்து இடையே ஜெய்ப்பூரில் நடந்த கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியை நடிகர் ஷாருக்கான், நடிகை பிரியங்கா சோப்ரா ஆகியோர் நேரில் பார்த்து ரசித்தனர்.

பின்னர் ஷாருக்கான் நிருபர்களிடம் கூறியதாவது:-

"கிரிக்கெட் வீரர்களும், சினிமா நடிகர்களும் ஒரே ஜாதிதான். கிரிக்கெட்டில் ஜெயித்தால் ரசிப்பார்கள், பாராட்டுவார்கள். தோல்வி அடைந்தால் விமர்சிப்பார்கள்.

சினிமாவும் அப்படித் தான். 'ஹிட்' படங்கள் கொடுத்தால் பாராட்டுவார்கள். கைதட்டி ஆரவாரம் செய்வார்கள். ஒரு படம் தோற்றுவிட்டால் விமர்சிப்பார்கள்.

கிரிக்கெட் வீரர்கள் மைதானத்தில் ஆடுகிறார்கள். நாங்கள் மேடையில் ஆடுகிறோம். ரசிகர்களுக்கு சகிப்புத் தன்மை வேண்டும். கிரிக்கெட் மீது எனக்குப் பைத்தியம். வீரர்கள் எல்லோரையும் எனக்குப் பிடிக்கும் - இவ்வாறு அவர் கூறினார்.

நடிகை பிரியங்கா சோப்ரா கூறிய தாவது :-

"கிரிக்கெட் வீரர்களில் உங்களுக்குப் பிடித்தவர் யார் என்று கேட்டால் டிராவிட் என்பேன். அவர் மீது வெறி பிடித்த ரசிகை நான். நம்பிக்கையான ஆட்டக்காரர் டிராவிட். அவர் விளையாட்டு ரொம்பப் பிடிக்கும். இந்திய கிரிக்கெட் அணி தற்போது தேறி இருக்கிறது. வீரர்களிடம் முன்னேற்றத்தைக் காணமுடிகிறது. கிரிக்கெட்டைப் பொறுத்தவரை எல்லா நேரமும் ஜெயிக்க முடியாது. தோற்றால் எதிர்ப்பது முறையல்ல. ரசிகர்களுக்கு சகிப்புத்தன்மை வேண்டும்" -இவ்வாறு சோப்ரா கூறினார்.


பாவனா

## கலக்கும் வடிவேலு

காமெடியில் நம்பர் வன் இடத்துக்கு உயர்ந்திருப்பவர் வடிவேலு. இம்சை அரசன் 23ஆம் புலிகேசியில் கதாநாயகனாக நடித்து சக்கை போடு போட்டார்.

இப்படம் 100 நாட்களைத் தாண்டி ஓடுகிறது. குடும்பப் பாங்கான 'எம் மகன்' படத்திலும் தூள் பரத்தியுள்ளார். வடிவேலு மவுசு கூடியுள்ளது. தயாரிப்பாளர்கள் பலர் வடிவேலுவை கதாநாயகனாக ஒப்பந்தம் செய்ய கால்ஷீட் கேட்டுக் காத்துக் கிடக்கிறார்கள்.



## அசின் சம்பளம்

அசின் தனது மேக்கப் மேன் மற்றும் டச்சப் போய்க்கு மாதச் சம்பளம் கொடுக்கிறார். பொதுவாக இவர்களுக்கு வேண்டிய சம்பளத்தை நடிகைகள், படக் கம்பெனிகளில் வாங்கி அன்றன்றே கொடுப்பது வழக்கம். ஆனால் அசின் அந்தப் பணத்தை வாங்கி தன்னிடம் வைத்துக் கொண்டு மாதச் சம்பளமாகப் பெரும் தொகையை அள்ளிக் கொடுக்கிறாராம்.

## மீண்டும் விஜய், பேரரசு

விஜய் கதாநாயகனாக நடிக்க சிவகாசி, திருப்பாச்சி படங்களை இயக்கியவர் பேரரசு. தற்போது விஜயகாந்த்தின் தர்மபுரி படத்தை டைரக்ட் செய்து வருகிறார். அடுத்து மீண்டும் பேரரசும் விஜய்யும் இணைகிறார்கள். விரைவில் படப்பிடிப்பு தொடங்குகிறது.


ஜீவா - நயன்தாரா
ஈ




### எதிர்காலம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுகிறது

மெல்லிய நீர்க்குழாய்களினுள்ளே
நீட்டி நிமிர்ந்து படுத்துக்
கொண்டிருக்கிறது
உயிர் வலி தெரியாமல்?

சொல்லவென்றும்,
புதைக்கவென்றும்,
தயாரிக்கப்படுகின்ற வார்த்தைகளின்
மெல்லிய அசைவில் நகர முற்பட்டு
செயற்கை முதலைகளை விழுங்கி
ஏப்பம் விடுகிறது நாள்.

எழுதுதலும், வாசித்தலும் அற்று
விளம்பரங்கள் கைவிட்ட
இடைவெளிகளில் பிரசுரமாகின்றன
எனது கவிதைகளும், கன்றும்
பிரசவித்த வலியில்,
எழுந்து நடக்கத் திராணியற்று
அழும்போது,
எறிந்து விட்டுப் போகிறார்கள்
எனது கருத்தரித்த கவிதைகளை
வாசல்களில் ஞாயிறுதோறும்.

முப்போதும் இழந்து,
இப்போதைக்காய் அழுகின்ற
பேனாக்களின் அவலத்தில்
கணனித்திரையில் விளையாடப்படுகிறது
இரண்டாம் உலக மகா யுத்தம்
பொழுது போக்காக.

இந்த நிமிடத்திற்கில்லா விடினும்
விடிவப் போகும் ஓரிரவில்
கைதிகளின் பாடல்களில்
நிறைந்திருக்கிறது அறை.

பெண்களை வரிசையில் நிறுத்தி
வாங்குகின்ற ஒவ்வொரு
செப்புக் காசுக்குமாய்
சுமைதாங்கிகளில் தொங்கவிடப்படும்
அறிவிப்புப் பலகையில்,
புதைந்திருக்கிறது ஒவ்வொரு
அப்பன்களினதும்
கௌரவம்.

*-வை.சாரங்கன்,*
*யாழ்ப்பாணம்.*

### பொருளியலாய் மணவாழ்க்கை

கேள்வியற்ற நிரம்பலில்
சிதறலாகிப்போன
அன்பின் தெறிப்புக்கள்
சூத்திரங்களின் சாமர்த்தியத்தால்
சமனாகிப்போன
வாழ்க்கை வாய்ப்பாடுகள்
இடையில் கொஞ்சம்
பணவீக்கம்
பெறுமதி இழக்கும்
வார்த்தை விநியோகம்
அதிகரிக்கும் வட்டிவீதமாய்
அவ்வப்போது கொடூரம்
சொற்களில் சிக்குண்ட
வன்முறைத் தாக்கம்

சில நேரங்களில்...

மணவாழ்க்கை கூட
ஒரு பொருளியல் போராட்டம்தான்

கேள்விப் பெருகிட
பதுக்கல் செய்யும்
பயங்கரவாத கறுப்புத்தனங்கள்
இடையிடையே உண்டென்றாலும்,

மீறல்கள் செய்து
வாதிட்டு வெல்லவும்
பிரதியீடு தேடி
மாற்றுப்பயன் கொள்ளவும்
இது ஒன்றும்
அரசியல் அல்லவே...!

படுக்கை பகிர்ந்து
நெகிழ்ச்சி தேடும்
உன்னை விடவும் உயர் வருமானம்
இல்லையதனாலும்
உற்பத்தி புள்ளி முதல்
முடிவிலியோரம் வரை
நீமட்டுமேயாய் இருப்பதாலும்,

எப்படியெப்படியோ குழம்பிப்போய்
தேவைகளை வரிசைப்படுத்தி
ஒன்றையிழந்து ஒன்றைப் பெறும்
அமையச் செலவாய்
எல்லாம் இழந்து
உன்னைப் பெறும்
தாரமாகிறேன்.

*-பிரமிளா செல்வராஜா,*
*ஹாலி – எல.*

### விடிவது எப்படி?

விடிந்து விட்டது!
துருப்பிடிக்காத ஆகாயம்,
அசுத்தமில்லாத அலைகடல்.
ஆபத்து பற்றிய பயமின்றி
சிறகடிக்கும் பறவைகள்.
கிலேசமின்றிப் பயணம்செய்யும்
மனிதர் கூட்டம்.
விளையாட்டும் சிரிப்புமாய்
விரைந்து செல்லும்
பள்ளிச் சிறார்கள்.

ஆங்கில தேசத்தில்
வேலை நிமித்தம்
ஐந்து நட்சத்திர விடுதியில்
தங்கியிருந்தபோது
விழித்த கண்களில் பட்டவை இவை.

அங்கே,
என் அன்னை தேசத்தில்
எப்படி விடிந்திருக்கும்?

செயற்கை இடி மின்னலால்
நெஞ்சிடியில் நித்திரையின்றி
கண்களில் எரிச்சலோடு
சிலருக்கு விடிந்திருக்கும்!

ஆமியோ, புலியோ
நரவேட்டை முடித்ததினால்
ஏதோ ஓர் உறவையும்,
நம்பிக்கையையும் பறிகொடுத்து
வான்முட்டும் அலறலோடு
சிலருக்கு விடிந்திருக்கும்!

என்ன கதைத்தேன்? ஏது செய்தேன்?
எதற்காய் பிடிபட்டேன்?
எதுவும் தெரியாமலே
ரணமான உடலோடு
சிலருக்கு விடிந்திருக்கும்!

போர் என்ற பேயை வைத்து
மோகம் தணிக்கும்.
மிருகங்களின் பலாத்காரத்தால்,
மானமிழந்து மனமுடைந்து
சிலருக்கு விடிந்திருக்கும்!

பலாத்கார வெறியர்களின்
முகம் தெரிந்து போனதாலோ,
அன்றி,
எதிர் தரப்பில் பழிபோடும்
இழிந்த அரசியல் காரணமாயோ,
மானத்தோடு உயிரும் இழந்து
சிலருக்கு விடிந்திருக்கும்!

கிளைமோர் தாக்குதலிலோ
விமானத் தாக்குதலிலோ
உடல் கிழிந்தோ
உயிர் பிரிந்தோ
சிலருக்கு விடிந்திருக்கும்!

போர்ப் பேயின் அலைக்கழிப்பால்
அடி வயிற்றில் புளி கரைக்க
கருக்கலைந்து வழிந்தோட
சிலருக்கு விடிந்திருக்கும்!

அங்கிங் கெனாதபடி
எங்கும் மரண பயம்
துரத்தித் துரத்தி விரட்ட
எல்லோருக்கும் விடிந்திருக்கும்!

பிணம் தின்னும் கழுகுகளின்
இரும்புப் பிடிக்குள் என் தேசம்.
விடிவது எப்படி?
விடிவது எப்படி??

பேசுவதற்கும், கேட்பதற்கும்,
பார்ப்பதற்கும், படிப்பதற்கும்
எழுதுவதற்கும் சுதந்திரமின்றி
உருவங்கள் நடமாடும் தேசத்தில்
விடிவது எப்படி?
விடிவது எப்படி??

அன்பையும், கருணையையும்
அனாதைகளாக்கி விட்டு
ஆயுதச் சனியன்களை
ஆராதிக்கக் கற்றுக்கொடுத்த
தலைவர் வாழும் தேசத்தில்
விடிவது எப்படி?
விடிவது எப்படி??

*-சின்னத்தங்கச்சி*

### மலையக அவலம்...

எலும்பும் தோலும் தெரிய
கூன் விழுந்த முதுகும்
மானத்தைக் காக்கின்ற துணியும்
பென்சன் கேட்டும் கொடுக்காததால்!
ஆங்காங்கே கிழிந்து அபலையின்
மானத்தை கூறுபோட்டு விற்கத்
துணியும்!

தொழிற்சாலை மணியொலிக்க
கொழுந்து பறிக்கும் கூடையோ!
முதுகோடு சென்று பற்றிக்கொள்ள
பச்சிளம் பாலகனை அவள் கை
பற்றுதே!
அன்ன நடையிழந்த வண்ணமயிலாம்
பெண், போவாள் கொழுந்து பறிக்க!

தொரைகள், கங்காணிகள் பிள்ளைங்க
ஒய்யாரமா, காரில் போக!
டவுண் ஸ்கூல் கதவும் திறந்திருக்கும்.
வேடிக்கை பார்க்கும் தொழிலாளிப்
பிள்ளையோ போகும் புள்ளைக்
காம்பராவுக்குள்
கண்களில் கண்ணீருடன்!

இருபதோ, முப்பதோ கூலி வாங்கி
வெளியே வர கடை முதலாளி நிற்பார்!
கோட்டை வாசலிலே கையிலிருக்கும்
பணமோ
அவர் பைக்குள்ளே போகும்
முழுவதுமாய்!
கண்ணீர்விட்டுக் கதறினாலும்
கரையாதே பாவி மனுசனுள்ளம்!

*-இரா.தாரணி,*
*நுவரெலியா.*


# விண்ணுக்கும் மண்ணுக்கும்

"**தெஹ்ரான்ல** ஒரு குட்டிப் பொண்ணு இருந்தா. அவளுக்கு இரவுகளில் வானத்து நட்சத்திரங்களை ஆசை ஆசையாய் பார்க்கிறதுதான் வேலை. அங்கே அப்படி என்னதான் இருக்கு? நானும் ஒரு நாள் அங்கே போய்ப் பார்க்கணும்!'' னு கனவு அவளுக்கு. இப்ப அந்தக் குட்டிப் பொண்ணுகிட்டே உன் கனவு என்னாச்சு? ன்னு நீங்க கேட்டீங்கன்னா, அவ நிறைய கலர் போட்டோஸ் காட்டுவா. அந்தக் குட்டிப் பொண்ணு நான்தான்! என்கிறார் அனுஷே அன்சாரி பரவசமாக! விண்வெளியில் சுற்றுலாப் பயணியாகப் போய் வந்திருக்கிற உலகின் முதல் பெண்!


அனுஷே அன்சாரி

அமெரிக்காவின் டெலி கம்யூனிகேஷன் துறையின் தொழில் அதிபராக இருக்கும் அனுஷே, பத்து நாட்கள் பயணமாக விண்வெளி சென்று திரும்பி வந்திருக்கிறார். ரஷ்ய விண்வெளி நிலையத்தின் இந்த சுற்றுலாவுக்கான டிக்கெட் எவ்வளவு தெரியுமா? 90 கோடி ரூபாய்!

ஜப்பான் தொழிலதிபர் ஒருத்தரைத்தான் கூட்டிட்டுப் போக முதலில் முடிவு பண்ணியிருந்தாங்க. வருத்தத்தில் இருந்த எனக்கு, ஒரு நாள் ஸ்பேஸ் சென்டரில் இருந்து போன் வந்தது. மெடிக்கல் டெஸ்ட்டில் அவரால் பாஸ் பண்ண முடியலை. நீங்க ரெடியா? ன்னு கேட்டாங்க. ஒரு நிமிஷம் திகைச்ச எனக்கு, அது உண்மைன்னு தெரிஞ்சதும் அவ்ளோ சந்தோஷம். எத்தனை காலக் கனவு!



நான் ஈரான் பொண்ணு. ஆனா, இப்போ இருப்பது அமெரிக்காவில்.

நீ பூமியில் பிறந்தவளே கிடையாது. உனக்கு பூர்வீகம் வேற ஏதோ ஒரு கிரகம்!னு என் கணவர் கிண்டல் பண்ணிட்டே இருப்பார். நிஜமாவே அங்கே போய் வருவது எவ்வளவு பெரிய சந்தோஷம். விண்வெளியில் என்னென்ன மாதிரி சூழல் இருக்குமோ, அது போலவே ஒரு சேம்பரை ரஷ்ய விண்வெளி நிலையத்தில் உருவாக்கி வெச்சிருப்பாங்க. அந்தச் சூழ்நிலைக்கு நம்மை ஆறு மாசம் பழக்கப்படுத்துவாங்க. டிரெய்னிங் முடிஞ்சு விண்வெளிக்குக் கிளம்பின நாள், என் வாழ்வில் மறக்க முடியாத மாபெரும் நாள்!


எனக்குத் துணையா இரண்டு ரஷ்ய விண்வெளி வீரர்கள் வந்தாங்க. விண்கலம் பூமியின் வாயு மண்டலத்தைத் தாண்டியதுமே, நான் மிதக்க ஆரம்பிச்சேன். பூமியைப் பார்த்தா கடல் மட்டும்தான் தெரியுது.

விண்வெளியில் இருந்த அனுபவம், வார்த்தைகளால் விவரிக்க முடியாத பரவசம். மறுபடியும் அம்மா வயித்துக்குள் இருந்த மாதிரி ஒரு சுகம். பூமியில் இருந்து எடுத்துட்டுப் போயிருந்த நத்தை, புழுக்களை வெச்சு சில ஆராய்ச்சிகள் பண்ணினாங்க. அப்படியே பத்து நாட்களும் நகர்ந்தது.

முடிவில் பூமிக்குத் திரும்ப வேண்டிய நாள், ஈரானில் அன்னிக்குப் புது வருஷம் பிறக்கிற நாள். அப்போ, சின்னதா நெருப்பைப் பத்தவெச்சு, அதைத் தாண்டி பாவ மன்னிப்புக் கேட்பது ஈரான் மக்களின் பழக்கம். கிளம்புற அன்னிக்கு நான் இருந்த சோயுஸ் விண்வெளிக் கலத்தில் இருந்தே நான் பாவ மன்னிப்புக் கேட்டேன். ஈரான் மக்களைவிட கடவுளுக்கு இன்னும் நெருக்கமா இருந்து மன்னிப்புக் கேட்கிறோம்னு நினைச்சேன்.

பூமியை நோக்கித் திரும்ப ஆரம்பிச்சது எங்களோட கலம். கீழ்நோக்கி வரவர அழுத்தம் அதிகமாகிட்டே வந்ததால், என் முகம் அஷ்ட கோணலா மாறுச்சு.

கொஞ்சம் காமெடியாவும் நிறைய பயமாவும் இருந்தது. பாராசூட் ஓபன் ஆகிற நேரத்தில், என் மேல் ஒரு யானை ஏறி உட்கார்ந்த மாதிரி கனமா இருந்தது. ஒரு வழியா கஜகிஸ்தான் சமவெளிப் பகுதியில் விண்வெளிக் கலத்தை இறக்கினாங்க. என்னைப் பார்த்ததும் என் கணவர் "என்ன, உன் சொந்தக்காரங்க எல்லாம் சௌக்கியமா இருக்காங்களா?'' ன்னு கேட்டார். அவர் முகத்தைப் பார்த்ததில் என் எல்லா கஷ்டங்களும் மறந்து போச்சு. எல்லாரும் உங்களை ஒரு தடவை வரச் சொன்னாங்க! ன்னு சொன்னதும் சிரிக்க ஆரம்பிச்சுட்டார்.



இப்படி ஒரு கணவர் கிடைத்தால், இன்னும் எத்தனை தடவைன்னாலும் விண்வெளிக்குப் போயிட்டு வரலாம்! என்கிறார் அனுஷே, மகிழ்ச்சியும் பெருமிதமுமாக!


-உங்க வீட்டில எப்படி?

*நன்றி ஆ. வி*

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் : எல். நவாஸ்,
வயது : 18
முகவரி : ஏறாவூர், மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு : வழமையானவை.



பெயர் : எம், பி, எம், அஸ்ரப் கான்
வயது : 32
முகவரி : வீதி - 20 தபால் பெட்டி இல. 6984, , டோஹா– கட்டார்.
பொழுதுபோக்கு : தொலைக்காட்சி பார்த்தல்,, பத்திரிகை வாசித்தல், கிரிக்கெட்

# கர்ப்பக் காலத்திலும் அழகாக ஜொலிக்க!

**பெண்கள்** கர்ப்பக் காலத்திலும் உடல் ரீதியாக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள். இந்த கால கட்டத்தில் அவர்களது மனதில் ஒருவித சோர்வும் பயமும் தோற்றிக் கொள்கிறது.

அதனால் அவர்கள் தங்களது அழகு பராமரிப்பில் கொஞ்சம் கூட ஆர்வம் காட்டுவதில்லை. பெரும்பாலான நேரத்தை தூங்கியே வீணடித்து விடுகிறார்கள்.



கர்ப்ப காலத்தில் வருகிற பிரச்சினைகள் பற்றிய கவலைகளை படார் என வீசி எறிந்து விட்டு உற்சாகமாக இருங்கள். மேனி அழகையும் சிம்பிளான முறையில் பராமரியுங்கள். இது மனதிற்கு தன்னம்பிக்கை தருவதுடன் உற்சாகத்தையும் ஊற்றெடுக்க வைத்து விடும்.

### கூந்தல் பராமரிப்பு

குழந்தை வளர்ச்சிக்காக எடுத்து கொள்கிற இரும்பு, பி.காம்ப்ளக்ஸ், விட்டமின்கள், கல்சியம், மாத்திரையில் கூந்தல் செழிப்பாக வளரும்.

தேங்காய் எண்ணெய் தடவி மசாஜ் செய்யலாம். நறுமண எண்ணெய் வேண்டாம். தலைக்கு குளித்தால் சாம்பிராணியோ டிரையரோ போட்டு ஈரமின்றி ஊற வையுங்கள்.

### பேஷியல்

கர்ப்பிணிப் பெண்கள் மெஷின் உதவியின்றி வெறும் கைகளால் செய்யப்படுகின்ற பேஷியலை தாராளமாகச் செய்து கொள்ளலாம். மூலிகை பொருட்கள், பழங்கள், காய்கறிகள் பயன்படுத்தி கையால் செய்கிற மசாஜ் உகந்தது. முகத்தில் மேலிருந்து கீழ்நோக்கி 5 நிமிடம் மசாஜ் செய்யும் போது உடலில் உள்ள தேவையற்ற நீர் வெளியேறும். உடல் மசாஜும் செய்யலாம்.

### கால் - கை பராமரிப்பு


முல்தானி மட்டி 4 ஸ்பூன், புருட்சால்ட் 2 டேபிள் ஸ்பூன், ரோஸ் வாட்டர் -6 ஸ்பூன் இவற்றைக் கலந்து கால், பாதம், உள்ளங்கால் என எல்லா இடங்களிலும் தடவி, வட்டமாக மசாஜ் செய்யுங்கள். கால் வலி பறந்துவிடும்.

### பிளீச் வேண்டாமே!

என்னதான் ஹெர்பல் பிளீச் என்றாலும் அது கெடாமல் பாதுகாக்க சிறிதளவாவது கெமிக்கல் சேர்க்கப்படுகிறது. பிளீச் செய்யும் போது தோலில் உள்ள துளைகள் வழியே இந்த கெமிக்கல் ரத்தத்தில் கலக்கிறது.

எனவே கர்ப்பிணிகள் ஒருபோதும் பிளீச் செய்யக்கூடாது. புருவத்தை அழகுபடுத்தலாம்!

வழக்கமாக புருவம்



திருத்துகிறவர்கள் கர்ப்ப காலத்திலும் திருத்திக் கொள்ளலாம்.

அதிக முடி இருந்தால் புருவத்தை திருத்தவே கூடாது. ஏனெனில் முடிவெட்டும்போது உணர்கிற வலி கர்ப்பப்பையில் உள்ள சிசுவையும் எட்டும்.

அது சரி, இனி பிரசவத்தில் ஏற்படுகிற தழும்பு பிரச்சினையை எப்படி சமாளிப்பது என்று சொல்கிறேன். கவனமாகக் கேட்டுக்குங்க!

கர்ப்பக்காலத்தில் வயிற்று தசைகளும், மார்பகங்களும் விரிவடைகின்றன.

அதனால் அந்தப்பகுதியில் அரிக்கிறது. சொறிவதால் அந்த



இடத்தில் தசை காய்ந்து விடுகிறது. அதுதான் பிரசவத்துக்குப்பிறகு தழும்பாகிறது. இதை தான் ஸ்டிரெச் மார்க் என்பார்கள்.

மாதுளைத் தோலையும், பசு நெய்யையும் கலந்து 3ஆவது மாதத்தில் இருந்து வயிற்றிலும் மார்பகத்திலும் தடவுங்கள். இதற்குப் பதிலாக ஆயுர்வேத மருந்து கடைகளில் கிடைக்கும் யுவதயாதி எண்ணெயையும் பயன்படுத்தலாம். அரிக்கும் இடத்தில் வேப்பிலை அல்லது மெலிதான துணியால் தடவி கொடுங்கள்.

இப்படி செய்து வந்தால் பிரசவத்துக்குப் பிறகு தழும்பா? அது எங்கே? என்பீர்கள்.

சீமந்த விழாவின் போது சில பெண்கள் கெமிக்கல் கலந்த மேக் - அப் போட்டுக் கொள்கிறார்கள். இந்த கெமிக்கலானது, அவர்களின் உடலில் கலந்து குழந்தைக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தி விட வாய்ப்பிருக்கிறது.

அழகுக்கலை பற்றி முறையாகப் பயின்றவர்களிடம் மட்டும் தான் கர்ப்பிணிப் பெண்கள் அழகு படுத்திக்கொள்ள வேண்டும்.


# வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

*கேள்வி இல்லை! பதில் இல்லை!*
*பொருட் கொள்வனவு அவசியமில்லை!*
*வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!*

## முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

44

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
........................................
தே.அ. அட்டை இல : ........................................
கையொப்பம் : ........................................

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:
31.10.2006

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போதுமானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற் பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -44**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

**பரிசுப் போட்டி இல - 42**
**பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

எம். துர்க்கா தேவி, கிளாஸ்கோ எஸ்டேட், அக்கரபத்தனை.

அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.





# புகைப்படம் எடுக்கப் போறீங்களா?

**பேரழகியாக** இருப்பார்கள், ஆனால் ஃபோட்டோவில் பார்த்தால் சுமாராகத் தெரிவார்கள். நேரில் சுமாராக இருப்பவர்கள் ஃபோட்டோவில் அட்டகாசமாய் தெரிவார்கள். கோளாறு அந்த நபரிடம் இல்லை. ஃபோட்டோ எடுக்கிற போதான போஸும், சில டெக்னிக்குகளுமே இதற்குக் காரணம்.



### இதோ சில டிப்ஸ்...

ஃபோட்டோவில் அழகாகத் தெரிய நீங்கள் ஐஸ்வர்யாராயாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. அழகான முகமும், அழகான உடலமைப்பும் மாடல்களுக்கு வேண்டுமானால் தவிர்க்க முடியாத தகுதிகளாக இருக்கலாம். மற்றவர்களுக்கு மனசுதான் முக்கியம். நிறைய நம்பிக்கை, தன்னம்பிக்கை, மனசெல்லாம் சந்தோஷம் இருந்தாலே போதும்.

அடுத்தது லைட்டிங் வெயிலில் நின்று ஃபோட்டோ எடுத்துக் கொள்ளப் போகிறீர்களா? அப்படியானால் வெயிலின் வெளிச்சமானது உங்கள் முகத்தின் மேல் விழ வேண்டும. அதுவே கண்களைக் கூசச் செய்கிற அளவுக்கு இருக்கக் கூடாது. ஜன்னலின் வழியே கசியும் மெலிதான சூரிய வெளிச்சத்தில் எடுக்கப்படும் படங்கள் இன்னும் அழகாக இருக்கும். வீட்டுக்குள் எடுக்கப்படும் போது மஞ்சள் நிற லைட்டிங் ஃபோட்டோவின் அழகைக் கூட்டும்.

முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது மேக்கப். மேக்கப் தேவைதான் என்றாலும், பெயிண்ட் அடித்த மாதிரி அதிகப்படியாகப் போடக்கூடாது. ஃபவுண்டேஷன் அல்லது கன்சீலர் தடவிக் கொள்வது முகத்திலுள்ள தழும்புகள், கரும்புள்ளிகள், வடுக்கள் போன்றவற்றை மறைத்து சருமத்தை அழகாகக்காட்டும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று அழகாக இருக்கும். அதைத் தெரிந்து கொண்டு அதிகக் கவனம் செலுத்தலாம்.

மிக முக்கியமான விஷயத்துக்காக எடுக்கப்படும் படங்கள் என்றால், முதலில் விதம் விதமான மேக்கப் மற்றும் ஹேர் ஸ்டைல்களைச் செய்துபாருங்கள். எது உங்களுக்கு மிக அழகாக இருக்கும் எனத் தெரிந்து கொள்ளலாம்.

கண்களுக்கான மேக்கப்பைத் தவிர்க்காதீர்கள். முகத்துக்கான எல்லாம் செய்து, கண்களைத் தவிர்த்தால், முகமே சோகமாகக் காட்சியளிக்கும். கண்களுக்குப் போடப்படும் மேக்கப் சட்டென ஃபோட்டோவில் மற்றவர்களது கவனத்தைக் கவரும்.

நீங்கள் அணிகிற உடையும், அவற்றின் நிறங்களும் கூட ஃபோட்டோ அழகாக அமையக் காரணங்கள். உதாரணத்துக்குச் சிகப்பு நிறம் உங்கள் முகத்தை அழகாக, ஆரோக்கியமாகக் காட்டும். கறுப்பு வெளிச்சத்தை உள்வாங்கிக் கொண்டு, உங்கள் முகத்தைக் கறுப்பாகக் காட்டும். எனவே சரியான நிறத்தில் உடையணிவதும் முக்கியம். உடை தவிர நீங்கள் உபயோகிக்கிற மற்ற பொருட்கள்,



உதாரணத்துக்கு கைப்பை, ஷூ, வாட்ச் போன்றவை எக்கச்சக்க பளபளப்புடன் இல்லாதவாறு பார்த்துக் கொள்ளவும். ஏனெனில் அவற்றின் பளபளப்பு கண்களில் பிரதி பலித்து, உங்கள் முகத்தை டல்லாக்கி விடும்.

என்னதான் மேக்கப், ஹேர் ஸ்டைல், டிரெஸ் என அசத்தினாலும், உங்கள் மனம் சந்தோஷமாக இல்லாவிட்டால் அது ஃபோட்டோவில் தெரிந்துவிடும். எனவே மனசுக்குள் என்ன சங்கடம் இருந்தாலும், ஃபோட்டோ எடுக்கிற அந்தச் சில நிமிடங்களுக்காவது எல்லாவற்றையும் மறந்து விடுங்கள். ஃபோட்டோ எடுக்கிற உணர்வே இன்றி இயல்பாக இருங்கள். அது உங்களின் உண்மையான அழகை வெளிப்படுத்தும்.

# சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* -ஷோபா-

## உருளைக்கிழங்கு பர்பி

### தேவையான பொருட்கள் :-

உருளைக்கிழங்கு துருவல் - 1 கப்
சர்க்கரை - 1 கப்
ஏலக்காய் - 6
நெய் - 4 தேக்கரண்டி
குங்குமப்பூ - சிறிதளவு

### செய்முறை :-

உருளைக்கிழங்கை தோல் நீக்கி துருவிக்கொள்ளவும். வாய் அகன்ற பாத்திரத்தில் துருவலையும், நெய்யையும் போட்டு அடுப்பிலேற்றி, சற்று கிளறிய பின்னர் சிறிதளவு தண்ணீரையும், சர்க்கரையும் சேர்த்து அடுப்பை நிழல் போல எரிய விட்டு கிளறி, கெட்டியாக வந்ததும் இறக்கி விடவும். பின்பு ஏலக்காய் பொடியையும், குங்குமப்பூவையும் சேர்த்து கிளறி, நெய் தடவிய தாம்பளத்தில் கொட்டி பரப்பி கத்தியால் துண்டு போடவும். ஆறியபின் எடுத்து தனித் தனியே வைக்கவும்.




**அந்த** மனிதன் காக்கி அரை நிஜாரும், நீண்ட சிவப்பு பூட்ஸும் அணிந்திருந்தான். அரைக்கு மேலே வெற்றுடம்பு. அவன் கையில் இரட்டைக்குழல் துப்பாக்கி இருந்தது. நடுத்தர உயரம். தடித்த உடம்பு. வெயில் பட்டுக் கறுத்த சருமம். வழுக்கைத் தலை. கண்ணின் மீதும், மூக்கின் மீதும் பிரகாசமான நீல நிறப் பச்சை குத்தியிருந்தது. நெற்றியின் நடுவே ஒரு கறுப்புப்பூச்சி குத்தியிருந்தது.

"நீ ஆயுதம் வைத்திருக்கிறாயா?" என்றான்.

இல்லை.

தனியாளா?

"இல்லை"

"எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?"

"மூன்று பேர்."

"உன் நண்பர்களிடம் என்னை அழைத்துப் போ."

"அது வேண்டாமென்று நினைக்கிறேன். என் நண்பர்களில் ஒருவனிடம் துப்பாக்கி இருக்கிறது. உன்னைக் கொலை செய்து விடுவான். அப்புறம் நீ என்ன செய்வதாக இருந்தாய் என்பது எனக்குத் தெரியாமலே போய்விடும்"

"ஓகோ! அப்படியானால் அங்குலம்கூட நகராதே. அமைதியாக விஷயத்தைச் சொல்லு. ஆஸ்பத்திரியிலிருந்து தப்பிய மூன்று பேர்வழிகள் நீங்கள்தானா?"

"ஆமாம்.

பட்டாம்பூச்சி என்பது யார்?"

"நான்தான்."

"நீங்கள் தப்பி வந்தாலும் வந்தீர்கள், கிராமம்பூரா அமளி துமளிப் பட்டுக் கொண்டிருக்கிறது. விடுதலையானவர்களில் பாதிப் பேரைப் பொலிஸார் கைது பண்ணி வைத்திருக்கிறார்கள். தெரிந்துகொள்!" அவன் என்னை நோக்கி வந்தான். துப்பாக்கியைத் தழைத்துக் கொண்டு கையை நீட்டினான் குலுக்குவதற்காக. "என் பெயர் பிரிட்டன். என்னைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?"

"இல்லை. ஆனால் நீ பொலிஸ் ஒற்றன் இல்லையென்று தெரிகிறது".

"கரெக்ட். ஹேக்கோ பறவையைப் பிடிப்பதற்காக இந்த வட்டாரத்தில் நான் கண்ணி வைப்பவன். ஒரு பறவையைச் சிறுத்தையோ, எதுவோ தின்றுவிட்டது போலிருக்கிறது. அல்லது நீங்களா?"

"நாங்கள்தான்."


"காப்பி வேண்டுமா?" அவனுடைய மூட்டையில் ஒரு தெர்மாஸ் பிளாஸ்க் இருந்தது. எனக்குக் கொஞ்சம் கொடுத்து, தானும் அருந்தினான்.

"என் நண்பர்களைப் பார்க்க வா," என்று அழைத்தேன். வந்தான். எங்களுடன் உட்கார்ந்து கொண்டான். என் தோழனிடம் துப்பாக்கி இருப்பதாக நான் சொன்னது கப்ஸா என்று தெரிந்ததும் சிரித்தான். "அதை நான் நிஜமென்று நம்பிவிட்டேன். ஆஸ்பத்திரியிலிருந்து தப்பியபோது நீங்கள் ஒரு துப்பாக்கியுடன் போனீர்கள் என்று எல்லோருக்கும் தெரியுமே? ஆகவே பொலிஸ் வேட்டைக்காரர்களுக்குப் பயம்தான். உங்களைத் தேடி வரமாட்டார்கள்."

கயானாவில் அவன் இருபது வருடமாக இருக்கிறானாம். வயது நாற்பத்தைந்து. இந்தக் காட்டில்தான் பிழைப்பு நடக்கிறது. பாம்பு, சிறுத்தை ஆகியவற்றின் தோல்களை உரித்து விற்பது, பட்டாம்பூச்சிகள் சேகரிப்பது, நாங்கள் சாப்பிட்டோமே அந்த ஹேக்கோ பறவைகளை உயிரோடு பிடிப்பது- இவைதான் பிழைப்பு. ஹேக்கோ பறவையை இருநூறு, இருநூற்றைம்பது ஃபிராங்குக்கு விற்பானாம்.

"கோழிப்பண்ணை நடத்துகிறவர்களிடம் விற்றுவிடுவேன். அங்கே இதற்கு ஏகப்பட்ட கிராக்கி. ஏன் தெரியுமா? நாய் மாதிரி பிரமாதமாய் எல்லாக் கோழிகளையும் காவல் காக்கும்!" என்றான்.

ஜீஸஸ், அவனுடைய உதவியாள், விடுதலையாகி இருந்த 30 கைதிகள் ஆகியோரை ஸெயின்ட் லாரன்ட் சிறையில் பிடித்து வைத்திருக்கிறார்கள் என்று பிரிட்டன் சொன்னான். நாங்கள் தப்பித்து வந்த கட்டடத்தின் அருகே அவர்கள் நடமாடியதை யாராவது பார்த்தார்களா என்று விசாரணை செய்கிறார்களாம். அரபுக்காரன் இருட்டுப் பொந்தில் இருக்கிறானாம். எங்களுக்கு உதவி செய்ததாகக் குற்றம் சாட்டி, அவனைத் தனிச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்களாம்.



ஜீஸஸ் கொடுத்த படகைப் பற்றி அவனிடம் சொன்னதும், "அவன் பெரிய மோசடி ஆளாச்சே? எங்கே படகு, காட்டுங்கள்," என்றான்.

காட்டினோம். பார்த்த மாத்திரத்திலேயே கூச்சல் போட்டான். "ராஸ்கல் கெடுத்தானே! உங்களைச் சாகடிக்கிறதென்று முடிவு செய்துவிட்டான் போலிருக்கிறது. கடலிலே ஒரு நிமிடம் கூட இந்தப் படகிலே தாக்குப்பிடிக்க முடியாதாக்கும்! ஒரே ஓர் அலை அடித்தால் போதும்- இரண்டாய் வாயைப் பிளந்துவிடும். இதிலே காலை வைத்துவிடாதீர்கள்- வைத்தால் தற்கொலைதான்!.

"பின்னே நாங்கள் என்ன செய்வது? அந்தப் படகை நம்பிக் கடல் பிரயாணத்தில் இறங்குவதும் தற்கொலை செய்வதும் ஒன்றுதான்" என்று பிரிட்டன் சொன்னான். பிறகு கேட்டான்:

"பணம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா?"

"இருக்கிறது".

"அப்படியானால் என்ன செய்யலாம் என்கிறதைச் சொல்கிறேன். கேட்டுக் கொள்ளுங்கள். நானே உங்களுக்கு ஒத்தாசை பண்ணுகிறேன்.

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*




**தி கிட் - படம், கதை**

# வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்"



திருமண வாழ்க்கை வெகு விரைவிலேயே முறிந்துவிட்டதை எண்ணி வருந்திய சாப்ளினின் மனம் பல பாதைகளில் செல்லத் தொடங்கியது. பெயரும் புகழும் திறமையும் இல்லாத பல நடிகைகள் சாப்ளினைச் சுலபமாக மயக்கி வலையில் விழ வைத்துக் காசு சம்பாதிக்கலாம் என்ற பச்சை நோட்டு எண்ணத்தோடு வட்டமிடத் தொடங்கினார்கள். ஏறத்தாழ ஓர் ஆண்டு காலம் மட்டுமே சாப்ளினின் மனைவியாக இருந்த மில்பிரிட்டுக்கு 3 லட்சம் டாலர்கள் விவாகரத்தை ஒட்டி ஜீவனாம்சமாகக் கிடைத்தது. இந்தத் தொகை அந்நாளில் சாதாரண பெண்கள் கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்குப் பெரும் பணம். ஆகவே சாப்ளினோடு உறவாடினால் உறவு மட்டுமல்லாமல் பண உரமும் கிடைக்கும் என்று பல பெண்கள் திட்டமிட்டார்கள். இதையெல்லாம் அறிந்த சாப்ளினின் நண்பர்கள் அப்பொழுது புத்திமதிகள் கூறி ஜாக்கிரதையாக இருக்கும்படி வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள்.



இந்தக் கால கட்டத்தில் ஒரு சுவையான நிகழ்ச்சி. அழகு மட்டும் உடலெங்கும் வீசித் தெளிக்கப்பட்டிருந்த ஒரு அநாமதேய நடிகை, ஒரு குழந்தைக்குத் தாயான போதிலும் தான் ஒரு கைபடாத ரோஜாக்கன்னி என்று தம்பட்டம் அடித்துக்கொண்டு ஹாலிவுட்டில் வலம்வந்து கொண்டிருந்தாள். அவளுடைய கண்ணைப் பறிக்கும் அழகு, ஹாலிவுட்டின் மேல்மட்டத்து விருந்துகள் கதவுகளை உடனடியாகத் திறந்தது. அந்த வகையில் அவள் சாப்ளினுக்கு நெருக்கமானாள். தனிமையில் வாடிக் கொண்டிருந்த சாப்ளினும் மயங்கினார். திடீரென்று ஒருநாள் அவள் காரிலிருந்து கடத்தப்பட்டாள். கார் சீட்டின் மீது அவளுடைய பொருட்கள் அங்குமிங்கும் சிதறிக் கிடந்தன. அவள் கடத்தப்பட்ட செய்தி ஊரெங்கும் காட்டுத் தீயைப் போல் பரவியது. சோகமே உருவாகச் சாய்ந்து விட்டார் சாப்ளின்.

அந்த நேரத்தில் சாப்ளினுக்கு இருவரிடமிருந்து கடிதம் வந்தது. கடத்தப்பட்ட பெண்ணை மீண்டும் உயிருடன் காண வேண்டும் என்றால் அதில் குறிப்பிட்ட தொகையை உடனடியாக ஒரு இரகசியமான இடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. சாப்ளின் அந்தப் பெண்ணின் மயக்கத்தில் அகப்பட்டுக் கொண்டிருந்த போதிலும் அவருடைய அறிவு முழுமையாக மங்கி விடவில்லை. அந்த மிரட்டல் கடிதத்தைத் தன்னுடன் பணிபுரியும் ஒரு பத்திரிகைக்காரரிடம் கொடுத்து விசாரிக்கச் சொன்னார். நடு வழியில் விடப்பட்டிருந்த கடத்தப்பட்ட பெண்ணின் காரை அவர் ஆழமாகப் பரிசோதித்தார். எந்தப் பொருளுமே அவசரத்தில் பறிக்கப்பட்டு, வீசப்பட்டதாகத் தடயங்களே இல்லை! அதிலிருந்து அவருக்கு ஒரு சந்தேகம். பணத்தைக் கொடுக்க வேண்டிய இரகசிய இடத்தை வட்டமிடத் தொடங்கினார். அங்கு ஒரு இளைஞன் வந்து போவதைக் கவனித்தார். அவனைப் பிடிக்கவும் செய்தார். அவன் உடனடியாக அடிக்குப் பயந்து உண்மையைக் கக்கி விட்டான். அந்த நடிகையே அவர்களுக்கு, சில டாலர்களைக் கொடுத்து, மிரட்டல் கடிதத்தை எழுதச் சொன்னதாகக் கூறினான். அதுமட்டுமல்லாமல், நடிகை தானாகவே ஒரு தனிமையான இடத்திற்குச் சென்று ஒளிந்து கொண்டிருப்பதையும் எடுத்துச் சொன்னான். அந்த இடத்திற்கு அந்தப் பத்திரிகைக்காரர் இரகசியமாகச் சென்றபொழுது அவள் அங்கிருந்து ஓட முயன்றாள். ஆனால் சுலபமாகப் பிடிபட்டாள். சாப்ளின், கடிதத்தைக் கண்டவுடன் தன்னை மீட்கக் காசுடன் வருவான், அதை எடுத்துக் கொண்டு குழந்தையுடன் வேறு எங்காவது ஓடி விடலாம் என்பதுதான் அவளுடைய திட்டம்.

முழு விபரங்களும் பத்திரிகையில் கொட்டை எழுத்துக்களில் இடம் பெற்றது. சாப்ளினுக்கு ஒரு பக்கம் கோபம்! மற்றொரு பக்கம் அவமானம்! யாரோ ஒரு ஊர் பெயர் தெரியாத பெண், மேதாவி என்று புகழ்பெற்ற தன்னை ஏமாற்றச் சுலபமான ஒரு வழியைக் கடைப்பிடித்தாளே என்பது அவரைச் சாட்டையடி போல் வருத்தியது.



தன்னுடைய ஆரம்ப கால அமெரிக்க வாழ்க்கையைப் பற்றிப் பின்னோக்கி நடந்தார். அப்பொழுது அவர் மனத்திரையில் தோன்றினாள் எட்னா பர்வயென்ஸ். தன்னுடன் பல படங்களில் கதாநாயகியாக நடித்து, நிஜ வாழ்க்கையிலும் சில காலம் முழு நேர காதலியாக வாழ்ந்தவள் அவள். மில்பிரிட்டுடன் திருமண வாழ்க்கை தொடங்கியபொழுது அவள் அதைப் பற்றி சாப்ளினிடம் எதையுமே கேட்கவில்லை. தான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்ற வகையில் மௌனமாகவே இருந்துவிட்டாள் அவள். அப்படிப்பட்ட ஒரு நல்லவளைத் தூக்கியெறிந்து விட்டோமே என்ற எண்ணம் சாப்ளினின் மனதைக் குத்தியது. மில்பிரிட்டின் சந்திப்பிற்குப் பிறகு எட்னாவிற்குப் படங்கள் எதுவும் வரவில்லை. ஹாலிவுட்டில் வாழ்க்கை நடத்த பெரும்பாடு பட்டாள் எட்னா. அதை அறிந்த சாப்ளின், தான் அவளுக்குச் செய்த அநீதிக்கு ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தார். அவளை மீண்டும் காதலியாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் அவருக்குத் தோன்றவில்லை. பெண்களோடு தொடர்புகள் இனி வேண்டாம். தொழிலில் முழு நேரக் கவனமும் செலுத்துவோம் என்று எண்ணினார். அதன்படி எட்னாவிற்கு உதவும் வகையில் ஒரு படத்தைத் தொடங்கத் திட்டமிட்டார். அதில் எட்னாதான் கதாநாயகி. படத்தை உருவாக்கி இயக்கினாரே தவிர, சாப்ளின் அதில் நடிக்கவில்லை. தான் நடிக்காமல் படத்தை இயக்குவது என்பது அவருடைய வாழ்க்கையில் ஒரு புதிய படி. அந்தப் படம்தான் 'ஏ வுமன் ஒப் பாரிஸ்' (A Woman of Paris, 1923 ).

இந்தப் படத்தை அவர் பல நாட்கள் யோசித்து, திட்டமிட்டு அதற்குப் பிறகு சில ஆண்டுகள் கழித்துத்தான் படமாக்கத் தொடங்கினார். அதற்கு முன்பு 'ஸன்னிஸைட்' என்ற சிறு படத்திலும் எட்னாவை நடிக்க வைத்தார். அதில் தானும் நடித்தார்.

பெண்களுடன் தொடர்பினால் ஏற்பட்ட சிக்கல்கள், மன வருத்தங்கள், வீண் செலவுகள் இவையெல்லாம் அவரைப் பெருமளவில் வருத்திய பொழுதிலும் அவருடைய நினைவெல்லாம், அந்த மூன்றே நாட்கள் வாழ்ந்த 'மூஞ்சூறுக் குட்டி' மீதே லயித்திருந்தது. எல்லாவகையான வசதிகளும் வழிந்தோடும் சூழ்நிலையில் பிறந்த அந்த அழகான குழந்தை மூன்றே நாட்களில் இந்த உலகத்தை விட்டுச் செல்வானேன்?

***(தொடரும்)***

# உலகப் பிரபலங்களின் அந்தரங்கங்கள்

**32**

## திஷ்யரஷிதா இராணியின் சதி!

தனது மகன் நாடாள வேண்டும் என்பதற்காக இராமாயண காலத்திலிருந்து பல தாய்மார் மேற்கொண்ட சம்பவங்கள் பல உலக வரலாற்றில் உண்டு. இதுபோன்று பாரத தேசத்தில் வரலாற்றுத் தடம் பதித்த அசோகச் சக்கரவர்த்தியின் வாழ்க்கையிலும் இடம்பெற்றது பலர் அறியாத விடயமாகும்.

தற்போதைய இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், நேபாளம் உள்ளிட்ட பெரும் நிலப்பரப்பினை உள்ளடக்கியதாகவே அன்றைய பாரதப் பேரரசு விளங்கியது. அப்பேரரசின் புகழ் பூத்த சக்கரவர்த்தியாக விளங்கியவரே அசோக சக்கரவர்த்தியாவார்.

அசோக சக்கரவர்த்தியின் மனைவியே திஷ்யரஷிதா மகாராணி ஆவாள். உண்மையில் திஷ்யரஷிதா ராஜ பரம்பரையில் வந்த ஒரு பெண் அல்ல. அவளது இயற்பெயர் காருவாமி என்பதாகும். பாரத தேசத்தையே பசுமைப் புரட்சிக்குக் கொண்டு வந்த அசோக சக்கரவர்த்தி, தேசமெங்கும் குளங்கள், நீர்நிலைகளை அமைத்து வழியெங்கும் மரங்கள் நாட்டி பெரும் சாதனை படைத்தவர்.

இவற்றைச் செய்தது மட்டுமல்லாமல், ஓர் நீதியான, நேர்மையான ஆட்சியினையும் நடாத்தி வந்தார். தனது குடிமக்கள் எவரும் எந்த வகையிலும் பாதிப்படையக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்த அவர் குடிமக்களிடையே எந்தவித வேறுபாடுகளையோ, ஏற்றத்தாழ்வுகளையோ காட்டவில்லை. தனது மக்களிடையே பேதம் ஏதும் பாராட்டாத அசோகர், அதனைச் சொல்லில் மட்டுமல்ல, தனது சொந்த வாழ்வில் செயலிலும் காட்டினார். சாதாரண குடிமகன் ஒருவருடைய மகளான காருவாமி என்ற பெண்ணையே மணந்து திஷ்யரஷிதா எனப் பெயர் மாற்றம் செய்து மகாராணி ஆக்கினார்.

அக்காலத்தில் மன்னர்கள் ஒன்றிற்கு மேற்பட்ட திருமணங்கள் முடித்திருப்பதும், அந்தப்புரம் வைத்திருப்பதும் பொது வழமையாக இருந்த நடைமுறையாகும். திஷ்யரஷிதாவை மணம் முடித்த அசோக மன்னர், பின்னர் அரச பரம்பரைப் பெண்ணான பத்மாவதி என்பவளையும் மணமுடித்து அவளை இரண்டாவது மகாராணியாக மாற்றினார். காலங்கள் சென்றன. அசோக மன்னரின் அடுத்த வாரிசை பாரத தேசமே எதிர்பார்த்திருந்தது. இச்சமயத்தில் யாரும் எதிர்பாராத ஒரு சம்பவம் இடம்பெற்றது. அசோகரின் இரண்டாவது மனைவியாகிய பத்மாவதி மகாராணி கர்ப்பமுற்றாள். இத்தனைக்கும் திஷ்யரஷிதாவை மணம் முடித்து சில ஆண்டுகள் கழித்தே பத்மாவதியை அவர் திருமணம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

கர்ப்பமடைந்திருந்த பத்மாவதி பத்தாவது மாதத்தில் அழகிய ஓர் ஆண்குழந்தையை பெற்றெடுத்தாள். அக்குழந்தைக்கு குணால் என அரச குடும்பத்தினர் பெயரிட்டனர். அக்கால அரச பாரம்பரியத்தின்படி அரசர் எத்தனை திருமணம் முடித்திருந்தாலும் முதலில் பிறக்கும் ஆண் குழந்தைதான் அடுத்த ராஜாவாக - அதாவது முடிக்குரிய இளவரசனாவான். இதன் பிரகாரம் குணால், பாரத தேசத்தின் முடிக்குரிய இளவரசனானான்.

இந்நிகழ்வு நடைபெற்று ஒரு வருடத்திற்குள்ளேயே திஷ்யரஷிதா கர்ப்பமுற்று ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அதற்கு தீவான் எனப் பெயரிட்டு வளர்த்தனர். முறையாகக் கல்வி பயின்று போர்க் கலைகள் உட்பட சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்த குணால், ஓர் அரசருக்குரிய அனைத்துத் தகுதிகளையும் பெற்றிருந்தான். குணாலுக்கு நாட்டை ஆள்வதற்குரிய ஆளுமை அனுபவம் வரவேண்டும் என்பதற்காக காந்தஹார் தேச (தற்போதைய ஆப்கானிஸ்தான்) கவர்னராக அவனை நியமித்து, அங்கு அனுப்பினார் அசோக மன்னர். அச்சமயம் குணால், காஞ்சனமாலா என்ற இளவரசியை திருமணம் முடித்திருந்தான்.



ஒருநாள் அசோக மன்னர், தனது மாட மாளிகையின் மாடியில் நின்றிருந்தபோது இரு பிச்சைக்காரர்கள் யாழை மீட்டியபடி உணர்வு ததும்பப் பாடிக்கொண்டு செல்வதைக் கண்டார். அவர்களது குரலும் முகமும் எங்கோ கண்டு, மாதிரி இருந்தபடியினால் அவர்களை யார் என விசாரிக்கச் சொன்னார்.

அசோக சக்கரவர்த்தியின் உத்தரவு என்றபடியினால் உடனடியாகச் செயற்பட்ட பாரத படைத் தளபதி பிரதிகர், அப்பிச்சைக்காரர்களை விசாரித்தபோது அவர்கள் கண்பார்வை இழந்திருந்த குணால் மற்றும் காஞ்சனமாலா என்ற அதிர்ச்சித் தகவல் தெரியவந்தது.

உண்மையில் நடந்தது என்ன?

தனது மகனான தீவான் பாரத தேசத்தின் அடுத்த மன்னராக வரவேண்டும் என திஷ்யரஷிதா எண்ணியிருந்தாள். இதன் காரணமாக ஒருமுறை அசோக மன்னர் கடும் நோய்வாய்ப்பட்டிருந்தபோது கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டாள். அதாவது அவ்வேளை, தனக்குப் பதிலாக ராஜ அரசாணைகளைப் பிறப்பிக்க தனது ராஜ முத்திரையை முதலாவது மகாராணியாகிய திஷ்யரஷிதாவிடம் ஒப்படைத்திருந்தார். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த அவள், அதே ராஜ முத்திரையைப் பயன்படுத்தி குணால், காஞ்சனமாலாவின் கண்களைப் பிடுங்கி விட்டு, அவர்களைக் கொன்று விடும்படி உத்தரவிட்டு ராஜ முத்திரையைப் பதித்து செய்தி அனுப்பி இருந்தாள். இதன் மூலம் தனது மகன் தீவான் அடுத்த மன்னராவான் என்பதே அவளது கொடிய சதித் திட்டமாகும்.

உண்மை அனைத்தையும் அறிந்து கொண்ட அசோக மன்னர், கொடும் சினம் அடைந்தார். உடனடியாகக் கூடிய அரச நீதிமன்றம், திஷ்யரஷிதாவுக்கு மரண தண்டனை விதித்தது. இதன்படி அவள் சுண்ணாம்புச் சூளையில் உள்ள எரிகம்பத்தில் கட்டப்பட்டு உயிரோடு கொளுத்தி எரிக்கப்பட்டாள்.

இதன்பின் சில வித்தியாசமான சம்பவங்கள் இடம்பெற்றன. மத்திய பாரத தேசத்தைச் சேர்ந்த புத்தகாயாவைச் சேர்ந்த கோஷிமித்ரா என்ற பௌத்த துறவி, குணாலின் கண்களை முழுமையாகக் குணப்படுத்தி பார்வையைப் பெற்றுக் கொடுத்தார் அசோகருக்குப்பின் குணாலே பாரத தேசத்தை ஆண்டான்.

திஷ்யரஷிதாவின் மரணத்தின்பின் அவளது மகனான தீவானுக்கு என்ன நடந்தது என்பது குறித்து தகவல்கள் இல்லை. ஆயினும் தாய் செய்த குற்றத்திற்காக அவனுக்குத் தண்டனை ஏதும் வழங்கப்படாத போதிலும் தனது மீதிக் காலத்தில் அவன் பரதேசியாகத் திரிந்ததாக சில வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

***(இரகசியங்கள் தொடரும்...)***

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான முயற்சிகள் தீவிரம்

**ஜெயவர்த்தனா** இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது, தனது பதவிக் காலம் 1988ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் முடிவடைவதால், அதற்கு முன்னதாகவே மாகாண சபைத் தேர்தல்களை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகக் கூறினார். அத்துடன் இந்திய நலன்சார்ந்த விடயங்கள் தொடர்பாகத் தான் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் குறித்தும் விளக்கினார். அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட 'வொய்ஸ் ஒப் அமெரிக்கா' ஒலிபரப்பு நிலையத்தைச் சிலாபத்தில் அமைப்பது தொடர்பான ஒப்பந்தத்தை அமுல்




படுத்தக் காலம் எடுக்குமென்றும் தற்போது அதற்கான காணியோடு சம்பந்தப்பட்ட விடயங்களே மேற்கொள்ளப்படுகின்றனவென்றும் கூறினார். திருமலையிலுள்ள எண்ணெய்க் குதங்களைச் சீரமைத்துப் பேணுவது சம்பந்தமான விடயங்கள் பற்றி இந்திய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்குமாறு உரிய அமைச்சுக்குத் தான் உத்தரவிட்டுள்ளதாகவும் ஜெயவர்த்தனா கூறினார். 1988 ஜனவரி மாதம் 31ஆம் திகதி புதுடில்லி விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி ஜெயவர்த்தனா இலங்கை திரும்பினார். தமிழக முதல்வர் எம்.ஜி. ஆரின்மறைவையடுத்து தமிழக அரசியலில் பெரும் கொந்தளிப்பான நிலையேற்பட்டது. இதனால் வைகோ, பழ.நெடுமாறன் உட்பட கலைஞர் கருணாநிதி கூட புலிகளுக்கு ஆதரவாகப் பேசத் தலைப்பட்டனர். இந்தச் சூழ்நிலையில் தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சிமுறை கொண்டு வரப்பட்டது. இதேவேளை, யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் இந்திய அமைதிப்படையின் கைகளுக்குள் கொண்டுவரப்பட்டது. வடக்கு, கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படாததாலேயே இந்த நிலையேற்பட்டது. பிரிகேடியர் கஹ்லோன் இதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். இவருக்குத் துணையாக இலங்கை சிவில் அதிகாரிகளும் இந்தியப் படையைச் சேர்ந்த சிலரும் விளங்கினர். புலிகள் இயக்கத்திற்கு எதிராக இந்தியப் படை

***புலிகள் இயக்கம் வன்செயல்களில் ஈடுபட்டு வந்ததால், ஏனைய தமிழ் குழுக்களின் ஆதரவுடன் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கான முன்முயற்சிகளை இந்திய அரசு மேற்கொண்டது. இதனை முறியடிப்பதற்காக வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக் கிராமங்களில் சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை புலிகள் இயக்கம் மேற்கொண்டது. இதன் மூலம் இனக் கலவரங்களை ஏற்படுத்துவது புலிகளின் நோக்கமாக இருந்தது. புலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு இந்திய படை சிங்களப் பகுதிகளுக்கு அனுப்பப்படும் என்றும் இதன் மூலம் சிங்கள மக்களுக்கிடையே இந்திய எதிர்ப் புணர்வை ஏற்படுத்தலாம் என்பதும் புலிகளின் திட்டமாக இருந்தது.***

தாக்குதலை ஆரம்பித்த பின்னரும் யாழ்ப்பாணத்தில் சட்டமும் ஒழுங்கும் கணிசமான அளவுக்குப் பேணப்பட்டது. உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் ஆகியவை சுமு கமாக நடைபெற்றன. யாழ்ப்பாணத்திற்கும் இலங்கையின் ஏனைய பகுதிகளுக்குமான தொலைத்தொடர்பு வசதிகளும்

(அரசியல் தொடர்)

சீரமைக்கப்பட்டன. திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் நிலைமைகளைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகளில் இந்திய அமைதிப்படை ஈடுபட்டது. வடக்கு, கிழக்கு நிலைமைகளைச் சீராக்கி அங்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான முயற்சிகளில் இந்தியப்படை ஈடுபட்டது.

புலிகள் இயக்கம் வன்செயல்களில் ஈடுபட்டு வந்ததால், ஏனைய தமிழ்க் குழுக்களின் ஆதரவுடன் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கான முன்முயற்சிகளை இந்திய அரசு மேற்கொண்டது. இதனை முறியடிப்பதற்காக வடக்கு, கிழக்கு மாகாண எல்லைக் கிராமங்களில் சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை புலிகள் இயக்கம் மேற்கொண்டது. இதன் மூலம் இனக் கலவரங்களை ஏற்படுத்துவது புலிகளின் நோக்கமாக இருந்தது. புலிகளைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியப் படை சிங்களப் பகுதிகளுக்கு அனுப்பப்படும் என்பதும் இதன் மூலம் சிங்கள மக்களுக்கிடையே இந்திய எதிர்ப் புணர்வை ஏற்படுத்தலாம் என்பதும் புலிகளின் திட்டமாக இருந்தது.

முஸ்லிம் மக்களைத் தாக்குவதன் மூலம் முஸ்லிம் - தமிழ் கலவரங்களை ஏற்படுத்துவதும் புலிகளின் திட்டமாக இருந்தது. முஸ்லிம் - தமிழ் கலவரங்கள் உருவாகினால், அது உத்தேச வடக்கு - கிழக்கு இணைப்புக்கு குந்தகமாக அமையுமென்பதை புலிகளால் விளங்கிக் கொள்ள முடியாது போனது பல தமிழ் தலைவர்களுக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. இணைந்த வடக்கு - கிழக்கே தமிழர்களின் தாயக பூமியென்ற கோட்பாட்டுக்குத் தமிழ் - முஸ்லிம் கலவரங்கள் எதிராக அமையுமென்பதால் பிரேமதாஸா, லலித் அதுலத் முதலி போன்றோர் அதனை வெகுவாக விரும்பினர்.

1988 மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி. எல்.எப்., ரெலோ போன்ற தமிழீழக் குழுக்களுடன் இந்தியப் படை தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது. ஈரோஸ் இயக்கத்தினருடன் கூட இந்திய அமைதிப் படை அதிகாரிகள் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதே இந்திய அதிகாரிகளின் நோக்கமாக இருந்தது.

1987ஆம் ஆண்டு அக்டோபர் மாத முற்கூறில் புலேந்திரன், குமரப்பா போன்றோரின் தற்கொலைகளையடுத்து இந்திய இராணுவத்துக்கெதிராக புலிகள் இயக்கம் ஆரம்பித்த உக்கிரமான தாக்குதல்களை ஐந்து மாதங்களுக்குள் இந்தியப் படை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. வடக்கு - கிழக்கில் மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து புலிகள் காட்டுப் பகுதிகளுக்கு விரட்டப்பட்டனர். இதனையடுத்து, வடக்கு - கிழக்கில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்தக்கூடிய சூழ்நிலை இருப்பதாக இந்தியப் படை அதிகாரிகளும் கொழும்பிலிருந்து இந்திய உயர்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

ஸ்தானிகர் தீக்ஷித்தும் 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் அறிவித்தனர். இதனையடுத்து, ஏப்ரல் மாத இறுதியில் மாகாண சபைத் தேர்தல்களைச் சிங்களப் பகுதிகளில் நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும், அதன் பின்னர் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல்களை செப்டெம்பர் அல்லது நவம்பர் மாதத்தில் நடத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா இந்திய அரசுக்கு அறிவித்தார். வடக்கு - கிழக்கிலும் சிங்களப் பகுதிகளிலும் ஒரே சமயத்தில் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதே நல்லதென்று இந்தியா, இலங்கைக்கு ஆலோசனை கூறியது. சிங்களப் பகுதிகளில் முதலில் தேர்தல்களை நடத்தி முடித்து விட்டால், பின்னர் வடக்கு - கிழக்குத் தேர்தல் வேலைகளில் முழுக் கவனத்தையும் செலுத்த முடியுமென்று ஜே.ஆர்.பதிலளித்தார். ஆனால் 'அரசியல் குள்ளநரி' என்று பெயர் பெற்ற ஜெவர்த்தனாவின் திட்டம் வேறுவிதமாக அமைந்திருந்தது. வடக்கு - கிழக்கில் மாகாண சபையை அமைப்பதானது, நாடு பிரிவினைக்கு முன்னோடியென்று சிங்கள மக்கள் மத்தியில் பௌத்த பிக்குகளும் சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி.போன்ற அரசியல் கட்சிகளும் செய்து வரும் பிரசாரத்தை முறியடிப்பதே அவரின் திட்டமாக அமைந்திருந்தது. அத்துடன் மாகாண சபை முறைமையை எதிர்த்து போராட்டம் நடத்திவரும் கட்சிகள் அவற்றைப் பகிஷ்கரிக்கும் நிலையில், தனது கட்சியே சகல சபைகளையும் கைப்பற்றிக் கொள்ளுமென்பதும் அவருக்கு நன்கு தெரியும். அது மட்டுமல்ல, ஏக காலத்தில் தமிழ்ப் பகுதிகளில் புலிகளின் எதிர்ப்பையும் சிங்களப் பகுதிகளில் கடும்போக்குக் கட்சிகளின் எதிர்ப்பையும் முறியடிப்பது கஷ்டமென்பதும் ஜே.ஆருக்குத் தெரியும். அதன் பின்னர் வடக்கு - கிழக்கில் தேர்தல்களைக் குழப்புவதில் புலிகள் வெற்றி பெற்றால் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பைக் கையேற்றுக் கொண்ட இந்தியப் படை மீது பழியைப் போட்டு விடலாமென்பதும் ஜே.ஆரின் திட்டமாகும். அத்துடன் நியாயபூர்வமான இனப்பிரச்சினைத் தீர்வைத் தமிழர்கள் விரும்பவில்லையென்றும் கூறலாமல்லவா?

இதற்கிடையில், 1988 ஏப்ரலில் ஒன்பது மாகாண சபைகளுக்கும் தேர்தல்கள் நடத்தப்படுமென்று தேர்தல் ஆணையாளர் சந்ரானந்த டீ சில்வா வர்த்தமானி அறிவித்தலை ஏற்கனவே விடுத்திருந்தார்.

வடக்கு - கிழக்கிற்கு வெவ்வேறான மாகாண சபைகள் அமைக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டதால், தமிழர் தரப்புகளிலிருந்து எதிர்ப்புகள் கிளம்பின. எனவே வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தலை ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் பின்போடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதற்கிடையில் வன்செயல்களால் இடம்பெயர்ந்திருக்கும் சுமார் மூன்று இலட்சம் அகதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பாதவரை வடக்கு, கிழக்கில் தேர்தல் நடத்தப்படக் கூடாதென்று தமிழர் விடுதலைக் கூட்டணி கோரிக்கை விடுத்தது. அத்துடன் இலங்கை அரசினால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்பட வேண்டுமென்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி கோரிக்கை விடுத்தது. இதேவேளை, புலிகளை முற்றுமுழுதாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவராவிட்டால், புலிகள் தேர்தலைக் குழப்புவார்களென்று ஏனைய தமிழ் குழுக்கள் அச்சம் தெரிவித்தன. இதற்கிடையில் இலங்கையின் வடக்கு, கிழக்கில் தேர்தல்கள் நடத்தும் சாத்தியம் பற்றி இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

(தொடர்ந்து வடியும்....)




பிரபாகரன் உருவில் இருந்த கோவிந்தன் குமாரின் அறைக்குள் நுழைய முயற்சிக்கிறான். குமார் திடுக்கிட்டுக் கண் விழித்தார். அப்போது ஸ்ரீதேவியும் அங்கு இல்லை அவருடன் பேசிக் கொண்டே தாக்குவதற்கான திட்டத்தைத் தீட்டினான். பிரபாகரன் அங்கிருந்த விளக்கை எடுத்து அதன் தண்டால் தலையில் அடிக்க முயற்சி செய்து கொண்டிருந்தான்.

"**வி**ளக்கையெல்லாம் தேய்ச்சுக் கழுவி ரொம்ப நாளாச்சுன்னு தோணுது" - என்று கூறியபடியே விளக்கின் அடிப்பகுதியைக் கையில் எடுத்தான். அதன்மீது ஒட்டியிருந்த அழுக்குகளைச் சுரண்டத் தொடங்கினான்.

திடுமென்று அவன் கைகள் விறைப்பு அடைந்தன. விளக்குத் தண்டைக் கையில் எடுத்தான்.

கோவிந்தனையே கவனித்துக் கொண்டிருந்த குமார், சரியான தருணத்தில் சட்டென்று விலகியிருக்காவிட்டால் அவரது தலை பிளந்து இரத்தம் கொட்டியிருக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை!

சட்டென்று முற்றத்தின் பக்கமாகப் பாய்ந்த குமார் கேட்டார்: "என்ன பண்ற நீன்னு உனக்கே தெரியுதா பிரபாகரா?" ஒருவேளை அதிகமாகக் குடித்து சுய நினைவை இழந்து விட்டானோ என்ற சந்தேகமும் அவருள் ஏற்பட்டது.

ஆனால், பிரபாகரன் அதைக் காதில் வாங்கியதாகவே தெரியவில்லை.

அவன் மறுபடியும் குமாரைத் தாக்குவதற்காக விளக்குத் தண்டை ஓங்கினான்.

இந்தச் சூழ்நிலையை எப்படிச் சமாளிப்பது என்று குமாருக்குப் புரியவில்லையானாலும் சட்டென்று அவனைப் பிடித்துப் பின்னுக்குத் தள்ளினார்.

கோவிந்தன் விளக்குடன் வீழ்ந்தான், இருப்பினும் விரைவிலேயே ஒரு புலியைப்போலப் பாய்ந்து எழுந்தான். குமாரையே வைத்தகண் வாங்காமல் வெறித்துப் பார்த்தான்.

அந்தக் கண்களில் ஒருவிதப் பளபளப்புத் தெரிவதாகத் தோன்றியது.

குமார் உடனே வராந்தா மீது தாவி ஏறினார்.

**எழுதுவது**
**சிவன்**

சுற்றுமுற்றும் பார்த்தபோது அவனுடன் மோதுவதற்கு ஏற்ற ஆயுதம் எதுவும் அகப்படவில்லை. ஆனால், சுவரில் சுதர்சன இயந்திரம் எழுதிய பெரிய தகடு ஒன்று ஃபிரேம் செய்து மாட்டப்பட்டிருந்தது தட்டுப்பட்டது. எந்தக் காலத்திலோ எழுதிப் பொருத்தப்பட்டது அது.

பஞ்சலோகத் தகட்டில் தயாரிக்கப்பட்டிருந்த அந்தத் தகட்டைச் சுற்றி கருந்தேக்கு மரத்தாலான ஃபிரேம் ஓர் அடி சதுரத்தில் அமைந்திருந்தது.

குமார் சட்டென்று அந்த இயந்திரத்தை சுவரிலிருந்து பெயர்த்து எடுத்து கோவிந்தன் மீது வலுவுடன் எறிந்தார்.

ஃபிரேம் அவனது மார்புப் பகுதியில் விழுந்தது.

அவன் அப்படியே தரையில் மல்லாந்து விழுந்தான். அவனது கையிலிருந்த நிலவிளக்கு தூரத்தில் போய் விழுந்தது. அவனது கையிலிருந்த ஆயுதம் கீழே விழுந்து விட்டதால் மேற்கொண்டு அவனை நெருங்க எந்த விதமான தயக்கமும் குமாருக்கு ஏற்படவில்லை.

ஆனால், விழுந்தவன் எழுந்தவுடன் எதையோ கண்டு அரண்டவனைப்போல் மிரள மிரள விழித்து, தெரு வாசலைத் தாண்டித் தலை தெறிக்கும் வேகத்தில் ஓடினான்.

குமார் ஒன்றும் புரியாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

எல்லா வகையிலும் தனக்கு



வலது கைபோல் உதவிக் கொண்டிருந்த பிரபாகரன் எப்படி இந்த அளவுக்கு விரோதியாக மாறினான் என்பது குமாருக்கு இன்னமும் வியப்பாகவே இருந்தது. யோசனையில் ஆழ்ந்தவாறே குமார் வராந்தாவில் அமர்ந்தார்.

நடந்த சம்பவங்கள் எல்லாமே ஒன்றுக்கு ஒன்று தொடர்பற்று, பிடிபடாதது போல் தோன்றியது. பிரபாகரனுக்கு என்னதான் ஆகியிருக்கிறது என்பதும் புரியவில்லை. அவனை மிகவும் நுட்பமாகக் கவனிக்க வேண்டும் என்று குமாருக்குத் தோன்றியது.

நள்ளிரவைத் தாண்டி வெகு நேரம் ஆகிவிட்டதை குமார் உணர்ந்தார்.

சரி, கொஞ்ச நேரமாவது படுத்துத் தூங்கலாமென்று வீட்டுக்குள் நுழைய முற்பட்ட போது தெரு வாசற்படியருகே ஓர் உருவம் தென்பட்டது. அது முன்னேறவும் செய்தது. சற்றுத்தொலைவில் வந்த பிறகு தான் ஆளை அடையாளம் தெரிந்தது.

அவள் ஸ்ரீதேவி.

"இவ்வளவு நேரம் எங்கே போயிருந்தே ஸ்ரீதேவி?" குமார் விசாரித்தார்.

"இன்னிக்குத் துர்க்காஷ்டமி நாளிலலையா. தேவிக்குத் துணையாப் போயிருந்தேன்" - ஸ்ரீதேவி பதிலளித்தாள்.

"தூங்குறதுக்கு முன்னாடி அது எனக்கு ஞாபகம் இருந்தது. அப்புறம் நடந்த களேபரத்தில மறந்தே போயிட்டேன். உண்மையைச் சொன்னா நான் நூலிழையில தப்பிச்சிருக்கேன்." - குமார் முற்றத்தில் கிடந்த நிலவிளக்கு மற்றும் ஃபிரேமைப் பார்த்தபடி பேசினார்.

அப்போதுதான் அவற்றைப் பழையபடி எடுத்த இடத்தில் வைக்கவில்லையே என்ற ஞாபகமும் எழுந்தது.

முதலில் சுதர்சன இயந்திரத்தை எடுத்தார். அதை மறுபடி சுவரில் மாட்டப் போகும் போதுதான் அதிலிருந்த கொக்கி கழன்று போயிருப்பது தெரிய வந்தது. எனவே அதை வாசல்படி மீது வைத்தார், நிலவிளக்கின் அடிப்பகுதியை எடுத்து வந்தார்.

அதிலிருந்த எண்ணெயும், திரிகளும் வராந்தாப் பகுதியில் சிதறிக் கிடந்தன.

திரிகளை எடுத்து வைத்த பிறகு உள்ளேயிருந்து எண்ணெய் எடுத்து வந்து விளக்கேற்றினார்.

"என்னதான் நடந்தது?" - ஸ்ரீதேவி கேட்டாள்.

"பிரபாகரன் இங்க வந்திருந்தான். இந்த விளக்குத் தண்டால என் தலையைப் பிளக்க வந்தான். எப்படியோ நல்லவேளையாத் தப்பிச்சுட்டேன். அவ்வளவுதான்!"

"இது ஏன் இங்க வந்தது?" சுதர்சன இயந்திரத்தைக் காட்டியபடி அவள் கேட்டாள்.

"கைக்கு ஒண்ணும் கிடைக்கலேன்னதும் இதை எடுத்து அவன் மேல எறிஞ்சேன்!"

"அதுக்கப்புறம் என்ன நடந்தது?" ஸ்ரீதேவி சந்தேகத்துடன் கேட்டாள்.

"இந்த இயந்திரம் சரியா அவன் நெஞ்சு மேல விழுந்தது. அதுக்கப்புறம் அவன் ஒரு வினாடிகூட நிக்கலை, ஓடிட்டான்."

"ஓகோ! அப்படியா சேதி?" - ஸ்ரீதேவி யோசனையில் ஆழ்ந்தாள். பிரபாகரனிடம் ஏதோ மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை அவள் ஏற்கனவே அனுமானித்திருந்தாள். ஆனால், அவனது சக்தியும் வளர்ந்து கொண்டிருப்பது இப்போது புரிந்தது.

"பிரபாகரனை ரொம்ப

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி

# பொறாமைப்பட வைக்கணும்!


**சில** பேர் இருக்கிறார்கள் அடுத்தவர்கள் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்தாலே, அவர்களுக்குப் பொறுக்காது. அப்படிப்பட்ட மனிதர்களை நீங்கள் கூடப் பார்த்திருக்கலாம்!

வாடகை வீட்டில் இருப்பவர்கள் இதை அனுபவித்திருப்பார்கள். அதுவும் ஹவுஸ் ஓனர் ஒரு போர்ஷனிலும் வாடகைக்கு இருப்பவர்கள் இன்னொரு போர்ஷனிலும் இருந்தால், கேட்கவே வேண்டாம். வாடகைக்கு இருப்பவர்கள் கடைக்குப் போய் ஏதாவது டி.வி, கிரைண்டர் என்று வாங்கி வந்து விட்டால் போதும்... வீட்டுக்குச் சொந்தக்காரர் தடாலென வாடகையை ஏற்றிவிடுவார்.

வாடகைக்குக் குடியிருப்பவரின் வீட்டுக் குழந்தைகள் நன்றாக மார்க் எடுத்து, ஹவுஸ் ஓனரின் குழந்தைகள் குறைவாக மார்க் எடுத்துவிட்டால், இரவு பத்து மணிக்கே விளக்கை எல்லாம் அணைக்கச் சொல்லி உத்தரவு பறக்கும். அடுத்தவர்கள் சந்தோஷமாக இருப்பதையோ அல்லது வாழ்க்கையில் முன்னேறுவதையோ இப்படிச் சிலரால் கொஞ்சம்கூடச் சகித்துக்கொள்ள முடிவதில்லை!

இதுபோன்று பொறாமைத் தீயில் வெந்து பொசுங்கும் நபர்களின் மனநிலையை விளக்க சுவாரஸ்யமான ஒரு கதை உண்டு.

ஒரு முறை அலுவலகம் ஒன்றில் ஸ்டோர்ரூமில் பழைய விளக்கு ஒன்று கிடைக்கிறது. அது என்ன என்று தெரியாத ஸ்டோர்கீப்பர், அதைத் தன் மனேஜரிடம் கொண்டுவந்து காட்டி, "இது ஏன் இங்கே இருக்கிறது?" என்று கேட்கிறார். அப்போது பக்கத்தில் இருந்த காரியதரிசி, விளக்கின்



மீதிருந்த தூசியைச் சுத்தம் செய்ய முயல...· மாயாஜாலக் கதைகளில் வருவதைப் போல விளக்கில் இருந்து ஒரு பூதம் வெளிப்படுகிறது.

இது அற்புதவிளக்கு என்று தெரிந்துகொண்ட அந்தக் காரியதரிசி, "நான் ஊட்டிக்குப் போய் ஒரு வாரம் ஜாலியாக இருக்க வேண்டும்" என்று கேட்டாள். பூதம் "அப்படியே" என்றது. அடுத்த கணம் அவள் ஊட்டியில் இருந்தாள். சட்டென்று காரியதரிசி காணாமல் போனதைக் கண்டு ஆச்சரியப்பட்ட ஸ்டோர்கீப்பர், "நான் ஒரு மாத காலம் ஜாலியாக சிம்லாவில் தங்கியிருக்க ஆசைப்படுகிறேன்" என்று சொல்ல... பூதம் "அப்படியே" என்றது. அவர் விசுக்கென்று அடுத்தகணம் சிம்லாவுக்குப் போய்விட்டார்.

மனேஜர் மட்டும் எதுவும் கேட்காமல் கோபமாக இருந்ததைப் பார்த்த பூதம்,"உனக்கு என்ன வேண்டும் கேள்?" என்றது. உடனே அந்த மனேஜர், "என் காரியதரிசியும் ஸ்டோர் கீப்பரும் உடனடியாக டியூட்டிக்கு இப்போதே வர வேண்டும்" என்று கேட்டார். இது எப்படி இருக்கு?

புதிதாகக் கல்யாணமான மகன் தங்கியிருக்கும் அறைக்கு மருமகள் போனாலே "அடுப்பில ஏதோ தீயற வாசனை வருது... என்னான்னு பாரு" என்று மருமகளுக்கு உத்தரவு போடும் மாமியார் மாதிரியான கரெக்டர்கள் இன்னமும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அடுத்தவர்கள் சந்தோஷத்தைக் கெடுப்பதால் எப்போதுமே நமக்குச் சந்தோஷம் கிடைக்காது என்பதை அவர்கள் போகப் போக நிச்சயமாகப் புரிந்து கொள்வார்கள். அதனால் இத்தகைய நபர்களைப் பார்த்து பதிலுக்கு நாமும் எரிச்சல் அடைய வேண்டிய அவசியமில்லை. அப்படி நாம் எரிச்சலடைந்தால், அவர்களின் எண்ணம் ஈடேற நாமே வழிவகை செய்து கொடுத்ததாகிவிடும்.

எனவே, உங்களின் அன்றாட வாழ்க்கையில் இத்தகைய நபர்களை நீங்கள் எதிர்கொள்ள நேர்ந்தால், மனசுக்குள் கூடத் திட்டாதீர்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால், அந்த நபர் உங்களின் மேலதிகாரியாகவோ அல்லது ஹவுஸ் ஓனராகவோ இருக்கும் பட்சத்தில், அவர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே உங்களுக்குக் கோபம், எரிச்சல் எல்லாம் வரும். அப்படி வந்தால் அது உங்களின் சந்தோஷத்துக்குத்தான் கெடுதலாக முடியும்!

இந்தப் பிரச்சினையை வேறு ஒரு கோணத்தில் இருந்தும் பார்க்கலாம். அதற்கு முன் ஒரு சின்னக் கதை.

அது ஒரு பிரமாண்டமான கண்ணாடி பங்களா. சாலை ஓரமாகத் துள்ளி விளையாடிக் கொண்டிருந்த நாய்க்குட்டி ஒன்று அந்த பங்களாவுக்குள் புகுந்தது.

உள்ளே திரும்பிய பக்கமெல்லாம் தெரிந்த கண்ணாடிகளில் அதன் பிம்பங்கள் தெரிய, அது புரியாமல் தனக்குச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான நாய்கள் மகிழ்ச்சியாக இருப்பதைப் பார்த்து, அந்த நாய்க்கும் முன்பை விட பலமடங்கு சந்தோஷம் பெருக்கெடுத்தது.

இந்த நாய்க்குட்டி வந்து போன சிறிது நேரம் கழித்து, அந்தக் கண்ணாடி பங்களாவுக்குள் கோபமான உறுமலுடன் வேறு ஒரு தெரு நாய் நுழைந்தது. தனக்குச் சுற்றிலும் நூற்றுக்கணக்கான நாய்கள் கோபத்துடன் முறைப்பதைக் கண்டு எரிச்சலாகி, அவற்றின் மீது ஆவேசத்துடன் பாய்ந்தது. கண்ணாடிகள் உடைந்து சிதறி, இந்த நாயின் உடம்பைக் கீறிப் புண்ணாக்கின.

நமக்குச் சுற்றிலுமிருக்கும் மனிதர்களின் முகங்கள் அனைத்தும் கண்ணாடிகள் மாதிரிதான். எதிரே நிற்பவரின் முகத்தில் தெரியும் முகபாவம் நம்முடைய முகபாவமே!

"நம்மைப் பார்த்து பொறாமைப்படும் ஒருத்தனைப் பார்த்து எப்படி சுவாமி சும்மா இருப்பது? இதுபோன்ற வயிற்றெரிச்சல் பிடித்தவர்களுக்கு எல்லாம் சரியான பாடம் கற்பிக்க வேண்டாமா?" என்று சிலர் கேட்கக் கூடும்.

உங்களைப் பார்த்து யாராவது பொறாமைப்பட்டால் அதற்கு என்ன அர்த்தம்? அவர்கள் பொறாமைப்படும் அளவுக்கு ஏதோ ஒரு விஷயத்தில் நீங்கள் உயர்ந்திருக்கிறீர்கள் என்று தானே அர்த்தம்! அது அவர்கள் உங்களுக்குக் கொடுக்கும் சர்டிபிகேட் என்று நீங்கள் ஏன் எடுத்துக் கொள்ளக்கூடாது?

(தொடர்ந்து வரும்.....)

## மின்சாரக் கதைகள்

- வழங்குவது ராஹில்

## இது ஒரு மதம்

நீ களைப்பாக
இருக்கிறாய், நான்
உனக்காகநித்திரை
செய்யட்டுமா? என்றேன்.
அதெப்படி? எனக்குப்
பசிக்கிறது நீங்க
சாப்பிட்டால் என் வயிறு
நிறையுமா?என்றாய் நீ.
நிறையும்...!மனசு
நிறையும்...என்
உயிர்நிறையும் என்றேன்.
எனக்கு ஜூ ரம்
வந்தால் என்னை விட நீ
தானே துடித்துப்
போகிறாய்...ஏன்...? நான்
வினாச் செய்தேன்.
நீ மௌனம் தூவினாய்.
சமையலறையில் உன்
கையை நீ வெட்டிக்
கொண்ட போது என்
ரத்தமல்லவா கொட்டியது.
நான் உன் மீது
கொண்டது காதலல்ல.
அன்பு, பாசம்,
கருணை, இரக்கம், நேசம்
இந்த ஐந்தும் சேர்த்துச்
செய்தால் எதுவோ
அது...!
இது ஒரு வேதம்.
உயிரிலிருந்து
உருவாகின்ற மதம் காதல்
நாம் மட்டும்
உச்சரிக்கின்ற பாஷை.
சாப்பாடு ரெடி!
என்பாய்.
நான் உயிரால்
சுவைப்பேன்
நீ தொட்டஉப்புக்கூட
இனிக்கிறது என்பேன்.
இவ்வளவு சுவையாகச்
சமைக்கிறாயே! எப்படி?
என்றேன்.
உங்கள நினைச்சுக்
கொண்டே
சமைக்கிறேன்...
அதான்...நீ உண்மை
வைத்தாய்.
அன்புடன் கலக்கின்ற
காமம் கூட காதலாகி
விடுகிறது.
சிற்றின்பம்
பேரின்பமாகிறது.
சற்றுப் பிந்தி வீட்டுக்குள்
வசித்தேன்.
சாப்பிடுங்க! என்றாய்.
நான் சாப்பிட்டாச்சு...!நீ
சாப்பிட்டாயா? என்றேன்..?
நீ பதில் பூக்கவில்லை.
உன் குரல் அழுகையோடு
புரண்டது.
நா...ன்...உங்கள...விட்டுத்
தனியாக...சாப்பிட்டதுண்டா...?
நீ விழிகளால் நதி
செய்தாய்.
என் உயிரில் வலி
கசிந்தது.
என் நரம்புகளில் கவலை
கலந்தது.
வா...!சாப்பிடலாம்...என்று
அழைத்தேன்.
நீ மனது கலந்து
பரிமாறிவிட்டுத்தான் உன்
பசிதணித்தாய்.
நான் சாப்பிடும்போது
உன்மனதும் உயிரும்
நிரம்பியதை மிகவும்
ரசித்தேன்.
சாப்பிட்டேன் என்று ஏன்
பொய் சொன்னீங்க?
நான் ஒரு நிமிஷம்
செத்துப் போயிட்டேன்...
தெரியுமா...? என்றாய்.
இப்படிக் கண்ணீருக்குள்
தேன் எடுக்கின்ற முயற்சிதான்
காதல்.
நான் உறங்கிவிட்டேன்
என்று நீ என் கால்களை
முத்தமிடுவாய். கோடிப்பூக்கள்
எனக்குள் பூக்கும்
அப்பொழுது.
என் கால்களை நீங்க
முத்தமிடலாமா? என்றாய் ஒரு
பொழுதில் நீ.
முத்தந்தான் காதலின்
வணக்கம். அது கைகளால்
வித்தியாசம் பார்ப்பதில்லை
என்றேன்.
அடுத்து வந்த இரவில்
என் உடலை முத்தங்களால்
நிரப்பினாய் நீ!

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 189க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

அ. பாத்திமா ஹப்ஸா, 22/8, நீதிமன்ற கட்டட வீதி, திருகோணமலை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. மரியம் ரொஸ்மின், 390A, செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர, கண்டி.
2. சீ. தங்கவடிவேல், 91 பயினியர் வீதி, மட்டக்களப்பு.
3. பூஜா, மாவத்த வீதி, கொழும்பு - 14.
4. எம். அனோஜன், மத்திய முகாம் மண்டூர்.
5. சா. தனுசியா, பெரியகடை மன்னார்.
6. க. றினோசியா, தில்லையடி புத்தளம்.
7. ஷி. வஷீர், காலி வீதி, தெஹிவளை.
8. சு. விந்தியா, வோல்ஸ் ஒழுங்கை, கொழும்பு - 15.
9. எஸ். ஷியான், போராதனை வீதி, கண்டி.
10. கஜன், மத்திய வீதி, மட்டக்களப்பு

## குறுக்கெழத்துப் போட்டி 191

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 7 | 8 | ■ | 10 | 11 | 12 |
| 13 | ■ | 15 | 16 | 17 | 18 |
| 19 | ■ | 21 | 22 | 23 | 24 |
| ■ | 26 | 27 | ■ | ■ | ■ |
| ■ | 32 | 33 | 34 | 35 | ■ |

### இடமிருந்து வலம்

1. ஐக்கிய நாடுகள் சபையின் அடுத்த பொதுச் செயலாளர் இந்த நாட்டைச் சேர்ந்தவர்.
7. மகாத்மா காந்தி இவ்விடயத்தினை வெறுத்து ஒதுக்கியவர். (திரும்பியுள்ளது)
10. நஞ்சு என்றும் கூறலாம் (குழம்பியுள்ளது).
15. நவரத்தினங் களில் ஒன்று. (குழம்பியுள்ளது).
21. அடையாளம் என்றும் பொருள்படும். (குழம்பியுள்ளது)
26. தாவர இனங்களில் ஒரு வகை. (திரும்பியுள்ளது).
32. மூலிகைத் தாவரம் ஒன்று.

### மேலிருந்து கீழ்

1. கடவுள் என்றும் கூறலாம்.
2. தங்கம். (தலைகீழ்)
4. இராசிகளில் ஒன்று.
5. கோள்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)
12. சிவலிங்கம் என்பதையும் குறிக்கும் (தலைகீழ்)
15. பூமி என்பதன் ஒத்தக் கருத்து (குழம்பியுள்ளது).
26. வெண்மை என்றும் பொருள் படும். (தலைகீழ்)

### குறுக்கெழுத்துப் போட்டி 189 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 ற | 2 ம் | 3 ழா | 4 ன் | ■ | 6 ண் |
| 7 சூ | 8 னி | ■ | 10 ம் | 11 ண | 12 ஙா |
| 13 டா | 14 தீ | 15 ம் | 16 க | ■ | ■ |
| 19 ம் | 20 ன் | 21 தி | 22 ன | ■ | 24 ஷ |
| ■ | ■ | 27 ற | ■ | 29 டி | 30 தோ |
| 31 ம் | 32 க | 33 க | 34 ற் | ■ | 36 ம் |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 31.10.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-191
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# சந்திரமுகி

**சந்திரமுகி** - அந்த பங்களாவை விட்டு மெதுவாக வெளியே வந்தாள். மேலே வானம் இருண்டுக் கிடந்தது. சந்திரமுகி சுற்றும் முற்றும் பார்த்தாள். மிக கவனமாக நடந்தாள். அன்று அமாவாசை இருட்டாக இருந்தமையினால் எதிரே வருபவர்கள் அடையாளம் தெரியவில்லை. சந்திரமுகி தோளில் தொங்கிய கனமான தோல்பையுடன் இப்போது வேகமாக நடந்தாள்.

நேரம் இப்போது இரவு மணி பத்தாக இருந்தது. பாதையில் அவளைத் தவிர யாருமேயில்லை. இலேசாக மழை பெய்யத் தொடங்கியது. அவள் வேகமாக நடந்தாள். எப்படியாவது புகையிரத நிலையத்தை அடைந்து விட வேண்டும். அங்கே அவளுக்காக அண்ணாதுரை காத்திருப்பான். அவனுடன் சேர்ந்து இந்த பொல்லாத ஊரை விட்டே ஓடி விட வேண்டும் என்பதுதான் அவளின் ஒரே ஆசை. அவளுடைய பெற்றோர் அந்தஸ்து வெறி பிடித்தவர்கள். அண்ணன்மார் கௌரவத்துக்காக கொலையும் செய்யத் துணிந்தவர்கள். அண்ணாதுரை ஒரு கார் மெக்கானிக்.

ஆளுக்கொரு புத்தம் புதிய காரில் பறக்கும் அவர்கள் மாதத்திற்கொரு காரை ரிப்பேர் செய்யும் அண்ணாதுரையை மாப்பிள்ளையாக ஏற்றுக் கொள்வார்களா? காதலைப் பற்றி அவர்களுக்கு என்ன தெரியும்? காகிதத்தால் செய்யப்பட்ட காசுக்குக் கொடுக்கும் மரியாதையை ஆழமான மனங்களால் உருவாக்கப்பட்ட காதலுக்கு அவர்கள் எப்படி தருவார்கள்? அவளால் அண்ணாதுரையை மறக்க முடியாது. அன்னம் ஆகாரமில்லாமல் இருந்துவிட முடியும். ஆனால் அண்ணாதுரையை மறக்க முடியாது. காற்றில்லாமல்கூட இருந்துவிட முடியும். காதலில்லாமல் இருக்கவே முடியாது.


அவள் வேகமாக நடந்தாள். அப்போது அவள் பின்னால் யாரோ வருவதைப் போல இருந்தது. அவள் பதற்றமானாள். அவள் வீட்டைவிட்டு வெளியேறிய விடயம் தெரிந்து விட்டதோ. அவள் எவ்வளவு கஷ்டப்பட்டு அங்கிருந்து தப்பினாள். கூடாது அவர்களிடம் நிச்சயமாக இந்த முறை மாட்டக்கூடாது. உயிரே போனாலும் பரவாயில்லை. ஊரை விட்டே பறந்துவிட வேண்டும். அவள் இன்னும் வேகமாக நடந்தாள். சற்று தூரத்தில் புகையிரத நிலையம் இருந்தது. ரயில் வருவதற்கான அறிகுறிகள் தெரிந்தன.

சந்திரமுகி இப்போது ஓடத் தொடங்கினாள். பின்னால் நாலைந்து பேர் ஓடிவரும் ஓசை கேட்டது. அவள் மூச்சைப் பிடித்தவாறு ஓடி, புகையிரத நிலைய வாசலை அடைந்தாள். அங்கே அண்ணாதுரையைக் காணவில்லை. அவள் பதற்றமானாள். எங்கே அண்ணாதுரை? சரியான நேரத்துக்கு வந்து விடுவதாகக் கூறினானே...ஐயோ...அவன் வரமாட்டானா? இந்த கன்னியின் கண்ணீரைத் துடைத்து கரையேற்ற வரமாட்டானா?

அவள் கலவரத்துடன் புகையிரத நிலையத்தினுள் நுழைந்தாள். ரயில் இன்னும் வந்திருக்கவில்லை. சுமார் பத்து, பதினைந்து பேர் மட்டுமே அங்கே இருந்தார்கள். அதில் அண்ணாதுரை இல்லை. அவன் எங்குமே காணப்படவில்லை. அவள் கண்களில் கண்ணீர் வழிந்தோடியது. என் அன்பு தெய்வமே அண்ணாதுரை, உண்ணாமல் உறங்காமல் உனக்காகவே காத்திருந்தேனே. காவலையெல்லாம் உடைத்து நம் காதலை வாழவைப்பதற்காக கால் வலிக்க ஓடி வந்தேனே. என் கண்ணீரைத் துடைத்திட ஓடி வருவாயா? அல்லது நம் காதல் கனவுகளை உடைத்து என்னை மறுபடியும் சிறைக் கைதியாக்கி விடுவாயா? நீ வருவாயா, வரமாட்டாயா? நீ என் உயிரைத் தருவாயா இல்லை காதல் பயிரை அழித்து விடுவாயா? அவள் பித்து பிடித்தவளைப் போல கத்தினாள். அப்போது நான்கைந்து பேர் தடதடவென ஓடிவந்தார்கள். தப்பியோட எத்தனித்தவளை அமுக்கிப் பிடித்தார்கள். அவர்களில் ஒருவன் சந்திரமுகியின் கைபுறத்தில் பலவந்தமாக ஊசியேற்ற அவளின் உடல் சிறிது நேரத்தில் தளர்வடையத் தொடங்கியது. அவள் அப்படியே மயங்கிச் சாய்ந்தாள். அவர்கள் - அவளை தூக்கிச் சென்றார்கள்.

இவ்வளவு நேரமும் அங்கே நடந்தவற்றைக் கவனித்துக் கொண்டிருந்த அறிவழகன் எதுவும் புரியாமல் தன் நண்பன் மலரன்பனைப் பார்த்தான்.

என்ன அறிவு அதிர்ச்சியடைஞ்சிட்டியா...வேற ஊர்க்காரனான உனக்கெப்படி இதெல்லாம் தெரியப் போவுது. சந்திரமுகியோட கதை ஒரு கண்ணீர்க் கதை. எல்லா வசதியோடயும் பிறந்த அவ, எந்த வசதியுமில்லாத அண்ணாதுரையை விரும்பினா. ஆனா வீட்டுல கடுமையான எதிர்ப்பு. அவளால அவனை மறக்கமுடியலை. ஒருநாள் ராத்திரி யாருக்கும் தெரியாம வீட்டை விட்டு புறப்பட்டு ரயில் நிலையத்துக்கு வந்தா. இங்கே அண்ணாதுரை காத்துக்கிட்டிருந்தான். விஷயம் எப்புடியோ தெரிஞ்சி அவளோட அண்ணன்மார் இங்கே ஓடி வந்தாங்க. அன்பு தங்கச்சி இவ்வளவு தூரம் ஆசைப்படுறாளேன்னு அவனை அவளுக்கே கட்டி வச்சிடுவோம், அதுக்கு முன்னாடி ஓடி போய் மானத்தை வாங்கிடக்கூடாதேன்னு பேய் மாதிரி ஓடி வந்தாங்க. சந்திரமுகி பயந்து போயிட்டா. தூரத்துல அவளுக்காக காத்துக்கிட்டிருந்த அண்ணாதுரையை நோக்கி ஓடினா. அவங்க... சந்திரமுகி, சந்திரமுகின்னு சத்தம் போட்டுக்கிட்டு ஓடிவந்தாங்க. ரயிலும் புறப்பட்டிருச்சி...அண்ணாதுரை ரொம்ப பயந்துட்டான். ஓடிக்கிட்டிருந்த ரயிலில் பாய்ந்து ஏறி அப்புறம் சந்திரமுகிக்கு கை குடுப்போம்னு நினைச்சிட்டான் - போல. ரயில் கதவை நோக்கி பாஞ்சான். ஆனா ரயில் வேகமெடுத்ததால அவன் தவறி ரயில் தண்டவாளத்துல விழுந்துட்டான். சந்திரமுகி ஐயோன்னு கத்தினா. அவ கண் முன்னாலேயே அவளோட அன்புக் காதலன் சிதைஞ்சி சின்னாபின்னமானான். அவ மயங்கி விழுந்துட்டா. அவளுக்கு பைத்தியம் பிடிச்சிடுச்சி. என்னவெல்லாமோ வைத்தியம் செஞ்சாங்க...ஒண்ணும் சரிவரல்ல. ராத்திரியாயிட்டா இங்கே வந்து புலம்ப ஆரம்பிச்சிடுவா. அவளை இத்தனை வருஷமா அறையில போட்டு பூட்டித்தான் வச்சிருக்காங்க. இன்றைக்கி எப்படியோ தப்பிச்சி வந்துட்டா போல. அவளை சமாளிச்சி கூட்டிட்டுப் போறதுக்காகத்தான் மயக்க ஊசி போட்டாங்க...ம்...வருஷம்



-பாலா.சங்குப்பிள்ளை,
ஹட்டன்.

இருபத்தைந்து ஓடி போயும் அவ இன்னமும் அண்ணாதுரையை மறக்கலை! சந்திரமுகியோட நிலைமை எந்த பொண்ணுக்கும் வரவே கூடாது...

மலரன்பன் கண்களில் ஓடிய கண்ணீரைத் தன் மேல் துண்டால் துடைத்துக் கொண்டார். அண்ணாதுரை சந்திரமுகியின் காதலுக்கு பாலமாக அன்று இருந்தவர் இன்றும் அவர்களின் நிலைக்காக கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கிறார். தூரத்தில் ரயில் வேகமாக வந்துக் கொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

# ஆசை ஆசையாய்...

"**கோபி,** கோபி எழும்புடா. என்னா இன்னும் தூக்கம் உன்னோட ஸ்கூல் வாத்தியாரு ஏதோ பரீட்சை பெறுபேறு வந்திருக்கிறதா சொன்னாரு. உன்ன ஸ்கூல் பக்கம் வரச்சொன்னாரு" என்றவாறு அவனின் தாய் கமலம் அடுப்படிப்பக்கம் சென்றாள்.

பாயில் சுருண்டு படுத்திருந்த கோபி, இதைக் கேட்டவுடன் துள்ளிக் குதித்தெழும்பினான். விரைவாக காலைக்கடன்களை முடித்துக்கொண்டு ஆடையை மாற்றி சேட் பொத்தானைப் போட்டவாறே "அம்மா நான் போயிட்டு வாரன்" என்றான். இருடா இந்தா தேத்தண்ணி ஊத்துறே குடிச்சிட்டு போ, இல்லம்மா வந்து குடிக்கிறே. இப்ப நான் போயிட்டு வாரேன் என்று தாயின் பதிலுக்குக் காத்திராமல் பாடசாலைப் பக்கம் ஓடினான்.

கோபி ஒரு பின்தங்கிய கிராமப்புறத்தைச் சேர்ந்தவன். அவனின் குடும்பம் வறுமைக்கோட்டிலேயே இருந்தது. திருமண வயதில் இரு சகோதரிகள். தந்தை தோட்டத்தில் வேலை செய்பவர். தாய் ஒரு வீட்டில் வேலை செய்து ஏதோ தன்னால் இயன்றளவு சம்பாதிப்பாள். இந்த சம்பாத்தியத்தில் தான் இவர்களின் குடும்பம் ஓடிக்கொண்டிருக்கிறது.

கோபி அங்குள்ள ஒரு பாடசாலையில் உயர்தரத்தில் வர்த்தகப் பிரிவில் பயின்று பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். வகுப்பிலேயே அவன் தான் திறமைசாலி. எப்படியாவது பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி விட வேண்டுமென்பதே அவனின் ஒரே இலக்கு. இதற்காக விடாமுயற்சியுடன் படிப்பான். மற்ற இந்த வயது பையன்களைப் போல் ஓய்வு நேரங்களில் ஊர்சுற்றுவதில்லை. புத்தகமும் கையுமாகவே இருப்பான். மற்றவர்கள் எப்பொழுதும் இவனை "இங்கப்பாரு பொம்பள மாதிரி எப்பப்பாத்தாலும் புத்தகத்தை வைச்சிக்கிட்டு பதுங்கி பதுங்கி இருக்கான்" எனக் கிண்டலடிப்பார்கள். இவை எவற்றையும் அவன் காதில் வாங்கிக் கொள்வதில்லை. நன்றாகப் படித்து குடும்பத்தை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்ற நோக்கில் ஒரே மூச்சுடன் படித்தான்.

எப்படியாவது பல்கலைக்கழகம் தெரிவாகிவிட வேண்டும் என்று இறைவனை வேண்டியவாறே பாடசாலை வாயிலை அடைந்தான். அங்கு நின்றுக் கொண்டிருந்த இவனின் வகுப்பாசிரியர், இவனைக் கண்டதும் கட்டிப்பிடித்து உன்னோட ஆசை நிறைவேறிடுச்சு கோபி. உனக்குத் தான் நல்ல ரிசல்ஸ். நீ ஆசைப்பட்ட மாதிரியே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும் எனக்கூறி அவன் முதுகில் தட்டிக்கொடுத்தார்.

பரபரக்க வீட்டுக்கு ஓடிவந்த கோபி "அம்மா, எனக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைச்சிருக்கு. எனக்குத்தான் வகுப்பிலேயே நல்ல பெறுபேறு" என மூச்சிரைக்க கூறி முடித்தான். என் ராசா என அவன் தலையை தடவிய கமலம் நீ படிச்சு ஒரு நல்ல நிலைக்கு வந்தா எங்களுக்கும் சந்தோஷம் தான். நானும் உங்க அப்பாவும் பாடசாலைப் பக்கமே போனதில்லை. உன்னோட அக்காமாரும் ஆறாம் ஏழாம் வகுப்போட நின்னுட்டாங்க. ஆனா பல்கலைக்கழகத்துல படிக்க செலவழிக்கிற



-ஆர்.நிரோஷினி,
கண்டி.

அளவுக்கு நமக்கு வசதி இல்லியேடா என அவன் முகத்தைப் பார்த்தாள். இவ்வார்த்தையைக் கேட்டதும் அவன் கற்பனைக் கோட்டைகள் யாவும் ஒரு நொடியில் வெடித்துச் சிதறியது போலிருந்தது. முன்னாலிருந்த திண்ணையில் போய் அமர்ந்து சிந்தித்துக்கொண்டிருந்தான். ஆனாலும் அவன் நம்பிக்கையை இழக்கவில்லை.

பின்னேரம் தந்தை வேலைவிட்டு வந்ததும் எதிர்பார்ப்புடன் விடயத்தைக் கூறினான். ஆனால் அவரோ நீ படிச்சது போதும்டா, இனி நீ தான் குடும்பப் பொறுப்ப ஏத்துக்கனும். கல்யாண வயசுல இரண்டு அக்காமார் இருக்காங்க. இப்ப நீ சின்னப்புள்ள இல்ல. உனக்கு குடும்ப நிலை விளங்கும். பேசாம ஒரு வேலய தேடிக்க என இலகுவாக சொல்லிவிட்டு உள்ளே சென்றார். இதைக் கேட்டதும் அவனையறியாமலே கண்களில் நீர் வழிந்தோடியது.

இரவு சாப்பிடவுமில்லை. அவனுக்கு அழுகை அழுகையாய் வந்தது. "நான் என்ன குடும்பப் பொறுப்ப ஏத்துக்க ஏலாதுன்னா சொல்றேன். இன்னும் படிச்சு ஒரு நல்ல தொழில் தேடி என்னோட குடும்பத்த காப்பாத்தனும்னு" தானே நானும் ஆசைப்படுறேன். எனக்கு குடும்ப நிலை புரியாமலில்ல. ஆனாலும் நான் படிக்கனும் என்று பலவாறு யோசித்த கோபி, இறுதியாக பல்கலைக்கழக அனுமதி கிடைக்கும்வரை தான் ஒரு தொழில் செய்து சம்பாதித்து அதைக் கொண்டு படிப்போம் என முடிவு செய்தான். மறுநாள் விடிந்து முகங்கழுவ போகும்போது தன் பழைய நண்பன் ஒருவனை நீண்ட நாளைக்குப் பிறகு சந்தித்தான். அவன் தற்போது வசதியாய் இருப்பதை அவன் தோற்றமே உணர்த்தியது. ஹாய் கோபி, எப்படி இருக்க? என அவன் தோளில் கைபோட்டான். ஏதோ இருக்கன்டா. நீ எப்படி இருக்க? என்னப் பாத்தாலே தெரியல. நான் நல்லா இருக்கேன். உன்னோட பதில்னா எனக்கு அவ்வளவா புடிபடல. என்னடா ஏதும் பிரச்சினையா? என்றான். தன் மன ஆதங்கத்தையெல்லாம் நண்பனிடம் கொட்டித் தீர்த்தான் கோபி. ஓ இதுவா பிரச்சினை நாளைக்கு காலயில என்னோட கொழும்புக்கு வா. நான் உனக்கு வேல வாங்கித் தாரேன் என்றான் உறுதியாக.

கோபியும் பெற்றோரின் சம்மதத்துடன் மறுநாள் நண்பனுடன் கொழும்பு நோக்கிச் சென்றான். எனக்கு என்ன வேல வாங்கித்தரப்போற? நீ என்னடா செய்யிற? நான் வேல செய்யிற இடத்திலேயே தான் உனக்கும் வேல. முதல்ல வா பிறகு சொல்றன் வேலையப்பத்தி. அவன் கோபியை ஒரு ஒதுக்குப்புறமாக உள்ள ஒரு பெரிய கட்டிடத்திற்குள் அழைத்துச் சென்று, இவனை வெளியே நிறுத்தியவாறு உள்ளே சென்று ஏதோ கதைத்துவிட்டு வந்து இவனையும் உள்ளே அழைத்துச்சென்றான். உள்ளே நிறைய பேர் இருந்தார்கள். கோபி ஒன்றும் புரியாமல் சுற்றும் முற்றும் பார்த்தவாறு விழித்துக்கொண்டிருந்தான்.

நண்பன் இவனருகில் வந்து 'இதுதான் வேலை' என அவன் காதில் ஏதோ கிசுகிசுத்தான். அதைக்கேட்டவுடன் திடுக்கிட்ட கோபி என்னால முடியாதுடா என மறுத்தான். அப்போ உன்னால நீ ஆசப்பட இலக்கை அடையமுடியாது என்ற நண்பனின் ஆசை வார்த்தைகள் இவன் அறிவுக்கண்களை மறைத்தது. பல்கலைக்கழகம் செல்வது இவன் மனக்கண்ணில் தோன்றி மறைந்தது. அந்த ஆசையால் ஒருவாறு சம்மதம் தெரிவித்தான்.

ஒரு நாள் கையில் ஒரு பார்சலுடன் கோபி சென்று கொண்டிருக்கும் போது பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டான். இவன் கையிலிருந்த ஹெரோயின் பார்சலை கைப்பற்றிய பொலிஸார், பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று இவனுக்கு பலத்த அடிக்கொடுத்து சம்பந்தப்பட்ட ஏனையவர்களையும் காட்டிக் கொடுக்குமாறு மிரட்டினர். முதலில் மறுத்தாலும் அடிதாங்காமல் உண்மையைக் கக்கினான்.

சம்பந்தப்பட்ட ஏனையவர்களையும் பொலிஸார் பிடித்து பொலிஸில் அடைத்தாலும் அவர்களின் பணபலம் சிறைச்சாலைக் கதவைத் திறந்தது. இவன் அவர்களைக் காட்டிக்கொடுத்தமைக்காக அவர்கள் இவனை வெளியே எடுக்க முன்வரவில்லை. பல்கலைக்கழகம் செல்ல ஆசைப்பட்டவன் வறுமை காரணமாக தீயவழியில் பணம் தேடப்போய் இன்று சிறைச்சாலையில் விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருக்கிறான்.

(யாவும் கற்பனை)

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

# குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**பொ**ருளீட்டுவதிலேயே கண்ணாக இருப்பது இன்றைய மனித சமூகத்தின் கடமை என்று எத்தனையோ பட்டிமன்றங்களும், கருத்தரங்குகளும் நடாத்தப்படுகின்றன. ஆனாலும், பொருளீட்டல் எந்த முறையிலிருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணங்களும் கூறப்படாமலில்லை. பொருளில்லாமல் இவ்வுலக வாழ்க்கை இல்லை என்ற போதிலும், பொருள் கொள்ளையிட்டேனும் பெற்றுவிடலாம். அல்லது அழிந்து போன பொருள் உழைப்பின் மூலமோ அல்லது பரிசாகக் கூடக் கிடைத்துவிடலாம். ஆனால், அருள் என்னும் நிலையான செல்வமானது மனத்தின்கண் தோன்றுகின்ற பரிவுணர்வினால் கிடைக்கக் கூடியது. ஆதலின் அருள் செல்வத்தைப் பெறச் சீரிய பண்புகளே உறுதுணையாக நிற்கும். அருளெனும் அழியாப் பொருளைப் பெற தனிப்பட்ட ஒருத்தரின் முயற்சியை விட சமூக ரீதியில் ஒன்று படுவோமா?


"பொருளற்றார் பூப்பரொருக்கால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது" குறள் : 287

பொருளில்லாதவர்கள் என்றோ ஒருநாள் பொருளைப் பெறலாம். பிறவியிலேயே அருள் நிறைந்த மனதில்லாதவர்கள் அருளைப் பெற முடியாது.

இலக்
நயப்

# நட்டார் சிறந்தவரோ?

**அ**ங்கயற்கண்ணியின் கடைக்கண் பார்வையில் காதல் இழை ஓடுவது போல் கீர்த்திவர்மனுக்குப் பட்டது. மெல்ல முறுவலித்தான். அந்த முறுவலில் அவனது வெற்றிப் பெருமிதம் தோன்றவில்லை. மாறாக ஓர் ஏக்கம் கலந்திருந்தது. ஆனால், அதை அவன் வெளியில் காட்டிக்கொள்ளாது, "தாங்கள் யாரென்று அறியலாமா" என்று விக்கிரமனைப் பார்த்துக் கேட்டபோது, விக்கிரமன் இலேசாகப் புன்னகைத்தான். அதேவேளை அவன்



கொண்டுவந்திருந்த தேரின் உச்சியில் கட்டப்பட்டிருந்த கொடி காற்றின் வேகத்தால் படபடத்தபோது அதை நிமிர்ந்து பார்த்ததும் அவன் முகத்தில் ஒரு வெற்றிப் பெருமிதம் தோன்றி மறைந்தது.

"இளவரசே! தங்களை

### தருவது கற்பகன்

அடையாளம் காண முடியாமல் போனதற்கு வருந்துகிறேன்" என்று உணர்ச்சி ததும்பச் சொன்னபோது, "நண்பரே! அதில் எந்தக் குறையுமில்லை. நீங்கள் செய்த உதவி மகத்தானது. வரலாற்றில் இடம் பெற வேண்டியது. அதற்காக நீங்கள் ஏன் வருந்தவேண்டும். நானல்லவா கடமைப்பட்டவன்" என்றதும் "அரசே! நான் இப்படியொரு தருணத்தில் தங்களுக்கு உதவக் கிடைத்ததே நான் செய்த பூர்வஜென்மப் பலன் என்றுதான் நினைக்கின்றேன்" என்றான் கீர்த்திவர்மன். "நண்பரே! என்னை இளவரசன் என்று அழைப்பதைவிட நண்பா என்று அழைத்தால்.........."

விக்கிரமன் முடிக்கு முன்,

"அது எப்படி? தாங்கள் இளவரசர். நானோ சாதாரணப் படைவீரன்" என்று கீர்த்திவர்மன் கூறியபோது, "கீர்த்திவர்மா! யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்?" என்று விக்கிரமன் கேட்டதும் கீர்த்திவர்மன் திடுக்கிட்டான். ஆனாலும் சமாளித்துக் கொண்டு, "நான் கீர்த்திவர்மன் இல்லை.." என்று தடுமாறியபோது, "நீ கீர்த்திவர்மன் இல்லை என்று சொல்லிவிட்டால் மட்டும் போதாது. நானும் நீயும் வாள்பயிற்சி பெற்றபோது உனது இடக்கையில் வாள் முனையால் நான் பதித்த குறியையுமல்லவா மறைத்திருக்க வேண்டும். அதை மறந்து விட்டாயே" என்று விக்கிரமன் கூறியபோது அவனை அறியாமலேயே அவன் தன் இடது கையைத் தடவினான். இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த அங்கயற்கண்ணி திகைத்துப் போய் நின்றிருந்தாள். விக்கிரமன் தொடர்ந்தான்.

"கீர்த்திவர்மா! நமது நாட்டையே உலுக்கிக் கொண்டிருக்கும் கொள்ளைக் கும்பலை இதுவரையும் எதிர்க்க எவருமே துணிந்ததில்லை. அப்படியான ஒரு கூட்டத்திற்குள் புயலாகப் புகுந்து அவர்களைப் புறமுதுகு காட்டச் செய்ய ஒரு சாதாரண படைவீரனால் முடியாதே என்று யோசித்தேன். அது இப்பொழுது நிரூபணமாகிவிட்டது."

"விக்கிரமா!" என்றவாறு அவனைக் கட்டித்தழுவிக் கொண்டான் கீர்த்திவர்மன்.

இத்தனை நேரமாக எதுவுமே பேசாமல் நின்றிருந்த அங்கயற்கண்ணி "அண்ணா!" என்று அழைத்தபோது இருவருமே அவள் பக்கம் திரும்பினர். "ஏது உன்னுடைய நண்பனைக் கண்டதும் என்னை மறந்து விட்டாய் போலிருக்கிறதே" என்றவளைப் பார்த்த விக்கிரமன் "தங்கையே! தண்ணீரைத் தாகம் மறக்கலாம், என் தங்கையை இந்த அண்ணனால் மறக்கமுடியுமா? கீர்த்திவர்மா! இவள் என் ஒரே தங்கை. இவளுக்காகத்தான் இதுவரையில் என் ஜென்ம விரோதிகளைக் கூட விட்டுவைத்திருக்கிறேன். இல்லையேல் கோழைத்தனமாக முதுகில் குத்தியவர்களைக் களத்தில் சந்தித்து ரணகளப்படுத்திவிட்டு நானும் அழிந்திருப்பேன்" என்று கர்ச்சித்தான். இதைக்கேட்டதும் கீர்த்திவர்மன் "விக்கிரமா! என்ன இப்படி உணர்ச்சிவசப்படுகிறாய்? பொறுமையாயிரு" என்றபோது, "கீர்த்திவர்மா! எதிரிகளைப்பற்றி நினைத்தால் என்னை அறியாமலே வெறியனாகி விடுகிறேன்" என்றவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு "கீர்த்திவர்மா! இந்த இக்கட்டான நிலையில் என் உயிரையும் என் தங்கையின் மானத்தையும் காத்த உனக்கு எப்படி நன்றி தெரிவிப்பது என்று அறியாமல் துடிக்கிறது உள்ளம். உன்போன்ற ஒரு வீரனால் அல்லாது வேறு எவராலும் இதைச் செய்திருக்க முடியாது" என்று அவன் இரு கைகளையும் பற்றிக் கொண்டு கூறியபோது அவன் கண்கள் இரண்டும் பனித்தன. அது அவன் அன்பின் வழிவந்த ஆனந்தக் கண்ணீரா? அல்லது நன்றி உணர்வின் காணிக்கையா?

*"எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு."*

அதிகாரம் - 81
குறள் - 806

## சிந்தியா பதில்கள்

**ஜெனீவா பேச்சு?**

*-கு. ஜெயா, மன்னார்.*

கோழியிலிருந்து முட்டையா? முட்டையிலிருந்து கோழியா விவாதம்தான்.

**பச்சை – நீலம் ஒப்பந்தம் பற்றி சிந்தியாவின் கருத்து என்ன?**

*-எஸ். பிரேம், கொழும்பு.*

52 வருடக் கனவு. "கனவே கலையாதே".

**தலைநகரில் தமிழர்கள் தொடர்ந்து கடத்தப்படுவது குறித்து ஆக்கபூர்வமாக எதுவும் நடக்கவில்லையே?**

*-மு.ரவிச்சந்திரன், ஹாலி-எல.*

இந்தக் கவலை எனக்கும் உண்டு. ஆணைக்குழுவுக்குச் சவாலாக நடக்கும் சம்பவங்களைக் கட்டுப்படுத்த அரசு புதிய திட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

**மலையகச் செய்திகளுக்காகத் தனியான ஊடகத் தளம் அமைக்கப்படுவது அவசியம் என்று நான் நினைக்கிறேன். என் ஆசை பேராசையா?**

*-பொ.முரளிதரன், பதுளை.*

நியாயமான ஆசைதான். இன்னொரு தளத்தில் நமக்கான முழுத் திருப்தியையும் காண முடியாது. உங்களுக்குள்ள பேராசை, உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளுக்கு துளியளவு ஆசையாக வந்தால் கூட நல்லது. என் பங்களிப்பும் நிச்சயம் உண்டு.

**ஒரு துறையில் புகழின் உச்சிவரை சென்றுவிட்ட ஒருவர் அடுத்ததாக என்ன செய்ய வேண்டும்?**

*-பி.சுரேஸ், திருக்கோவில்.*

விழுந்து விடாமல் இறங்கி வருவதற்கான வழியையும் தெரிந்திருக்கவேண்டும்- விழுந்தால் அடி பலமாக இருக்கும் என்பதால்.

**தீபாவளி விருந்தாக, வெளியாகியிருக்கும் எந்தப் படத்தை நினைத்துக் கொள்ளலாம்?**

*-எஸ்.தீபா, தாண்டிக்குளம்.*

புதுத் தம்பதிகளுக்கு - தலைத் தீபாவளி.


அஜித் ரசிகர்களுக்கு - 'தல' தீபாவளி.

உங்களுக்கு என்ன தீபாவளி?

**பிரான்ஸ் நாட்டில் E. பாஸ்போர்ட் நடைமுறைக்கு வந்துள்ளது. நம் நாட்டிற்கு எப்போது அந்தத் தொழில்நுட்பம் சாத்தியம்?**

*-தினேஸ், வெள்ளவத்தை.*

பித்தலாட்டத்திற்குப் பிரான்ஸ் அரசால் ஆப்பு வைக்க முடிந்துள்ளது. நம் நாட்டில் பித்தலாட்டம் இல்லாத தேர்தல் முறை வந்தாலே போதுமானது.



வரலாறு
அஜித் - அசின்

**அரசில் யார் இனிமேல் எதிர்க்கட்சியாக இருக்கப் போகிறார்கள்?**

*-என்.எம். பர்ஷான், கல்முனை.*

நன்மை, தீமை தெரியாமல் எப்போதும் எதிர்க்கும் எல்லோரும் ஆயுள் கால எதிர்க்கட்சியினர் தான். தவிரவும், ஐ.தே. கட்சி ஒப்பந்தம்தான் செய்துள்ளது. கட்சியைக் கலைத்துவிட்டு சுதந்திரக் கட்சிக்குள் தொலைந்து போகவில்லை.

**சிந்தியா! யாழ்ப்பாணத்தில் தினமுரசின் விலையில் மாற்றம் உண்டா?**

*-எஸ்.ராஜன், தெகிவளை.*

கொள்ளை இலாபம் எல்லாம் நமக்குத் தெரியாது. அச்சுக் கூலி, அனுப்பும் கூலி எல்லாம் தாங்கிக் கொண்டு அதே இருபது ரூபாய்தான்.

**எரிபொருட்களின் விலையை மேலும் குறைத்து, அந்த நஷ்டத்தை ஈடு செய்ய மது பானம், சிகரெட்டின் விலையை அதிகரித்தால் என்ன?**

*-எம்.குமரேஸ், கண்டி.*

இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை டிசம்பர் முதலாம் திகதி விவாதித்து முடிந்த பிறகு எவ்வளவு துண்டு விழப் போகிறது என்பதைப் பார்த்துவிட்டு அடுத்த வருடம் விலையேற்றங்களைப் பற்றி அரசு யோசிக்கும்.

**அழுது சாதிக்கும் பெண்களின் பட்டியலில் சிந்தியாவும் அடங்குவீரா?**

*-தி.பவானி, குருமண்காடு.*

சாதித்து எதிரிகளை அழவைக்கும் பட்டியலில்தான் தற்போதைக்கு இருக்கிறேன் என்று நினைக்கிறேன்.

**இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் - இந்த அணிகளில் எந்த அணி அவுஸ்திரேலிய அணிக்கு கிரிக்கெட்டில் சவாலாக இருக்கும்?**

*-மூர்த்தி, வெலிமடை.*

நீங்கள் குறிப்பிட்ட மூன்று அணிகளுமே சவாலாகத்தான் இருக்கின்றன. அவுஸ்திரேலியர்கள் இவர்களைவிட கொஞ்சம் சவாலாக இருக்கிறார்கள். அவ்வளவுதான். பாகிஸ்தானின் வேகம் எதிர்பார்ப்புகளைத் தூண்டியுள்ளது.

**பணத்துக்காக எதையும் செய்யும் நம்மவர்களுக்கு இப்பிரபஞ்சத்தில் மிஞ்சப்போவது என்ன?**

*-ஐ.விநாயகமூர்த்தி, பொகவந்தலாவை.*

தற்காலிக மகிழ்ச்சி. அவ்வளவுதான்.

**சிந்தியா! எது எதுக்கெல்லாம் சர்வதேச விசாரணையாளர்கள் தேவை என்று நினைக்கிறீர்கள்?**

*-ஏ.எம். பர்ஹட், ஓட்டமாவடி.*

"ஒரு நாய் செத்தாலும் சர்வதேச விசாரணை தேவை என்று கேட்பார்கள் போல" என்று அமைச்சர் ஒருவர் சொன்னது இன்னமும் மனதுக்கு நெருடலாகத்தான் இருக்கிறது. நியாயமான விசாரணைகள் நடக்காது என்று வரும் போது, சர்வதேச விசாரணையைக் கோருவது நியாயம் தான். அதற்காக அரசில் ஆதாயம், பிரச்சாரம், என்பவற்றுக்காக இன்னொருவருக்குக் கால் துண்டிக்கப்படும் வரை இருந்துவிட்டு, விரலில் காயம் வரும்போது விசாரணைக் கமிஷன் கோருவது எந்தளவுக்கு நியாயம் என்பதுதான் மறுபக்கக் கேள்வியாக இருக்கிறது.

## மரம்...

*06 ஆம் பக்கத் தொடர்ச்சி....*

நம்மீது எவ்வித எதிர்பார்ப்புகளையும் கொண்டிருக்காமல் மரம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. மரங்களின் ஞாபகங்களாக மனிதன் வாழ்வதில்லை, ஆனால் மனிதர்களின் ஞாபகங்களாக மரங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அந்த மரங்களைப் பார்க்கும் போதெல்லாம், அதை நடுகை செய்தவர்களின் ஞாபகங்களும் கூடவே வந்து ஒட்டிக் கொள்கின்றன. இறந்த பிறகும் ஞாபகங்களாக மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருப்பது அநேகமாக மரங்களில் தான். இன்று உலகத் தேவைகளில், "மரம் வளர்ப்போம், காடுகளைப் பாதுகாப்போம்," என்பவற்றுக்காகத் தனி இயக்கமே உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்படுகிறது.

நடிகர் அஜித், தன் இரசிகர்களுக்கு விடுத்திருக்கும் அன்புக் கட்டளை, ஒவ்வொரு இரசிகரும் ஒவ்வொரு மரம் வளர்க்க வேண்டும் என்பது தான். நல்ல முயற்சி. மழை பொய்த்துப் போன, தண்ணீர் வற்றிப்போன, வறண்ட உலகையா அடுத்த சந்ததிக்கு நாம் விட்டு வைக்கப்போகிறோம்? போட்டி நிறைந்த, வன்முறை நிறைந்த, அழிவுகள் மலிந்த வாழ்க்கையை மிச்சம் வைக்கப்போகும் இந்த வாழ்க்கையை எதிர்கால சந்ததிக்குப் பரிசளிக்கப் போகிறோமா? நவீன வளர்ச்சியும், அழகும், பசுமையும், நிறைந்த உலகை கையளிக்கப் போகிறோமா? என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். நடிகர் ரஜனிக்காக கவிஞர் வைரமுத்து எழுதிய பாடலில், "பூமியை வெல்ல ஆயுதமெதற்கு? — பூப்பறிக்க கோடரி எதற்கு?" என்ற வரிகள் சிந்திக்கச் சிந்திக்க, ஒரு ஊற்றுப்போல் நமது வெற்றி தோல்வி, சகிப்புத்தன்மை, ஏமாற்றம் எல்லாவற்றையும் சுரந்து கொண்டிருக்கிறது.

இன்று பூப்பறிக்கக் கோடரி கொண்டு அலையும் மனிதர்களாகி விட்டோம். எதற்கு எதைப் பிரயோகிக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளாமல் கற்கால மனிதர்களாகத் திரியும் நம்மைக் கண்டு, மரங்கள் பயந்து போகின்றன. மரங்கள் பூமியைப் பாதுகாக்கின்றன. மனிதன் பூமியின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தர முடியாதவனாகிவிட்டான். தோற்றுப் போன மனிதன் அற்ப வெற்றிகளைக் கொண்டாடுவதைக் கண்டு மரங்கள் சிரித்துக்கொள்ளும் என்றுதான் நினைக்கிறேன். ஒரே தோட்டத்தில் மா, பலா, வாழை, கொய்யா, தேசி - இப்படி எந்த மரத்தை வளர்த்தாலும், அவை ஒவ்வொரு சுவையைத் தருகின்றன. மரத்துக்கு மண் மீது பேதம் இல்லை. மனிதனுக்குள் நிறைந்து கிடக்கும் பேதங்கள், பிரிவினைகளுக்குள் ஒரு துளிதான் மண்ணும், சக மனிதர்களும் என்றாகிவிட்டது. ஆகவே நாம் மரங்களிடமிருந்து கற்றுக் கொள்வோம். மரங்கள் உண்மைகளின் உருவங்கள், நல்ல ஆசான்கள். மரங்கள் மனிதர்களை வற்புறுத்துவதில்லை.

நாம் சில மரங்களைப்பற்றிப் கொண்டிருக்கும் நம்பிக்கைகளை நினைத்துப் பார்க்கிறேன். ஆலமரம், புளியமரம் என்றால் அதில் பேய் இருக்கும், வேம்பு, வில்வமரம் என்றால் அதில் சாமி இருக்கும். பனையைப் பற்றித் தெரியாது. ஆனால், தென்னம்பிள்ளை என்று நாம் வகுத்துக் கொண்ட மரங்களை அணுகுகின்றேன். எங்கள் வீட்டுக்கு முன்னாலும் ஒரு புளிய மரம் இருந்தது. அதில் பேய் இருப்பதாக ஊர்க்காரர்கள் சொன்னதும், முன்னைய பகுதிகளில் எழுதப்பட்டவை. நான் ஊரோடும் - உறவோடும் வாழ்ந்த அத்தனை காலமும் அந்தப் புளிய மரம் ஒரு பேயாகத்தான் தோற்றமளித்தது. பேய் இருக்கிறதா? இல்லையா? என்பது என் விவாதம் அல்ல. இருந்தால் ஆலமரத்திலும் புளியமரத்திலும் மட்டுமல்ல, பாழ்பட்ட மனைகளும், மனித மனங்களும், பேய்கள் இருக்கும் இடங்கள்தான் என்பதுதான் என் வாதம்.


நாம் வாழுகின்ற நாட்டில் அரசமரங்கள் எல்லாம் போதி மரங்கள். ஒவ்வொரு அரசமரமும் ஒரு பௌத்த விகாரைக்குச் சமம் என்பது போல் வேப்ப மரங்கள் ஒவ்வொரு கோயிலுக்குச் சமம் என்ற நிலைமைதான் உள்ளது. மரங்களை அங்கு மட்டும் தான் வணங்குகிறோம். இறை வழிபாடுகளின் போதாவது மரங்களை வணங்குகிறபடியால் ஒரு திருப்தி ஏற்படுகிறது. அங்கே வணங்கப்படுவது மண்ணில் உள்ள எல்லா மரங்களுக்காகவும்தான் என்று மரங்கள் நினைத்துக்கொண்டால் நல்லது.

காபனீரொட்சைட்டை உள்வாங்கி, ஒட்சிசனை வெளியேற்றும் மரங்களின் மனித சேவையை மனிதன் உணர்ந்ததாகத் தெரியவில்லை. மூச்சுதான் உயிர் என்றால், உயிருக்கு உதவும் மரங்களை இனியாவது மரங்களாக நடத்துவோம். அவை மகிழும்படி மண்ணையும், வளங்களையும் பாதுகாப்போம். இயற்கை நமக்காக எல்லாம் செய்கிறது. நாம் இயற்கைக்காகவும், நமக்காகவும் இதையாவது செய்வோம்.

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

நான் பிறந்தது உங்களுக்கு சேவை செய்ய மட்டுமே...

பண்டாரவளை மலையான மகா வசிய மாந்திரீகம்..



ஸ்ரீ மகா பத்திரகாளித் தாயின் அருளைப் பெற்றுள்ள

இன்றே தொடர்பு கொள்ளவும் 057-2224591-92

ஷர்மா சுவாமிகள்

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அறிலிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுப்பட இருதடவை. யோசிக்காமால் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்

தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கடித உறையொன்றை அனுப்புங்கள்.

**சந்திப்பு**

பண்டாரவளையில்
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 8.00 மாலை 6.00
நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில்
IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை

வெளிநாட்டவருக்கு விசேட ஏற்பாடுகள்!
தொ. பே. +94-572232441
+94-773227005

**சகலவிதமான வசிய மாந்திரீகம்**

- வீடு, வியாபார விருத்தி
- விவசாய விருத்தி
- நோய் நொடி சுகப்படுத்தல்
- விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர.
- தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
- குழந்தைப் பாக்கியம் கிட்ட
- விலைபோகாத காணிகள் விற்பனையாக
- எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
- ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
- மண் பரீட்சை செய்தல்
- பிராணிகளை அகற்றுதல்

ஷர்மா சாமி அவர்கள்

P.O. Box 2, BANDARAWELA / பண்டாரவளை Regd. No. U/B 99/83
Tel. 077-3227005 057-2224591-92 078-5224681 Fax: 057-2232441
Website : sharmasami.com sribathrakaliamman_temple@yahoo.com

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

# ஸ்போர்ட்ஸ்

ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ்

## ஊக்க மருந்து விவகாரத்திலிருந்து தப்புவார்களா?

ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பை போட்டி இந்தியாவில் நடந்து வருகிறது. இந்தப் போட்டியில் பங்கேற்ற பாகிஸ்தான் அணி வேகப்பந்து வீச்சாளர்கள் சோயிப் அக்தர், முகமது ஆசிப் ஆகியோர் ஊக்க மருந்து பயன்படுத்தியது மலேசியாவில் நடந்த சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது.



சோயிப் அக்தர்

இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் கிரிக்கெட் போர்ட் அக்தர் மற்றும் முகமது ஆசிப் ஆகியோரை உடனடியாக இடைநிறுத்தம் செய்தது. அதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் பாகிஸ்தானுக்குத் திரும்பினார்கள்.

ஊக்க மருந்து விவகாரம் குறித்து விசாரணை நடத்த வக்கீல் ஷாகீத் அமீது தலைமையில், போர்ட் டாக்டர் வாகர் அகமது, முன்னாள் டெஸ்ட் வீரர் இன்டிகார் ஆலம் ஆகிய மூன்று பேர் கொண்ட தீர்ப்பாயம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பாயம் முன் சோயிப் அக்தர், முகமது ஆசிப் ஆகியோர் ஆஜரானார்கள். அப்போது அவர்களிடம் சுமார் 1 மணி நேரம் விசாரணை நடைபெற்றது. இருவரும் தங்களுக்குத் தெரியாமல் நன்ட்ரோலின் எடுத்து இருக்கலாம். தெரிந்து எந்தவித தவறும் செய்யவில்லை என்று தெரிவித்ததாக கூறப்படுகிறது. இருவர் மீதும் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில் பாகிஸ்தான் அதிபரும், அந்த நாட்டு கிரிக்கெட் போர்டின் தலைமை புரவலருமான முஷாரப் இரு வீரர்களுக்கும் குறைந்த தண்டனையே வழங்க வேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கிறார். அவர் விசாரணைக் கமிட்டியினரிடம் இருவரும் தெரியாமல் செய்த தவறாகக் கருதி தண்டனை அளிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.

தீர்ப்பாயம் 26-ஆம் திகதி மீண்டும் கூடுகிறது. அப்போது அக்தர், ஆசிப் ஆகியோருக்கு என்ன தண்டனை அளிப்பது என்பது குறித்து முடிவு செய்யப்படும் என்று தெரிகிறது.

## சர்வதேச குத்துச் சண்டையில் இந்தியப் பெண்கள் சாம்பியன்

சர்வதேச குத்துச்சண்டை போட்டியில் இந்தியப் பெண்கள் அணி சாம்பியன் கோப்பையைக் கைப்பற்றியது.

வீனஸ் கோப்பைக்கான சர்வதேச பெண்கள் குத்துச்சண்டைப் போட்டி டென்மார்க் நகரில் உள்ள விஜ்லே நகரில் நடந்தது.

இந்தப் போட்டியில் நியூஸிலாந்து, இத்தாலி, கனடா, போலந்து, சுவீடன், அயர்லாந்து, ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி, பின்லாந்து, நோர்வே, டென்மார்க், ருமேனியா, எஸ்தோனியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.



இந்தப்போட்டியில் உலக சாம்பியன் மேரி கோம் தலைமையில் இந்திய அணி பங்கேற்றது. இந்திய அணி 5 தங்கப்பதக்கம், 4 வெள்ளிப்பதக்கம், 1 வெண்கலப்பதக்கம் வென்று 'சாம்பியன்' பட்டத்தைக் கைப்பற்றியது.

இந்திய வீராங்கனைகளில் மேரி கோம் (46 கிலோ உடல் எடைப் பிரிவு), கோது லாரா (50 கிலோ), சுஷ்மா குமாரி (52 கிலோ), சரிதா தேவி (54 கிலோ), உஷா (57 கிலோ) ஆகியோர் தங்கப்பதக்கம் வென்றனர்.

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 7, கூட்டெண் - 5

7, 16, 25 போன்ற திகதியில் பிறந்து பிறந்த திகதி, மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 5 வருமேயானால் கேது, புதன் போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

சிந்தனா சக்தியும் சுறுசுறுப்பும் கொண்ட இவர்கள், தொழில் செய்து வாழ்க்கையில் உயர்ந்த இடத்தை வகிக்கின்றனர். ஆனால் பெயர் பொருத்தமின்றி அமைந்துவிட்டால் பல்வேறு பிரச்சினைகளில் சிக்கித் தவிக்கின்றனர். பார்ப்பதற்கு ஓரளவு உயரமானவர்களாகவும், தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும், கண்ணியமிக்கவர்களாகவும் காட்சியளிப்பர். தனது முன்னேற்றத்திற்காக எப்பொழுதும் திட்டம் தீட்டிக் கொண்டே இருப்பர். தனது வருமானத்தைப் பெருக்குவதற்காகப் பல்வேறு வழிகளில் முயல்வார்.

பெயர் நன்றாக அமையப் பெற்றவர்கள், வெற்றி மேல் வெற்றி பெற்றுச் சிறப்புற்று வாழ்வர். ஆனால் பெயர் நன்றாக அமையாதவர்கள் குழப்பமான குடும்ப வாழ்க்கையும், வீண் பிரச்சினைகளும், தொழில் தடங்கலும் ஏற்பட்டு வருந்தி வாழ்வர். பிறர் செய்கின்ற காரியங்கள் வேகமாக நடக்காவிட்டால் அவர்களைச் சோம்பேறி என்று திட்டுவர். எந்தக் காரியங்களும் துரிதமாக நடக்க வேண்டும் என்று எண்ணுவர். இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்து விடுமேயானால் பெரும் பணம் சம்பாதித்து விடுவர்.

ஆனால் வாழ்க்கையில் எவ்வளவு முன்னேறினாலும் மன நிலை அமைதி கொள்ளாது. இதனால் பலர் பக்திமானாக மாறிவிடுகின்றனர். தனக்கு மிஞ்சிய ஒரு சக்தி இருப்பதாக எண்ணி அதைப் பற்றி ஆராய்வர். பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்ட இவர்கள் தன்னை உயர்த்திக் கொள்ளத்தகுதி இல்லாதவர்கள் பிறரை உயர்த்த முடியாது என்று கூறுவர்.

இவர்களுக்குப் பெயர் நல்ல எண்களில் அமைந்துவிட்டால் வேகமாக முன்னேற்றத்தை நோக்கிச் செல்வர். அப்படிப் பெயர் பொருத்தமில்லாது போய்விட்டால் வாழ்க்கை தலைகீழாய் இறங்கி விடும். இவர்களது மனம் நேர்மையைத் தவிர போலிகளை வெறுக்கும். கடவுள் நம்பிக்கை கொண்ட இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குப் புனித யாத்திரை செல்லுவதில் அதிக ஆர்வம் இருக்கும்.

தான் செய்கின்ற தவறைக்கூட தனிமையில் நினைத்து வருந்துவர். இந்த எண்ணிக்கைக்காரர்களில் பலர் வேலை பார்ப்பவர்களாகவும், சிலர் சொந்தத் தொழில் செய்பவர்களாகவும் விளங்குகின்றனர். இவர்களது முன்கோபத்தைக் கண்டு பல நண்பர்கள் அஞ்சி ஒதுங்கிவிடுகின்றனர். இவர்களது மனம் பெரும் தொழிற்கூடங்களையும், நீர்வீழ்ச்சிகளையும், நீர்த்தேக்கங்களையும், மலைப்பிரதேசங்களையும் ரசிக்கக்கூடியது.

எந்த ஒரு புதுமையான பொருளைப் பார்த்தாலும் அதைப்பற்றி ஆராய்ச்சியில் இறங்கிவிடுவர். தைரியசாலிகள் போல் காட்சியளிக்கும் இவர்கள் உள்ளூர பயந்தவர்களே. தான்செய்கின்ற ஒவ்வொரு காரியங்களுக்கும் ஆண்டவன்தான் காரணம் என்று நம்புவர். ஏராளமான பொருளாதார வசதி இருந்தாலும் நம்மைப் போன்று பிறரும் வாழ்க்கையில் உயர வேண்டும் என்று எண்ணுவர்.

குறுக்குக் கேள்வி கேட்பதிலும், வேதாந்தம் பேசுவதிலும் சிறந்து விளங்குவர். சிலருக்கு இவர்களைப் பார்த்தவுடன் வெறுப்புத் தோன்றும். ஆனால் பிறருக்குத் தீங்கு விளைவிப்பவர் அல்ல. சில நேரங்களில் தனது வாயால் தனக்கே கேடு விளைவித்துக் கொள்ளுவர். ஆளால் பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் ஏராளமான சொத்தோடு எல்லா வளமும் பெற்று வாழ்வர்.

இவர்கள் மனம், சட்டம், சமயம், கலை, இலக்கியம், இசை, சோதிடம், மருத்துவம் இவற்றில் ஆராய்ச்சி கொள்ளும். அழகாக வீட்டை வைத்துக் கொள்வதிலும், தான் வைத்திருக்கும் வாகனங்களை அழகாக வைத்துக்கொள்வதிலும் ஆர்வம் உள்ளவராக இருப்பர். பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்ட இவர்கள், பிறருக்கு உதவி செய்யும் போது எந்தச் சிக்கலிலும் மாட்டிக் கொள்ளக் கூடாது என்று எண்ணுவர்.

ஆனால், பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் படிப்படியாக வாழ்க்கையில் முன்னேறுவார்கள். அப்படிப் பெயர் பொருத்தமின்றி அமைந்தால், பல்வேறு சோதனையில் மாட்டிக் கொண்டு திண்டாடுவர். இதனால் பெயரைப் பொருத்தமான எண்ணில் அமைத்துக் கொள்வது அவசியம்.

***தொழில்***

எழுத்தாலும், பேச்சாலும், கமிஷன், ஏஜென்ஸீஸ் மூலமும் பொருளீட்டுவர். மருந்து, வாகனம், கான்டிராக்ட், மெட்டல் சம்பந்தமான தொழிலாலும், பச்சை நிறப் பொருட்களாலும் வாழ்க்கையில் உயர்வு உண்டு.

***நோய்***

பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு மனக்குழப்பம், வாயு சம்பந்தமான கோளாறுகள், கண், காது, முதுகுவலி போன்றவைகள் வந்து நீங்கும்.

***பெயர் அமைக்கும் முறை***

இவர்கள் கீழே கொடுத்துள்ள புதன், சுக்கிரன், ஆதிக்கமான 14, 23, 32, 41, 50, 59, 77: 15, 24, 33, 42, 60, 69 போன்ற எண்களில் பெயரை அமைப்பது சிறப்பாகும்.

***பின்பற்ற வேண்டியவை***

யோகமான எண் - 2, 5, 6
யோகமான திகதிகள் - 2, 11, 20, 29; 5, 14, 23; 6, 15, 24
யோகமான மோதிரக்கல் - வைடூரியம், டைகர்ஸ் ஐ, மூன் ஸ்டோன், வைரம்
யோகமான நிறம் - பச்சை, மஞ்சள், சாம்பல் நிறம், லேசான நிறம்
ஆகாத திகதி - 9, 18, 27
ஆகாத நிறம் - சிவப்பு

*அடுத்த வாரம் பிறப்பெண் 7, கூட்டெண் 6 பற்றிப் பார்ப்போம்.*

# புனித அகஸ்டைன் (354 - 430)

*(கடந்த வாரத் தொடர்ச்சி...)*

**பிலாஜியஸின்** கருத்துக்களைக் கடுமை த் தாக்கிப் புனித அகஸ்டைன் எழுதினார். க்கு அவருடைய கண்டனங்களின் வாகப் பிலாஜியஸின் கொள்கைகள் சபைக்கு விரோதமானவை என க்கப்பட்டன. ஏற்கனவே ரோமிலிருந்து நாடு ப்பட்டிருந்த பிலாஜியஸ், சமயத்திலிருந்தும் பேற்றப்பட்டார். அகஸ்டைனின் கைப்படி, "ஆதி மனிதன் ஆதாம் செய்த த்தின் கறை ஒவ்வொரு மனிதனின் மீதும் திருக்கிறது. மனிதர்கள் தங்கள் சொந்த சிகளினாலும், நற்செயல்களினாலும் மட்டும் பேறு அடைந்திட இயலாது. பேறடைவதற்கு இறைவனின் அருள்பாலிப்பும் " இது போன்ற கொள்கைகள் முன்னரே பட்டிருந்தன. எனினும், அந்த முந்தைய களை அகஸ்டைன் விரிவாக



கியுரைத்தார். இந்தக் கொள்கைகள் குறித்த சபையின் நிலைக்கு இவருடைய துக்கள் செறிவூட்டின. அதன் பின் சபையின் கோட்பாடு பேறுடையதாகியது.

"நம்மில் யார் யாருக்கு மீட்பு க்கப்படும், யார் யாருக்கு மீட்பு க்கப்படமாட்டாது என்பதை இறைவன் வே அறிந்திருக்கிறார். எனவே ற்றிற்கும், இறவா வாழ்விற்கும் எனக் ால் நம்மில் சிலர் முன்னுறுதி ட்டுள்ளனர்" என்று அகஸ்டைன் தியாகக் கூறினார். இந்த முன்னுறுதிக் பாடு, புனித தாமஸ் அக்குவினாஸ், ஜான் வின் போன்ற பிற்கால மையியலறிஞர்கள் மீது பெருஞ் க்குப் பெற்றது.

முன்னுறுதிக் கோட்பாட்டைவிட யத்துவம் வாய்ந்தது பாலுணர்வு பற்றிய டைனின் கொள்கையாகும். அவர் தவ சமயத்தைத் தழுவியதும், தாம் ர்வைத் துறந்துவிட வேண்டியது அவசியம் முடிவு செய்தார். (உடலுறவைப் போல் வே விட்டொழிக்க வேண்டியது ான்றுமில்லை என்று அவர் ஒருமுறை யுள்ளார்). ஆனால், பாலுணர்வை அறவே து நடைமுறையில் புனித அகஸ்டைனுக்கே கடினமாக இருந்தது. இது தொடர்பான மனப் போராட்டத்தையும், க்களையும் அவர் தம் "பாவ ஒப்புதல்கள்" நூலில் விரிவாக எழுதியுள்ளார். அதில் அவர் எழுதியுள்ள கருத்துக்கள் அவருடைய பெரும் புகழ் காரணமாக, பாலுணர்வு பற்றிய மத்திய காலத்து மனப்பான்மைகளில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தின. பழம் பாவத்தையும் பாலுணர்ச்சி வேகத்தையும் தொடர்புபடுத்திக்கூட அகஸ்டைன் எழுதியுள்ளார்.

அகஸ்டைன் வாழ்நாளில் ரோமானியப் பேரரசு விரைவாக வீழ்ச்சியடைந்து வந்தது. உண்மையில் 410ஆம் ஆண்டில், அலாரிக் என்பவரின் தலைமையில் படையெடுத்து வந்த விசிகோத்துகளின் படைகள் ரோம் நகரைச் சூறையாடிச் சென்றன. இது, கிறிஸ்தவத்தை ஆதரித்து, பண்டைய கடவுள்களைக் கைவிட்டமைக்காக, ரோமானியர்களுக்கு ஆண்டவன் அளித்த தண்டனை என்று ரோம் நகரில் எஞ்சியிருந்த புறச் சமயவாதிகள் கூறினர். கிறிஸ்தவ சமயத்தின் மீது சாட்டப்பட்ட இந்தக் குற்றச்சாட்டுக்கு மறுப்புத் தெரிவிக்கும் வகையிலேயே "இறைவனின் நகரம்" என்ற தமது புகழ்பெற்ற நூலை அகஸ்டைன் எழுதினார். இந்த நூலில் வரலாறு பற்றிய ஒரு முழுமையான தத்துவமும் அடங்கியிருக்கிறது. இந்தத் தத்துவம் ஐரோப்பாவின் பிற்கால நிகழ்வுகளில் கணிசமான செல்வாக்கைச் செலுத்தியது. இந்நூலில் ரோமானியப் பேரரசோ, ரோம் நகரமோ, வேறெந்தப் பூவுலக நகரமோ அடிப்படையில் எந்த முக்கியத்துவமும் வாய்ந்தது அல்ல என்ற கருத்தை அவர் கூறியிருந்தார். ஒரு "விண்ணுலக நகரம்" உருவாவதுதான் முக்கியமானது. அதாவது, மனித குலத்தின் ஆன்மீக வளர்ச்சிதான் முக்கியமானது. இந்த முன்னேற்றத்திற்கு நம்மை இட்டுச் செல்லும் ஊர்தி திருச்சபை ஆகும். ("திருச்சபை இன்றி வீடு பேறு இல்லை"). எனவே பேரரசர்கள்,அவர்கள் புறச் சமயத்தவராயினும், கிறிஸ்துவராயினும், அயல் நாட்டவராயினும் போப்பாண்டவரைப் போன்றோர் திருச்சபையைப் போன்று, முக்கியத்துவம் வாய்ந்தவர் அல்லர்.

இதிலிருந்து பூவுலக அரசர்கள் போப்பாண்டவருக்கு அடிபணிந்தவர்களாக இருக்கவேண்டும் என்பது தெளிவாகிறது. இந்த முடிவை அகஸ்டைன் தாமே கூறவில்லை. ஆனால் அவரது வாதங்கள் இந்த முடிவுக்கு நம்மை எளிதாக இட்டுச் செல்கின்றன. அகஸ்டைனின் வாதங்களிலிருந்து அந்த முடிவுக்கு வருவதில் மத்திய காலப் போப்பாண்டவர்கள் பெருமகிழ்ச்சி கொண்டார்கள். திருச்சபைக்கும்,அரசுக்குமிடையே நீண்டகாலப் பூசலுக்கு வழிவகுத்தன. இந்தப் பூசல்கள் ஐரோப்பிய வரலாற்றில் பல நூற்றாண்டுகள் நீடித்தன.

கிரேக்கத் தத்துவத்தின் சில அம்சங்கள், மத்திய காலத்து ஐரோப்பாவுக்குப் பரவுவதற்கு அகஸ்டைனின் எழுத்துக்கள் ஒரு முக்கிய காரணமாக அமைந்தன. முக்கியமாக, புதிய பிளேட்டோனியக் கலவைக் கோட்பாடு, அகஸ்டைனின் முதிர் சிந்தனையை வெகுவாகக் கவர்ந்தது. அகஸ்டைன் வாயிலாக, அந்தக் கோட்பாடு மத்திய காலத்துக் கிறிஸ்துவச் சமயத் தத்துவத்தில் பெரும் மாற்றத்தை உண்டாக்கியது. "ஆகவே நான் நானாக இருப்பதாகக் கருதுகிறேன்" என்ற டேக்கார்டேயின் புகழ்பெற்ற கூற்றின் பின்னணியாக அகஸ்டைன் தமது கொள்கையைக் கூறினார் என்பது குறிப்பிடத்தக்கது. அதை அவர் வேறு சொற்களில் இயம்பினார்.

ஐரோப்பாவில் அறிவு விளக்கம் குன்றியிருந்த கி.பி.395க்கும் கி.பி.10ஆம் நூற்றாண்டு முடிவுக்கும் இடைப்பட்ட "இருண்ட

## உலகை வியக்க வைத்தவர்கள்

காலம்" தொடங்குவதற்கு முன்பிருந்த கடைசித் தலைசிறந்த கிறிஸ்துவ இறைமையியலறிஞர் அகஸ்டைன் ஆவார்.

அவர் திருச்சபைக்கு விட்டுச் சென்ற கோட்பாடுதான் ஏறத்தாழ மத்திய காலம் முழுவதிலும் தொடர்ந்து நீடித்தது. லத்தீன் திருச்சபைத் தந்தையர்களில் உயர் தனிச் சிறப்புடையவராக விளங்கியவர் அகஸ்டைன் ஆவார். அவருடைய எழுத்துக்களை திருச்சபைக் குருமார்கள் விரிவாகப் படித்தார்கள். வீடுபேறு, பாலுணர்வு, பழம் பாவம் ஆகியவை குறித்து அவர் தெரிவித்த கருத்துக்களும் இதற்கு நிகரான செல்வாக்கைப் பெற்றன. புனித தாமஸ் அக்குவினாஸ் போன்ற பிற்காலக் கத்தோலிக்க இறைமையியலறிஞர்கள் பலரும், லூதர், கால்வின் போன்ற புரோட்டஸ்டான்டுத் தலைவர்களும் அகஸ்டைனின் செல்வாக்குக்கு வெகுவாக ஆட்பட்டனர்.

அகஸ்டைன் கி.பி. 430ஆம் ஆண்டில் தமது 76ஆம் வயதில் காலமானார். சிதைந்து வந்த ரோமப் பேரரசு மீது படையெடுத்து அழித்த "வண்டல்கள்" என்ற முரட்டு ஜெர்மானிய இனத்தவர் அப்போது ஹிப்போ நகரை முற்றுகையிட்டிருந்தனர். சில மாதங்களுக்குப் பிறகு அவர்கள் அந்த நகரைக் கைப்பற்றி அதன் பெரும்பகுதியை எரியூட்டி அழித்தனர். ஆயினும், அகஸ்டைனின் நூலகமும், அவர் பணியாற்றிய தேவாலயமும் அழியாமல் தப்பின.

**அடுத்த வாரம்**
**லாவோ - தசு**
**வியக்க வைப்பார்....**

# காதிலை பூ கந்தசாமி



### நோட்டீஸ் பலகை

**நான் சொல்வ தெல்லாம் பொய்.**
**பொய்யைத் தவிர**
**வேறொன்றுமில்லை**
***-காதில பூ கந்தசாமி-***

வணக்கமுங்கோ!

**தீ**பாவளி, நோன்பு எண்டு கொஞ்சப் பேருக்குக் கொண்டாட்டமாக இருந்தாலும், பலருக்கு உந்தக் கொண்டாட்டங்களை மகிழ்ச்சியோடு கொண்டாட முடியாமல் இருந்திருக்கும்.

உந்தக் கொண்டாட்டங்கள் போலதான் சமாதான முயற்சிகளும் இருக்கு. ஜெனிவாவில பேச்சுவார்த்தைக்கு இரண்டு தரப்பும் ஓம்பட்டிருக்கினம் எண்டதுக்காக சந்தோசப்படவும் முடியல்லை. துக்கப்படவும் முடியல்லை. ஏன் எண்டு தெரியும் தானே? ஜெனிவாவுக்குப் போவம். எதையெண்டாலும் கதைப்பம் எண்டு அரசாங்கம் சொல்லுது. அதேபோல, பேச்சுக்குப் போவம். சர்வதேச சமூகம் கேட்டுக்கொண்டதற்காகப் பேசுவம். ஆனால் எங்கட நிலைப்பாட்டில மாற்றமில்லை எண்டு புலிகளும் சொல்லினம். உப்பிடி ரெண்டு தரப்பும் சொல்லுறதைப் பார்த்தால், ரெண்டு தரப்புக்கும் சர்வதேசத்தின்ர அழுத்தம்தான் பேச்சுக்குப் போக வேண்டியதாக இருக்குது. மற்றப்படிக்கு இவை கொஞ்சமும் விரும்பவில்லை எண்ட மாதிரி இருக்குது.

நாட்டில தாக்குதல் நடந்து கொண்டே இருக்கும். அதேவேளையில ஜெனிவாவில பேச்சும் நடக்கும். உந்தத் தாக்குதல்கள் பேச்சுவார்த்தையைப் பாதிக்காது எண்டும் சொல்லினம். ரெண்டு தரப்பும் தற்காப்புத் தாக்குதலைத்தான் நடத்தினம் எண்டு சொல்லினம். அப்புடியெண்டால் ஹபரணவிலையும், காலியிலையும் என்னத்தைக் காப்பாத்த தாக்குதல் நடத்திச்சினமெண்டதை இதுவரைக்கும் யாரும் சொல்லயில்லை. நடக்கப்போகிற ஜெனிவாப் பேச்சு பிரயோசனமானதாகக் கடைசி வரையும் இருக்கப் போறதில்லை எண்டது மட்டும் உறுதியாத் தெரிஞ்சிட்டுது. தெரிஞ்சே நடக்கப் போகிற ஒரு தவறுக்காகவும் காத்திருக்க வேண்டிய கூடாத காலம் நமக்கு எண்டு நம்மை நாமே திட்டிக் கொண்டு இருக்க வேண்டியதாகிப் போயிட்டுது எண்டதை நினைக்க நினைக்க எரிச்சல் தானுங்கோ வருகுது.

மக்களை நிம்மதியாக வாழ விட மாட்டம் எண்டு கொஞ்சப் பேர் கொடுக்குக் கட்டிக் கொண்டு திரியினம். தங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லையெண்ட மாதிரியும், மக்களுக்குத்தான் பிரச்சினையெண்ட மாதிரியும் திரியினம். சத்தியாக்கிரகப் போராட்டம் எண்டினம். அது ஒண்டும் புதிய போராட்டம் இல்லையுங்கோ. அதுக்குப் பிறகு வந்த ஆயுதப் போராட்டமும் முப்பது வருஷமாக எதையும் சாதிக்காமல் ஆரம்பிச்ச புள்ளியிலயே இருக்குது.

இது ஒரு பக்கமிருக்க, வடக்கு - கிழக்குப் பிரச்சினை மறுபக்கம் பூதமாக கிளம்பியிருக்கு. சட்டம் இரண்டு மாகாணங்களாகப் பிரிச்சிருக்குது. எண்டாலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் எண்டும் தீர்ப்பு சொல்லப் பட்டிருக்குது.

முன்னாள் ஜனாதிபதியின்ர காதைப் பிடிச்சு ராஜிவ் காந்தி ஒப்பந்தம் செய்யேக்கையும், வடக்கு, கிழக்கை இணைக்கேக்கையும் அது பிழை - துரோகம் எண்டு சொன்னவை இண்டைக்குப் பிரிச்சுப்போட்டியள்; இணையுங்கோ எண்டினம். உந்தக் கோமாளிகளையும், தமிழ்த் துரோகிகளையும் பார்த்து ஒண்டு கேக்க விருப்பமாக இருக்குங்கோ... ராஜிவ் காந்தி எழுத்தில இணைச்ச வடக்கு, கிழக்கு இணைப்பை சட்ட அங்கீகாரமாக்குவதற்கும் அதை நடைமுறைப்படுத்துவதற்கும் கடந்த 18 வருஷத்தில உவை யாராவது ஏதாவது நடவடிக்கை எடுத்திச்சினமோ? யாரையும் பார்த்துக் கதைச்சிச்சினமோ? இல்லையே. எப்பவுமே நன்மையானதை கை நழுவிப்போகச் செய்வதும், பிறகு அதையே சொல்லி உணர்ச்சி பொங்கக் கத்திக் கூத்தாடுவதும் தானே கடந்த 3 தசாப்தகாலமாக நடந்து கொண்டிருக்குது. பாராளுமன்றத்தில சபாநாயகரை தடுத்தாப்போலையும், கறுப்புப் பட்டி கட்டினாப்போலையும் இவையால எதையுங்கோ சாதிக்க முடிஞ்சிருக்குது. கொஞ்ச நாளைக்கு முன்னம் ஏ-ஒன்பது பாதையைத் திறக்கவேணும், படுகொலைகள் நிறுத்தப்பட வேணும் எண்டு கூச்சல் போட்டிச்சினம். அது நடக்கயில்லை எண்டவுடன இப்போது வடக்கு - கிழக்குப் பிரச்சினையைத் தூக்கியிருக்கினம். உப்பிடியே காலத்துக்குக் காலம் புதுசு புதுசா பிரச்சினைகளைப் பிடிச்சுக் கொண்டு, அதற்குக் கூச்சல் போட்டுக்கொண்டு திரியிறது - பிறகு உணர்ச்சி பொங்கி அறிக்கை வெளியிடுறது எண்டு நடக்கிற கூத்துக்களைப் பார்த்தால் நாட்டில நடக்கிற எதுவும் நல்லதாகத் தெரியல்லையுங்கோ...

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

**(26.10.2006 தொடங்கி 01.11.2006 வரை)**

## சோதிட மாமணி தில்லை

### இந்த வாரக் கிரக நிலை

துலாம் - சூரியன். புதன். செவ்வாய். விருச்சிகம் - வியாழன். கும்பம் - இராகு, கார்க்கடகம் - சனி. சிங்கம் - கேது. கன்னி - வெள்ளி.

சந்திரன் விருச்சிகம், தனு, மகரம், கும்பம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் உயர்ச்சி, பண வரவு, மனக்குறை நீங்கும், பெரியோர் சகாயம், தூர இடப் ணம், உயர்ந்தோர் நட்பு, குடும்பப் பொறுப்பு, த்தியோக மகிழ்ச்சி, மாணவர் கல்விக் குழப்பம், பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் றைந்த இலாபம்.
ஷ்ட நாள்:- செவ்வாய்.
ஷ்ட இலக்கம்:- 04.

**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.)
தொழில் நன்மை, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், உயர்ந்த வாழ்க்கை, அந்நியர் சகாயம், குடும்ப நன்மை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.)
தொழில் பகை, வீண் துயர், செலவு மிகுதி, உறவினர் உதவி, பெரியோர் சகாயம், பயனுள்ள செயல், குடும்பக் கவலை, பிள்ளைகளால் தொல்லை, உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், புதிய கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.)
தொழில் பயம், மறைமுக எதிர்ப்பு, வீண் செலவு, வெளியார் தொல்லை, தேக சுகக் கஷ்டம், குடும்ப மேன்மை, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.)
தொழில் மேன்மை, காரியானுகூலம், பெரியோர் சகாயம், பிரயாண மிகுதி, உறவினர் உபத்திரவம், சுபகாரியத் தடை, குடும்ப நன்மை, உத்தியோக உயர்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் கடின உழைப்பு.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 05.**

**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.)
தொழில் பகை, வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி, தூர இடப் பயணம், பொருள் இழப்பு, குடும்ப மேன்மை, மனக்குறை நீங்கும், உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட/நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**இடபம் :**
(கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.)
ில் பகை, காரியக் கேடு, அந்நியர் சகவாசம், திகம், பிரயாண மிகுதி, பொருட் செலவு, த் தொல்லை, மாணவர் கல்வி மேன்மை, கல்வி முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் ம இலாபம்.
ஷ்ட நாள்:- வெள்ளி.
ஷ்ட இலக்கம்:- 06.

**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.)
தொழில் கஷ்டம், பண வரவு தடை, மனப் பயம், பெரியோர் நட்பு, வெளியிட வாழ்க்கை, குடும்பச் சிக்கல், பணக் கஷ்டம், உத்தியோகத் தொல்லை, மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**


**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.)
தொழில் உயர்ச்சி, காரியானு கூலம், பண வரவு, உயர்ந்தோர் நட்பு, மனக் குறையதிகம், பொருள் இழப்பு, குடும்ப உயர்ச்சி, உத்தியோக நன்மை, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**விருச்சிகம் :**
(விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.)
தொழில் மந்தம், பணச் செலவு, மனப்பயம், நண்பர்கள் உதவி, தூர இடப் பயணம், குடும்பக் கஷ்டம், உறவினர் உபத்திரவம், உத்தியோகக் கலக்கம், மேலதிகாரிகள் பகை, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 01.**

**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.)
தொழில் நன்மை, காரியானுகூலம், வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி, கௌரவம், குடும்ப மேன்மை, உத்தியோகத் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**மீனம் :**
(பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.)
தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி, பொருள் வரவு, உயர்ந்தோர் நட்பு, தேகசுகப் பயம், வீண் செலவு, குடும்பச் சிறப்பு, உத்தியோக மாற்றம், மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், வெளியிடக் கல்வி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

# மக்கள் வங்கியின் இரட்டை சேமிப்பு மாதத்தில்




## "வகை தொகையின்றி" சேமிப்போம்

நீங்கள் உழைக்கும் பணத்தை மக்கள் வங்கியின் இரட்டை சேமிப்பு மாதத்தில் உங்களின் எதிர்கால நன்மை கருதி சேமிப்போம். அக் 01 - நவ. 30 வரை மக்கள் வங்கியின் பிரதிநிதிகள் உங்கள இல்லம் தேடி வருவார்கள். ஒவ்வொரு சேமிப்பு கணக்கு வைப்பாளருக்கும் ரூபா 10 இலட்சம் வரையிலான தனிநபர் தீடீர் விபத்துக் காப்புறுதி*. இசுறு உதான, சிசு உதான, YES, ஜனஜய, வனிதா வாசனா, மற்றும் பரிணத எனும் வேண்டியதொரு சேமிப்பு கணக்கினை இம்மாதத்தில் ஆரம்பிக்க முடியும். மென்மேலும் சேமிக்க மக்கள் வங்கியுடன் இணையுங்கள்.

*நிபந்தனைகளுக்குட்பட்டது

மக்கள் வங்கியின்
இரட்டை சேமிப்பு மாதம்
உலக சிக்கனத்தினம் நினைவாக

SLIM - ACNielsen
Power of People
Banking & Financial Service Brand of the Year 2006

**2006 அக்டோபர் 1 - நவம்பர் 30**

மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி

www.peoplesbank.lk